# அம்பிகையின் அழகு அலை

## ஸௌந்தர்யலஹரி



டாக்டர் நஜன்

**பிரதிபா பிரசுரம்**

# நஜன் அளிக்கும் பரிசு நூல்கள்

| | | |
|---|---|---|
| ☐ சிறுவர் சிறுமியர்களுக்கு | | |
| 'தெய்வம் பேசுகிறது' | ரூ. | 6 00 |
| ☐ மாணவர்களுக்கு | | |
| 'உலக மகா புருஷர்கள்' | ரூ. | 10 00 |
| ☐ பிரும்மசாரிகளுக்கு | | |
| 'தேவி காயத்திரி' | ரூ | 15 00 |
| ☐ ஆசார்யரைத் தேடுபவர்களுக்கு | | |
| 'குரு தத்துவம்' | ரூ | 15 00 |
| ☐ ஸ்ரீவித்யா உபாசகர்களுக்கு | | |
| 'ஆத்ம குஹா சிதானந்த மயம்' | ரூ. | 6 00 |
| ☐ திருமணத் தம்பதிகளுக்கு | | |
| 'கல்யாணமே வைபோகமே' | ரூ | 10 00 |
| ☐ கர்ப்பிணிகளுக்கு | | |
| 'கர்ப்ப ரக்ஷை' | ரூ. | 10 00 |
| ☐ பூவுடனும் பொட்டுடனும் விளங்கும் பெண்மணிகளுக்கு | | |
| 'தீர்க்க சுமங்கலி பவ' | ரூ. | 8 00 |
| ☐ தாய்மார்களுக்கு | | |
| 'குழந்தையும் தெய்வமும்' | ரூ. | 8 00 |
| ☐ ஐஸ்வர்யம் வேண்டுபவர்களுக்கு | | |
| 'லக்ஷ்மி கடாக்ஷம்' | ரூ. | 15 00 |
| ☐ கல்வி, வித்யைகள் பெற விரும்புபவர்களுக்கு | | |
| 'வாக்தேவி வைபவம்' | ரூ. | 10 00 |


# அம்பிகையின்
# அழகு அலை
## (ஸௌந்தர்ய லஹரி)

ஆசிரியர் :

ஸ்ரீ வித்யா ஞானபாஸ்கரா

"டாக்டர் நஜன்"

(எஸ். நடராஜன்)



பிரதிபா பிரசுரம்

ESTD : நவராத்திரி 1973

பிரசுரித்தவர் :

என். லலிதாம்பாள்

பிரதிபா பிரசுரம்

*"லலிதாலயா"*

39, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

PHONE 74720

உரிமையுள்ளது)

விலை. ரூ 35-00

அம்பிகையின் அழகு அலை
(AMBIGAIYIN ALAGU ALAI)
முதற் பதிப்பு செப்டம்பர், 1992.
விலை ரூ 35-00



பிரதிபா பிரசுரம்
99

---

## பொருளடக்கம்

1. சௌந்தர்ய லஹரி
2. பரமசிவனையே இயங்க வைக்கும் பராசக்தி
3. அம்பிகையின் அழகு அலை
4. வாக்பவ கூடம்
5. காமராஜ கூடம்
6. சக்தி கூடம்
7. அம்பிகையின் ஸூக்ஷ்ம ரூபம்
8. பரரூபம் குண்டலினி ரூபம்
9. அகண்டமான தேவியின் ஸ்வரூபம்
10. ஸௌந்தர்ய லஹரி ஸ்தோத்திரங்கள்—100

---

சிந்தாமணி அச்சகம், மயிலாப்பூர், சென்னை 600 004.

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி**
**ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள்**
**ஸ்ரீமடம் காஞ்சீபுரம்.**



முகாம் :
காஞ்சிபுரம்

தேதி :
10-8-92

# ஸ்ரீமுகம்

ஸ்ரீமத் பகவத் பாதாளால் கைலாயத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள மந்த்ரமயமான நூல் ஸௌந்தர்ய லஹரீ.

இதனை "அழகு அலை" என்ற தலைப்பில் மயிலை பிரதிபா பிரசுரத்தினர் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்கிறோம்.

ஸம்ஸ்க்ருதம் அறியாதவர்களுக்கான இத்தகைய பிரசுரங்களை மேலும் மேலும் வெளியிட்டு உதவுவதற்கான வாய்ப்பு அன்னையின் இன்னருளால் இவர்களுக்குக் கிட்டுவதாக.

நாராயண ஸ்ம்ருதி

# பதிப்பாசிரியர் நன்றி

அம்பிகையின் அழகு அலை (சௌந்தர்ய லஹரி) என்கிற இந்த நூல் பிரதிபா பிரசுரத்தின் 99-ஆவது வெளியீடாகும்.

ஒன்பது என்கிற எண் சக்தியினைக் குறிக்கும். எனவே 99-ஆவது எண் பொருத்தமே,

ஸ்ரீமுகம் அருளிய ஜகத்குரு காஞ்சி ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளுக்கு எங்கள் நமஸ்காரம். இந் நூலை அச்சடித்துத் தந்த சிந்தாமணி அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

இந்த அருமையான புத்தகத்திற்கு நிதி உதவி உதவி அளிக்க முன்வந்த திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அட்டைப் படத்தையும், சௌந்தர்ய லஹரி 100 யந்திரங்களையும் அழகுற தயாரித்து தத்த ஸ்ரீ சுபா அவர்களுக்கும் எங்கள் நன்றி.

மயிலாப்பூர்
1—9—92

என். லலிதாம்பாள்

---

# சமர்ப்பணம்

ஸ்ரீசங்கர பகவத்பூஜ்ய பாதாள் அருளிய

ஸௌந்தர்ய லஹரீ என்னும் நூலை

பக்தியுடன் அவரது பாத கமலங்களுக்கு

சமர்ப்பிக்கிறோம்.

—பிரதிபா பிரசுரத்தினர்

# ஆசிரியரின் முகவுரை

இவ்வாழ்க்கையில் ஏற்படும் எல்லாவிதக் கஷ்டங்களும் நீங்க சஞ்சீவினியாக விளங்குவது ஆதிசங்கரரின் சௌந்தர்ய லகரி.

அம்பிகையின் அழகாநுபவத்தில் ஈடுபட்டு அவளுடைய பிரதாபங்களை வருணிப்பது இந்த அரிய நூல்.

ஆதிசங்கரரை பராசக்தியின் தனிப்பெரும் அடியார் என்றே கூற வேண்டும். சக்தி என்பது பிரும்ம வடிவின் மெய்ப்பாங்கே என்பதை ஆதிசங்கரர் உலகுக்கு உணர்த்தினர்.

லலிதையின் பெருமைகளைப் போற்றும் லலிதா திரிசதி என்ற 300 நாமாக்களுக்கு அவர் அளித்துள்ள பாஷ்யமும் அற்புதக் காவியத் துதியாகிய சௌந்தர்ய லகரியும் லலிதா வழிபாடு பிரசித்தி பெற அடிகோலியது எனலாம். சௌந்தரிய லகரியில் சக்தியின் இயல்பு, ஒப்புயர்வற்ற செயல்கள், ஆறு சக்ர சக்திகள் மூலம் நாயகன் சிவபெருமானோடு சமயா சக்தியாக அபேத நிலையில் ஒருமித்து பிரபஞ்ச செயல்களை நிறைவேற்றும் அற்புதம் ஆகியவை வருணிக்கப்படுகிறது.

முதல் பகுதி ஒன்று முதல் 41 சுலோகங்கள் அம்பிகையின் பிரபாவ ஆனந்தத்தில் லயிக்கும் சுலோகங்கள் ஆனதால் ஆனந்த லகரி என்றும் பிற்பகுதி 42 முதல் 100 வரை அம்பிகையின் அழகை வர்ணிப்பதால் சௌந்தர்ய லகரி என்றும் பேர் பெறுகிறது.

எல்லாம் மாயை என்று சொல்கிற அத்வைதம் நானாவிதமான அழகுகளை ரசிக்கத் தெரியாத வறட்டு சித்தாந்தம் என்று நினைப்பவர்கள் உண்டு. ஆனால் அத்வைத ஸ்தாபகரான ஆதி சங்கரர் அழகுகளை ரசித்ததுபோல வேறு யாராவது ரசித்திருக்க முடியுமா என்பது ஐயமே.

மாயை என்பது தேவி மாயைதனை மாய்த்து மோக்ஷம் தருபவளும் அவளே. இவ்வுலகில் காணப்படுகிற உலகாயத அழகுகள் அவள் மாயையேதான். ஆனால் அவளே மோக்ஷ இன்பத்தைத் தரும் அழகுகளின் நிலைக்களனாக எழிற்பொழிலாக சொந்தர்ய லகரியாக விளங்குபவள்,

அத்வைத ஞானி சங்கரர் அழகின் கவியாகி அவளைப் போற்றி செய்த சௌந்தரிய லகரி (அழகின் அலைகள்) ஒரு சிறந்த பக்தி காவியமே எனலாம்.

ஆதிசங்கரர் இந்த ஸ்தோத்திரத்தை எப்போதெல்லாம் அவருக்கு அம்பிகை மீது அருள் நாட்டம் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் ஒவ்வொரு சுலோகமாகச் செய்திருக்க வேண்டும். அதனால்தான் பாதம் பின் கண் பின். அம்பிகையின் இதர விஷயங்கள் இப்படி எல்லாம் மாறி அமைந்துள்ளன.

அன்பர்கள் கோர்வையாக அம்பிகையின் ரூப லாவண்யத்தை அனுபவித்து ஆனந்தித்து அவள் பிரபாவங்களை அறிய வேண்டும் என்பதற்காக ஒரு 'புரட்டு' வேலையை அம்பிகை என் மூளையில் அப்படி உதிக்கச் செய்ததால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சாதாரண பேச்சு வழக்கில் 'அவன் என்ன புரட்டிவிட்டானே' என்பார்கள், இந்தப் புரட்டு வேலையால்தான் கவிகளின் பாடல்கள் சோபிக்கின்றன. சங்கீத வளர்ச்சயே இந்த புரட்டில்தான் இருக்கிறது. இருப்பது ஏழு ஸ்வரங்கள்தான். அதை எப்படி எப்படி எல்லாமோ புரட்டினால் பல இனிமையான ராகங்கள் கிடைக்கின்றன.

இந்த நூலில் அம்பிகையின் ஸ்தூல சூக்ஷ்ம பர ரூபங்களாகப் பிரித்துள்ளேன். ஸ்தூலத்தில் வாக்பவ காமராஜ சக்தி கூடங்களில் அம்பிகையின் அங்க அவய லாவண்யங்கள் வந்துவிடுகின்றன.

ஸூக்ஷ்மத்தில் அவளது மந்திரம், யந்திரம், அவள் அந்தக கரணங்களாகவும் மனமாகவும் இருப்பதெல்லாம் வந்துவிடுகிறது.

பரத்தில் குண்டலினி ரூபமாக அவள் விளங்குவதும் ஆருதார விஷயங்களும் வந்துவிடுகின்றன.

அம்பிகையின் உபாசனா பகுதியில் ஸ்தோத்திரம், ஜபம், மானஸீக பூஜை எல்லாம் வந்துவிடுன்றன.

இப்படி கோர்வைப்படுத்தி இருப்பதால் சௌந்தர்ய லகரியை இன்னும் நன்ருகப் படித்து அனுபவிக்க முடியும், அபிராமி பட்டர், வீரை கவிராயர் முதயவர்கள் அனுபவ வாக்குகளும் அங்கங்கே மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன.

ஜப முறை, ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் யந்திரங்கள், பீஜாக்ஷரங்கள் — இவை ஜபிப்பதால் கிடைக்கும் பலன்கள், விசேஷ நைவேத்யங்கள் எல்லாம் கூறப்பட்டுள்ளன. அம்பிகையின் அருள் கடாக்ஷத்தைப்பெற வேண்டியவர்கள் இவை மூலம் பயன்பெற வேண்டுமானல் அவர்கள் ஸ்ரீவித்யா உபாசகர்களாக அவசிய இருக்க வேண்டும்.

இத்தகைய உபாசகர்கள் இதன் மூலம் நன்மை பெற வேண்டும் என்பதற்காகவே இந்த சக்கிரங்களின் தத்துவார்த்தங்கள் விளக்கப்பட்டுமுள்ளன.

நஜன்
(எஸ். நடராஜன்)



திருமலை—திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதி தேவஸ்தான
நிர்வாகத்தினரிடமிருந்து உதவி பெற்று

**அம்பிகையின் அழகு அலை**

என்ற இந்நூல் வெளியிடப்படுகிறது.
தேவஸ்தான நிர்வாகத்திற்கு
எங்கள் உளம் கனிந்த நன்றி.

பிரதிபா பிரசுரம்
சென்னை-600 004.

THIS BOOK IS PRINTED WITH THE FINANCIAL
ASSISTANCE OF
THE THIRUMALA TIRUPATHI DEVASTHANAMS
TIRUPATHI, UNDER THEIR SCHEME
AID TO PUBLISH RELIGOUS BOOKS

ஸ்ரீ:

# மீனாக்ஷி பஞ்சரத்னம்

உத்யத்பானுஸஹஸ்ரகோடிஸத்ருசாம் கேயூரஹாரோஜ்ஜ்வலாம்
பிம்போஷ்டீம் ஸ்மிததந்தபங்க்திருசிராம்
பீதாம்பராலாங்க்ருதாம் ।
விஷ்ணுப்ரஹ்மஸுரேந்த்ரஸேவிதபதாம் தத்த்வஸ்ரூபாம்
சிவாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம்நிதிம்
॥ 1 ॥

முக்தாஹாரலஸத்கிரீடருசிராம் பூர்ணேந்துவக்த்ரப்ரபாம்
சிஞ்சந்நூபுரகிங்கிணீ மணிதராம் பத்மப்ரபாபாஸுராம் ।
ஸர்வாபீஷ்டபலப்ரதாம் கிரிஸுதாம் வாணீரமாஸேவிதாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம் நிதிம்
॥ 2 ॥

ஸ்ரீவித்யாம் சிவவாமபாகநிலயாம் ஹ்ரீங்காரமந்த்ரோஜ்
ஜ்வலாம்
ஸ்ரீசக்ராங்கிதபிந்துமத்யவஸ்திம் ஸ்ரீமத்ஸபாநாயகீம் ।
ஸ்ரீமத்ஷண்முகவிக்னராஜஜனனீம் ஸ்ரீமஜ்ஜகந்மோஹிநீம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம்நிதிம்
॥ 3 ॥

ஸ்ரீமத்ஸுந்தரநாயகீம் பயஹாரம் ஞானப்ரதாம் நிர்மலாம்
ச்யாமாபாம் கமலாஸநார்சிதபதாம் நாராயணஸ்யாநுஜாம் ।
வீணாவேணு ம்ருதங்கவாத்யரஸிகாம நாநாவிதாடம்பிகாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம்நிதிம்
॥ 4 ॥

நாநாயோகிமுநீந்த்ரஹ்ருந்நிவஸதீம் நாநார்த்தஸித்திப்ரதாம்
நாநாபுஷ்பவிராஜிதாங்க்ரியுகலாம் நாராயணேநார்சிதாம் ।
நாதப்ரஹ்மமயீம் பராத்பரதராம் நாநார்த்ததாத்வாத்மிகாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்யவாராம்நிதிம்
॥ 5 ॥

இதி மீனாக்ஷீபஞ்சரத்னம் ஸம்பூரணம்.

ஷோட சார்ணம் மஹா மந்திரம்
மந்திர ராஜோத்த மோத்தமம்
ஸஹஸ்ரம் ப்ரஜபேத் வித்வான்
த்ரிசதம் சதமே வ வா
ஆசந்திர தாரகஸ்தாயீ நிஜவம்ச
யசோஜ்வல :
சர்வ சௌபாக்ய சுந்தர :

—ருத்ர யாமளம்

தேவியின் புகழைப் பாடும் நூல்கள் அநேகம். அதில் தலை சிறந்து விளங்குகிறது "சௌந்தர்ய லகரி". மிகச் சிறந்த மந்திர சாஸ்திரம். இந்த நூல் சாக்த ஆகமத்தின் சமயாசார □ தத்துவத்தின் சாரம்.

ஸ்தோத்திரம் செய்வதில் சில லக்ஷணங்கள் உண்டு.

நமஸ்காரஸ் கதா சீச்ச
ஸித்தாந்தோக்தி: பராக்ரம:
விபூதி: ப்ரார்த்தனு சேதி
ஷட்விதம் ஸ்தோத்திர லக்ஷணம் ||

நமஸ்கரித்தல். ஆசி கூறுதல், சித்தாந்தத்தை எடுத்துரைத்தல், பராக்கிரமத்தை புகழ்தல், பெருமைகளை விளக்குதல், பிரார்த்தனை செய்தல் என்று ஆறு வகை. இந்த எல்லா லக்ஷணங்களும் சௌந்தர்ய லகரியில் இருக்கின்றன.

'நமோவாகம்' என ஆரம்பிக்கும் 85-வது சுலோகத்தில் நம: என்று உபாசித்தால் ஆசைகள் எல்லாம் உபாஸகனை நமஸ்கரிக்கும் என்ற உபநிஷத் உண்மை விளக்கப்படுகிறது.

திருவடியைக் கூறும் சுலோகங்கள் அம்பிகையை வாழ்த்துகின்றன. அம்பிகையை நாம் வாழ்த்துவதா என்று கேட்கலாம். பெரியாழ்வார் பெருமாளுக்கு பல்லாண்டு பாட வில்லையா.

---

□சமயாசாரம்—மானஸீக பூஜை, குண்டலினி யோகம் விவரங்களுக்கு பிரதிபாவின் இவ்விரு புத்தகங்களையும் பார்க்கவும்.

மாணிக்கவாசகர் தன் சிவ புராணத்தில் சிவபெருமானை வாழ்க வெல்க என்று வாழ்த்தவில்லையா? அன்புடன் கலந்த பக்தி அம்பிகையை வாழ்த்தும் உரிமையைத் தருகிறது.

'நீயே திரிமூர்த்திகளுக்கும் அப்பாற்பட்டவள். உலக மாயை நீயே' போன்ற விஷயங்கள் கண்ட சுலோகங்கள் சித்தாந்தத்தை விளக்குகின்றன.

'மகாவிஷ்ணு உன்னை பூஜித்து உலகை ரக்ஷிக்கிறார், மன்மதன் உன் அருளால் இந்த ஜகத்தையே ஆட்டி வைக்கிறான்' முதலிய கருத்துள்ள சுலோகங்கள் தேவியின் பராக்கிரமத்தை வருணிக்கின்றன. பெருமைகளைப் புகழ்கின்றன.

என்னைக் காப்பாற்று எனக்கு உன் கருணை என்றும் கிடைக்கட்டும் முதலிய கருத்துள்ள சுலோகங்கள் பிரார்த்தனை களாகும்.

யாரையுமே முகஸ்துதி செய்தால் அவர்கள் அலட்சியமாக இருக்க மாட்டார்கள். தேவியின் கவனத்தைக் கவர அவளை ஸ்துதிப்பது தவிர வேறு வழியில்லை. எந்தப் பெண்ணிடமும் அவள் அழகை வருணித்தால் 'இவன் என்னதான் சொல்கிறான்' என்றறிய செவி சாய்ப்பாள். அம்பிகையைத் தாயாக எண்ணி அணுகுகிறோம். நம் குழந்தை என்ன சொல்கிறது என்பதை அவள் அவசியம் கேட்டே தீருவாள்.

இந்த நூலிலுள்ள சுலோகங்களைச் சொல்லி அம்பிகையை சந்தோஷிக்கச் செய்பவர்களுக்கு சகல சௌபாக்கியமும் கிடைக்கும். ரோக நிவ்ருத்தியிலோ, துர்த் தேவதைகளை விரட்டுவதிலோ, சத்ருக்களை ஜயிப்பதிலோ, கல்வி பயிற்சியை அடைவதிலோ, சகலமான அரிஷ்டத்தையும் பரிகாரம் செய்து கொள்வதிலோ, சகலமான இஷ்டங்களை அடைவதிலோ இந்நூலைப் போல ஒவ்வொரு கிருகத்திலும் இருந்தாக வேண்டிய □'சிந்தாமணி' வேறு ஒன்றும் இல்லை.

## நூலாசிரியர்

இந்நூலை இயற்றியவர் ஆதிசங்கரர். அம்பிகை பற்றி 'சௌந்தர்ய லகரி' என்ற 100 சுலோகங்களையும் 'சிவானந்த

---

□சிந்தாமணி-தேவலோகத்திலுள்ள இம்மணி விரும்பியதை எல்லாம் தரக் கூடியது. அம்பிகையின் 'ஹ்ரீம்' மந்திரம் சிந்தாமணி பீஜம் எனப்படும். சிந்தாமணி மந்திர விவரம் பிரதிபாவின் 'வாக்தேவி வைபவம்' புத்தகத்தில் காணவும்.

லகரி' என்று சிவனைப் பற்றி 100 சுலோகங்களையும் அவர் இயற்றியிருக்கிறார்.

சக்தி தத்துவத்தையும் சிவ தத்துவத்தையும் எப்போதும் பிரிக்க முடியாது என்பதால் செளந்தர்ய லகரியில் சிவ தத்வம் அந்தரங்கமாக இருந்து வருகிறது. அதே மாதிரி சிவ தத்வத்தை பிரதானமாக வைத்து மதுரமாகவும் சுலலிதமாகவும் சிவானந்த லகரியை ஆதிசங்கரர் இயற்றியிருக்கிறார்.

ஆதிசங்கரரின் இஷ்ட தேவதை அம்பிகையே. இவர் சன்யாஸ ஆசிரமத்தை மேற்கொண்டு சத்குருவைத் தேடப் போகும் சமயத்தில் தன் தாயாரை சமாதானம் செய்யும் போது,

அஹ்ந்யம்ப ராத்ரிஸமயே ஸமயாந்தரேவா
ஸச் சிந்த்ய ஸ்வவ்சகா வசகாதவா மாம்
யேஷ்யாமி தத்ர ஸமயம் ஸகலம் விஹயாயா ||
அஸ்மாரி மாதாபி ச ஸாபுபோஷ
ததார யா துக்கமஸோட பூரி ||

பத்து மாதம் கர்ப்பத்தில் வைத்து பெற்று பின் வளர்த்து எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்த என் அம்மாவை என் சந்நியாச ஆசிரமத்திலும் என்னால் ஸ்மரணம் செய்ய முடியாது என்கிறார் ஆதிசங்கரர். தேகத்தையொட்டி ஏற்பட்ட மாதா விடமே இவ்வளவு பக்தி பகவத் பாதாளுக்கு இருந்து வரும் போது

யாதேவி சர்வ பூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா

என்பதை அனுசரித்து மாதாவின் ஸ்தானத்திலிருக்கும் அம்பிகையை வழிபட பிறருக்கு உதவவே இவர் செளந்தர்ய லகரியை செய்திருக்கிறார்.

ஆதிசங்கரர் கைலாசம் சென்று திரும்பியபோது பஞ்ச லிங்கங்களுடன் இதைக் கொண்டு வந்தார் என்றும் அவருக்குக் கிடைத்தது 'ஆனந்த லகரி' என்ற பெயர் பெற்ற 41 சுலோகங்கள் ☐ என்றும் பிற்பகுதியிலுள்ள 59 சுலோகங்களை சங்கரர் தாமே எழுதி பூர்த்தி செய்தார் என்றும் கூறப்படுகிறது.

செளந்தர்ய லகரி முதலில் சிவபிரானால் கைலையில் எழுதப் பட்டதென்றும் கூறப்படுகிறது. ஆதிசங்கரர் சிவபெருமானின்

☐ இந்த 41 சுலோகங்களும் திருச்சி மலைக்கோட்டை அம்பிகை சந்நிதியில் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

அவதாரம்.☐ ஆகவே இதுபற்றி சர்ச்சைக்கு இடமில்லை. மூல காவியத்தின் பெரும் பகுதி ஆதிசங்கரராலேயே இயற்றப்பட்ட தென்பதற்கு ஐயமில்லை.

## வியாக்யானங்கள்

இந்த நூலுக்கு முப்பத்தாறு வியாக்யானங்கள் உள்ளன. லக்ஷ்மீதரர் வியாக்யானம்தான் மிக பிரசித்தமானது.

ஒரிஸாவில் (கலிங்கம்) பிரதாப ருத்ர தேவன் என்கிற அரசன் சபையில் 500 ஆண்டுகளுக்கு முன் இவர் வித்வானாக இருந்ததாகத் தெரிகிறது.

கைவல்யாசிரமர் என்பவர் 'சௌபாக்ய வர்த்தினி' என்ற உரையையும், காமேஸ்வர ஸூரி என்பவர் 'அருணா மோதினி' என்ற உரையையும் எழுதியிருக்கிறார்கள். சமீப காலத்தில் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளும் 'அண்ணா' சுப்பிரமணிய அய்யர் அவர்களும் உரை எழுதியுள்ளனர்.

## தமிழில் சௌந்தர்ய லகரி

ஆதிசங்கரர் இயற்றிய சௌந்தர்ய லகரியை தமிழ் மொழியில் செறிந்த பொருளோடு சிறந்த பாடல்களாக கவிஞர் நெல்லூர் வீரை கவிராஜர் 500 ஆண்டுகளுக்கு முன் இயற்றியிருக்கிறார்.

இவர் தமிழ் வெண்பாவில் அரிச்சந்திர புராணத்தை இயற்றியவர். காளி தேவியை உபாசனா தெய்வமாகக் கொண்டவர். ஆனந்த சௌந்தர்ய லகிரியை பலவித சந்தப் பாடல்களுடன் 104 செய்யுட்களாக இயற்றியவர். சக்தி உபாசகரான கவியாதலால் தேவியைப் பாடும்போது கவிதா ஸந்ததம் இவரை ஆட்கொண்டு நடத்துகிறது.

கைலை மலையில் எழுதப்பட்டிருந்ததைப் பெயர்த்து புஷ்பதத்தர் என்ற முனிவர் மேருமலையில் எழுதினார் என்றும் அதனைக் கற்றறிந்த கௌடபாதர் தன் சிஷ்யனான ஆதிசங்கரருக்குச் சொல்ல சங்கரர் அந்நூலை இயற்றினார் என்றும் கவிராஜர் தன் பாயிரத்தில் கூறியிருக்கிறார்.

---

☐ ஆதிசங்கரர் சிவபெருமானின் அவதாரம் பற்றிய விளக்கங்களை பிரதிபா 'குரு தத்துவத்தில்' காணலாம்.

## தத்துவ விளக்கம்

ஆதிசங்கரர் இந்த 100 சுலோகங்களில் ஸ்ரீவித்யா உபாசனு கிரமங்களை வெளியிட்டிருக்கிருர். ஒவ்வொரு சுலோகமும் அம்பிகையின் பெருமையை பலவாருக வருணித்து அவளை பூஜிக்க வேண்டிய கிரமங்களை விளக்கி அதனுல் கிடைக்கக் கூடிய பலன்களையும் விளக்குகிறது.

இப்பலன்களை அடைய சில பிரயோகங்கள் கூறப்பட்டிருக் கின்றன. மகான்களிடம் ஸ்ரீவித்யா மந்தர உபதேசம் அல்லது தீக்ஷை பெற்றுக் கொண்டவர்களுக்கே சௌந்தர்ய லகரியில் சொல்லப் படுகிற பிரயோகத்தில் அதிகாரம் சித்திக்கும்.

சுலோக பாராயணத்திற்கு மந்திர தீக்ஷை வேண்டும் என்கிற அவசியமில்லை. பராசக்தியை மனதில் தியானம் செய்து கொண்டு பாராயணம் செய்யலாம்.

சௌந்தரிய லகரி என்ருல் அழகின் அலைப் பெருக்கு என்று கூறலாம்.

முதல் 41 சுலோகங்கள் தேவியின் இன்பப் பெருக்கைக் கூறு வதால் 'ஆனந்த லகரி' என்றும் பின் 59 சுலோகங்கள் தேவியின் எழிலை எடுத்துக் கூறுவதால் சௌந்தரிய லகரி யென்றும் கூறப் படுகிறது, பின் பகுதி பெயரே முழு நூலுக்கும் ஏற்பட்டு விட்டது.

ஒவ்வொரு சுலோகமும் அம்பிகையின் பீஜாக்ஷர அமைப் பாக விளங்குகிறது. முதல் 41 சுலோகங்கள் மந்திர யந்திர பிரஸ்தார விளக்கங்களாக உள்ளன.

42 முதல் 100 வரையுள்ள சுலோகங்கள் தேன் கலந்த பால்போல் உள்ளன.

## பிரும்ம வித்தையும் ஸ்ரீவித்தையும்

உபநிஷதங்கள் பெரும்பாலும் நிர்க்குண பிரும்மத்தைப் பற்றியே பேசுகின்றன. அதனுல் பிரும்ம வித்யை எனப்படு கிறது. அதை அறிந்து அனுபவத்தில் கொண்டுவர வழிகாட்டுவது ஸ்ரீவித்யை.

பிரும்மம் பிந்துவால் குறிக்கப்படும். சக்தி முக்கோணத் தால் குறிக்கப்படும். மூன்று குணங்கள் மூன்று மூர்த்திகள் மூன்று அவஸ்தைகள்—இப்படி மும்மூன்ருக உள்ளது எல்லாம்

க்தி ஸ்வரூபம் □ அதனால்தான் திரிபுரசுந்தரி எனப்படுகிறாள்.

சக்தி வழிபாட்டில் மந்திரம் யந்திரம் தந்திரம் என்ற மூன்றையும் சக்தி முக்கோணத்தின் மூன்று மூலைகளாகக் கருதலாம்.

மந்திரத்தில் உள்ள கருத்தை உருவகப்படுத்திக் காட்டுவது யந்திரம். அதில் சித்தத்தை நிறுத்துவதற்கு கையாளப்படும் வெளிப்படையான (பாஹ்ய) பூஜை1, மானஸீக (ஆந்த்ர) பூஜை2, குண்டலினி யோகம்3 மற்ற சாதனம் எல்லாம் தந்திரத்தில் அடங்கும்.

ஸ்ரீவித்யையில் மிக முக்கியமான பஞ்சதஸாக்ஷரியும் ஷோடஸியும். 32-வது சுலோகத்தில் (சிவ: சக்தி: காம:) இது குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீசக்ரம்பற்றி 11-வது சுலோகத்தில் (சதுர்பி: ஸ்ரீகண்டை) விவரிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான தந்திரம் ஐக்யானு ஸந்தானம். இது 34-வது சுலோகத்தில் குறிப்பிடப் படுகிறது.

மந்திர ஸித்திக்கு யந்திரமும் தந்திரமும் பக்கத் துணைகள்.

தேவியை வழிபட எல்லா வர்ணத்தாருக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை உண்டு.

## விநாயகர் வணக்கம்

மொழிந்த மறை நூலியற்று முகபடாம்
அணிந்து முது ஞானதானம்
பொழிந்து தனது இணைமணி என்று இருசுடரும்
புனை களிற்றை போற்றல் செய்வாம்
வழிந்து பெரும்புனல் பரந்து வடவரையில்
உலகேழும் ஏழும் ஒக்க
அழிந்திடினும் அழியாத அபிராமி
பாடல் வளம் அளிக்க அன்றே.

---

□ 'பிரதிபா'வின் ''திரிபுரா ரகசியம்'' பார்க்கவும்.

1. பிரதிபாவின் 'தேவி நவாவரண பூஜை'யில் பார்க்கவும்.
2. ,, ''தேவி மானஸ பூஜை''யில் காணவும்.
3. ,, ''குண்டலினி சக்தி'' பார்க்கவும்.

யானை முகத்திற்கு முகபடாம் என்று ஒரு அணி அணிவிப்பார்கள். இது அழகுக்காக என்பது ஒருபுறம் இருக்கட்டும். மிகவும் முக்கியமான ஞானக்கண் உள்ள இடம் புருவ நடுவில். யானையின் மஸ்தகம் மிகவும் மங்களமான வஸ்துக்களில் ஒன்று. எப்படி அருமையான கண்கள் இமைகளால் பாதுகாக்கப்படுகிறதோ அதுபோல இந்த அருமையான ஞான ஸ்தானம் வேதங்களால் ஆன முகபடாமினுல் மறைத்துப் பாதுகாக்கப்படுகிறதாம். உலகங்கள் பதினுன்கும் பிரளயத்தினுல் மூழ்கினுலும் மறையாத புகழையுடைய அம்பிகையின் புகழைப் பாட இக்கவி விநாயகரின் அருளைக் கோருகிருர்.

தமிழ் சௌந்தரிய லஹரியை இயற்றிய கவிராஜர் தமிழ் நூல்களிலுள்ள மரபுக்கு ஏற்ப விநாயகர் வணக்கத்துடன் தன் நூலை ஆரம்பிக்கிருர். இம்மாதிரி விநாயகர் வணக்கம் எதுவும் சமஸ்கிருத சௌந்தர்ய லஹரியில் காணேமே என்றும் இது ஏன் என்றும் சந்தேகம் சிலருக்குத் தோன்றலாம்.

சமஸ்கிருத நூல்களிலாகட்டும் வேதங்களிலாகட்டும் 'ஓம்' என்ற பிரணவப் பொருளை முதலில் சொல்லிவிட்டு ஆரம்பிப்பதே மரபு. 'ஓம்' என்பது பிரும்மத்தைக் குறிக்கிறது. விநாயகர் அந்த பிரும்ம ஸ்வரூபியே. ஆகவே விநாயகருக்கு என்று தனி ஸ்துதி எதுவும் இயற்றப்படுவதில்லை.

தமிழில் விநாயகர் ஸ்துதி இருப்பது பண்டைக் காலத்திலிருந்து இருந்து வரும் மரபு. மற்றும் செய்யுள் இயற்றவோ அல்லது நூலை எழுதவோ ஆரம்பிக்கு முன் அந்தக் காரியம் விக்கினமின்றி நன்கு முடிய வேண்டும் என்று பிரார்த்தித்து விக்னம் தீர்க்கும் விநாயகர் பிரார்த்திக்கப் படுகிருர். இதன் தத்துவம் என்ன?

எதைச் செய்வதற்கும் முதலில் அதற்கான தகுதி இருக்க வேண்டும், நூல்கள் எழுதுவதென்ருல் பல புத்தகங்களைப் படித்து விஷயத்தைக் கிரஹித்து எடுத்து விளக்கும் ஆற்றல் வேண்டும். தச்சு வேலை செய்வதென்ருல் அதற்கான கருவிகளைக் கையாளும் ஆற்றல் வேண்டும். இதெல்லாம் சிறப்புத் தகுதிகள். இவைகளும் திறமையாக விளங்க ஆத்மகுணங்கள் என்கிற தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

பக்தி பொறுமை, கருணை, அஹிம்ஸை, தாராள மனம் இவை எல்லாம் இருந்தால்தான் எதுவும் வெற்றி பெறும். இந்த ஆத்மகுணங்களுக்கு இருப்பிடமாக இருப்பவர் விநாயகர்.

அவருடைய பெரு வயிறு திருப்தியைக் காட்டுகிறது. அவருடைய சிறு கண்கள் குற்றங்களைத் துருவிப் பார்க்காத தன்மையைக் காட்டுகிறது. அருகம் புல்லும் எருக்கப் பூவும் கொண்டு பூஜிப்பது அவருடைய எளிமையைக் காட்டுகிறது. காது பெரிதாக இருப்பது அதிகம் கேட்டு அவைகளிலுள்ள குணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துகிறது. 'நான்' என்ற அகங்காரம் நீங்க வேண்டும் என்பதை அங்குசம் காட்டுகிறது. செய்யும் காரியம் எதுவும் அரைகுறையாக இல்லாமல் பூரணமாக இருக்க வேண்டும் என்பதை அவர் கையிலுள்ள மோதகம் காட்டுகிறது. யானை புத்தி கூர்மைக்குப் பேர் போனது. அதன் அறிவு ஞானத்தின் அறிகுறி. இப்பேர்பட்ட தகுதிகள் ஒருவனுக்கு இருந்து விடுமானால் அவர் மேற்கொள்ளும் காரியம் ஒரு நாளும் வீணாகாது.

இங்கு கவி அபிராமியின் புகழ் என்று அபிராமியின் பெயரைக் குறிப்பிடுவதால் அபிராமி அந்தாதி விநாயகர் வணக்கத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியம்.

அபிராமி பட்டர் திருக்கடவூர் அபிராமி மீது அந்தாதி பாட தீர்மானித்தபோது அந்த ஊர் விநாயகரைத்தானே முதலில் பாடியிருக்க வேண்டும். தில்லை கற்பக விநாயகரைப் பாடுவானேன்?

அபிராமி பட்டர் எங்கும் நிறைந்துள்ள சக்தியைப் பாடவிருக்கிறார். அப்படி எங்கும் நிறைந்தவள் என்றபோது ஆகாசமும் ஆகாச க்ஷேத்திரமான சிதம்பரமும் மனதில் தோன்றுவது இயற்கைதானே.

சிதம்பரம் என்றதும் எல்லோருக்கும் நடராஜர் நினைவுதான் வரும். இவருடைய ஆட்டம் லயம் இல்லாவிட்டால் நடைபெறாது. அந்த லயத்தை உண்டாக்குகிறவள் அம்பிகைதானே!

## பூர்வ ஜன்ம புண்ணியம் வேண்டும்

அம்பிகையை வழிபடவும் அவளுடைய ஸ்ரீவித்யா உபாசனையை மேற்கொள்ளவும் பூர்வ புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று எடுத்த எடுப்பிலேயே முதல் சுலோகத்தில் ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார்.

அம்பிகையை வழிபட வேண்டும் என்ற ஆசை ஏற்படுவதற்கே பூர்வ புண்ணியம் வேண்டும் என்பதை அபிராமி பட்டரும் தன் அந்தாதி (12) யில் குறிப்பிடுகிறார்.

கண்ணியத்துன் புகழ் கற்பதுன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியதுன் இரு பாதாம்புயத்திற் பகல் இரவா
நண்ணியதுன்னை நயந்தோர் வையத்து நான் முன்செய்த
புண்ணியமே தென்னம்மே புவி ஏழையும் பூத்தவளே.

நான் கருதுவது உன் புகழைத்தான். கற்பது உன் திருப் பெயர்தான். கசிந்து பக்தி செய்வது உன் பாத கமலங்கள் தான். பகல் என்றும் இரவு என்றும் பாராமல் கூடியிருப்பது உன் அடியார்களோடுதான்.

இதற்கெல்லாம் காரணம் முன்னுளிலோ முற்பிறவியிலோ என்ன புண்ணியம் செய்தேனே அம்மா! என்ன அப்படி புண்ணியம் செய்தேன்? அதைத்தான் சொல்லேன் என்று பட்டர் அம்பிகையைக் கேட்கிறார்.

'தவமும் தவமுடையார்க்காகும்' என்பது வள்ளுவர் வாக்கு.

சௌந்தர்யம் என்றால் அழகு. அதை எப்படி ரசிக்க வேண்டும்?

## அழகானுபவம்

மேகலை பொங்க மதாசல
  கும்ப மெனுமுலை கண்டிடை சோரா
நீர்மாக வளங்கெழு
  நாணிறையம் புலி வாண்முக
 அம்புலி லேடார் போது
ஏக நெடுங்கழை பாசமோ டங்குச
  மேர்பெற வந்தருள்
காபாலி நீகமலந்திகழ்
  தான் வருடென்றரனீர்மையின்
விஞ்சிய கோமாதே.

தெய்வீக அழகை அனுபவிக்க ஒரு தனி பாக்கியம் வேண்டும். இந்த பாக்கியம் இருந்தால்தான் வாழ்க்கையில் மன நிறைவு பெற முடியும்.

இறைவனால் வழங்கப் பெற்று உள்ளத்தால் மனிதன் உணர்ந்து இன்பமுறும் சிறந்த பேறுதான் அழகானுபவம்.

குழந்தையின் மழலை சொல்லில் இன்பம் காண்பது அழகானுபவம்,

காதலியிடம் வனப்பின் கூறுகளைக் கண்டு சொக்குவதும் அழகானுபவம்தான்,

மலை, அருவி, மேகம், காடு, நதி இவைகளிலுள்ள வனப்பைக் கண்டு லயிப்பது அழகானுபவமே.

கலையழகுள்ள சிற்பம், சித்திரம் இவைகளை ரசிப்பதும் அழகானுபவம்.

இத்த அனுபவங்களை ரசிக்கும்போது மனம் இன்புறுகிறது. ஆனால் அந்த இன்பம் அந்த நிமிஷத்தோடு போய்விடுகிறது. நிலைத்து நிற்பதில்லை. ஆனால் மகான்கள், ஞானிகள் நிலைக்காமல் இருப்பதையும் நிலைக்கச் செய்து அதில் வெற்றியும் காண்கிறார்கள். இம்மையிலேயே மறுமைப் பயனுக்கும் வழி செய்து விடுகின்றனர். தெய்வீக அழகானுபவத்தால் சிற்றின்பமும் பேரின்பமாக உயர்த்தப்படுகிறது.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் (திரு. வி. க.) 'அழகே இறைவன்' 'அழகின் உடல் இயற்கை' என்கிறார். இந்த இயற்கை இறைவனின் கலைப் படைப்பு, இந்த இயற்கையில் மகான்கள் இறைவனைக் கண்டார்கள்.

''தீயினுள் தெறல் நீ
பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீயே
சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ
மறத்தினுள் மைந்து நீ
வேதத்து மறை நீ
பூதத்து முதலும் நீ
அனைத்தும் நீ
அனைத்தினுட் பொருளும் நீ.

எங்கும் எதிலும் அம்பிகையைக் காணும் மனப் பக்குவமே அழகானுபவம். சம்ஸ்கிருத சுலோகங்களாகட்டும் தமிழ்ப் பாட்டுகளாகட்டும், தெலுங்கு பத்யங்களாகட்டும் இவை எல்லாம் அம்பிகையை வழிபடும் கருவிகளே. அவை நேரிடையாகப் பயன் அளிக்காது. பயன் தருபவள் தேவி. அவளை நாடும் அன்பர்களின் மனப் பக்குவத்திற்கேற்ப அருள் பாலிக்கிறாள். ஆகவே முக்கியமாக வேண்டியது தேவியின் அருளைப் பெற வேண்டிய துடிப்புதான். எல்லாம் தேவியினுடையது. தன்னுடையது எதுவுமில்லை என்ற மனநிலை அடைந்துவிட்டால் பற்று விட்டுப் போகிறது.

இயற்கை அழகை உணர்ந்து அனுபவிக்கத் தெரிவதே தெய்வ வழிபாடுதான். குற்றம் போலும் குறை போலும் தோன்றுவதிலும் உண்மை அழகு இருக்கிறது. பிரகிருதி அழகை அனுபவிக்கத் தெரிந்தவர்களின் கண்களுக்கு அழகில்லாத வஸ்துக்களே இல்லை.

### தியானத்திற்கு ஆதாரம்

தியானத்திற்கு அழகு மிகவும் பயன்படுகிறது. அம்பிகை வழிபாடே அழகு அடிப்படையில் அமைந்திருக்கிறது.

ஒரு பொருள் அழகானதா என்று முடிவு கூற இந்திரியங்களுக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் உணர்ச்சி அளவில் அது நிற்கிறது. இதனாலேயே அழகிற்குத் தனிப் பெருமை. அழகிற்கு ஆகர்ஷிக்கும் சக்தி உண்டு, தன்னை உணர்ந்தவனை தன்னிடத்தில் மூழ்கச் செய்து மற்றவைகளை மறக்கச் செய்யும் ஆற்றல் உண்டு. அதனால் தெய்வத் தன்மை பெறுகிறது. அம்பிகை உபாசனைக்கு அடிப்படையாய் நிற்பது அழகு.

## பரமசிவனையே இயங்க வைக்கும் பராசக்தி 2

### சக்தி ஸ்துதி

1. ஓம் ஹ்ரீம் க்லீம் க்ளெம் கம்
கணபதியின் தாயே அம்பிகே போற்றி
2. ஓம் ஹ்ரீம் ஐயும் க்லியும் அவ்வும் சௌவும்
சரவணபவ சயிலொளிபவ திரிபுரபவ ஆறுமுகபவ
ஆறுபடை உடையோனின் ஆனந்தத் தாயே
அன்னையே போற்றி
3. என்றும் இணைபிரியாது
நிறைபாதி உடல்கொண்ட நமசிவய, யநமசிவ
வயநமசி, சிவயநம மசிவநயன எனும்
மூலமந்திர மாணிக்கம்
பரமசிவனின் பக்கத்தமர்ந்த அன்னையே போற்றி.

4. ஓம் நமோ நாராயணு என்ற
அஷ்டாக்ஷாரத்தை அங்கமாகவுடைய
அச்சுதனின் கூடப்பிறப்பே போற்றி.

5. வங் யங் நங் மங் சிங் என்று
ஓதுவார் தன்முன் என்றும் இருந்து அருளும்
ஆட்சிப் பொருளே அன்னேயே போற்றி,

6. ஓம் ஸ்ரீம் ஹரீம் க்லீம்
மாங்கல்ய லக்ஷ்மி மோகினி சம் மோகினி
சர்வரக்ஷாம்பிகையே தாயே போற்றி.

சக்தியாக விளங்கி உலகைப் படைத்து காத்து அழித்து சகலவற்றையும் செய்பவள் அம்பிகை. இவள் அருள் இன்றேல் எதுவுமே சாத்தியமில்லை. பரமசிவனேயே இயங்க வைப்பவள் இவள்.

சாந்த ஸ்வரூபியாகவும் வக்கிர ஸ்வரூபியாகவும் பல ரூபங்களில் தோன்றி அருள் பாலிப்பவள். மந்திரம், தந்திரம், யந்திரம், எல்லா ஸ்வரூபமாகவும் விளங்குபவள். நம் உடம்பில் குண்டலினி சக்தியாக விளங்குபவள். தேகமே தேவிமயம். பல இடங்களில் சக்தி பீடங்களில் விளங்கி அருள் பாலிக்கிருள்.

சம்பு என்கிற சிவபெருமானுக்கு சரீரியாக இருப்பவளே இவள்தான். அகண்ட ஸ்வரூபியாகிய இவளுக்கு சூரியனும் சந்திரனும் இரண்டு ஸ்தனங்களாக இருக்கின்றன. குழந்தைகளுக்கு ஸ்தன்ய பானம் செய்விப்பவள் அன்னை. சூரியன் சந்திரன் ஆகிய இரு ஸ்தனங்களைக் கொண்டு அவற்றின் அமுத தாரைகளால் இந்த லோகத்தை எல்லாம் அம்பிகை ரக்ஷிக்கிருள். இவற்றின் கிரணங்களால்தான் எல்லா ஜீவன்களும் ரக்ஷிக்கப்படுகின்றன.

பஞ்ச பூதங்களும் அவளே. அவைகளுக்கு மேற்பட்டுள்ள மனமும் அவளே, கொஞ்சம் கொஞ்சம் நம்மிடம் இருக்கும்படியான ஞானம், ஆனந்தம் இவற்றின் ஆதாரமான சிந்ஆனந்த ஸ்வருபமாக இருப்பவளும் அவளே. இவளே மாயையாக இருந்து நம்மை எல்லாம் ஆட்டி வைக்கிருள். இம்மாயையிலிருந்து நம்மை விடுவிக்கவும் அவளால்தான் முடியும்.

லக்ஷ்மியும் அவளே. சரஸ்வதியும் அவளே.

மனஸ்த்வம் வ்யோம ஸ்த்வம் மருதஸி மருத்ஸாரதி
ரஸித்வமாபாஸ்த்வம் பூமி ஸ்த்வயி பரிணதாயாம்
நஹிபரம் ||
—சௌந்தர்ய லஹரி

(வ்யோமம்-ஆகாசம்; மருத்-வாயு; மருத்ஸாரதி - அக்னி; ஆப-ஜலம்,

பிருத்வி, அப்பு, வாயு, தேயு, ஆகாசம், மனம் எல்லாம் அம்பிகையே. அவளில்லாமல் வேறு எதுவுமே இல்லை)

## அம்பிகையின் எளிமை

அருமை பெருமையுள்ள அம்பிகை எளிமையை ஏற்று பக்தனுக்கு அருள முற்படுகிறாள். இந்திராதி தேவர்களே இவள் இத்தகையவள் என்று அறியாது தடுமாறும்போது சாதாரணமான மனிதருக்கு அவள் அருள்கிறாள் என்றால் அவள் எளிமையையும் கருணையையும் என்னவென்று சொல்வது?

இம்மாதிரி நிலையைத்தான் மாணிக்கவாசகர் ''நாயினும் கடையேனை எனக்கா உன் அருள்?'' என்று வியந்து உருகி விடுகிறார்.

அம்பிகை உலகைப் படைத்து அதிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் வியாபித்திருக்கிறாள். உலகம் அழிந்த பின்பு அவளே மிஞ்சுகிறாள்.

நமக்குள்ள அற்ப ஞானத்தால் அவள் பெருமையை உணர முடியவில்லை. உபநிஷத்துக்களோ சுத்தமான சிந்தனையால் அறிய முடியும் என்கிறது.

இறைவன் சிந்தனையில் ஈடுபடுபவர்களுக்கு அவள் தானாகவே வந்து தன் பெருமையை வெளியிடுவதாக வேதம் கூறுகிறது.

அம்பிகை மிகப் பெரியவள்தான். யாருமே அவளை அண்ட முடியாது என்றிருந்தால் அவள் பெருமைக்கு அர்த்தமில்லை. எளிமை இருந்து அவளே இறங்கி வர வேண்டும். இந்த எளிமைக்கு உதவியாக இருப்பது சௌலப்யம், வாத்ஸல்யம் என்ற குணங்கள்.

நம்மிடமுள்ள குற்றங்குறைகள் நாம் செய்யும் பாபம் இவைகளை எல்லாம் கவனித்தால் அம்பிகை நாம் இருக்கும் திக்கு கூட நோக்கிப் பார்க்க மாட்டாள். ஆனால் நம் தோஷங்களைக் கவனிக்காமல் அவளே கதி என்றிருப்பவர்களுக்கு அவள் அருள் கிடைப்பதில்தான் அவளுடைய எளிமை இருக்கிறது.

## முதல் பகுதி

# ஆனந்த லஹரி

**கைலாச நூல் பிரிவு:** இப்பகுதி கைலாசத்திலிருந்து கிடைத்ததாகச் சொல்லப்படுவதால் கைலாசப் பிரிவு என்றே அழைக்கலாம். முதல் சுலோகமே 'சிவ' என்ற மங்களச் சொல்லுடன் ஆரம்பமாகிறது.

இப்பகுதியில் அம்பிகையின் பாததூளியின் மகிமை திருவடிபூஜையின் மகிமை பார்வை, வடிவம், ஸ்ரீசக்ரம் யோகாதாரத்தில் கூறப்படும் மூலாதாரம் முதலிய ஆறு சக்கரங்கள், இந்த ஆருதாரங்களில் அம்பிகை விளங்குவது, அருள் பெருகும் திருமேனி, அழகு வசீகரணம், விஷஜ்வரம் போக்கும் சக்தி, அம்பிகையின் தாடங்க மகிமை, தேவி மந்திரம் முதலியவை விளக்கப்பட்டுள்ளன.

### சகல தேவதைகளிலும் மேம்பட்டவள்

*சிவ : சக்த்யா யுக்தோ யதிபவதி*
*சக்த : ப்ரபவிதும்*
*நசேதேவம் தேவோ நகலு*
*குசல : ஸ்பந்திதுமபி ।*
*அதஸ்த்வா மாராத்யாம் ஹரிஹர*
*விரிஞ்சாதி பிரபி*
*ப்ரணந்தும் ஸ்தோதும்வா*
*கத மக்ருத புண்ய : ப்ரபவதி ||*

(பரமசிவனே சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் இவைகளைச் செய்ய உன் தயவை எதிர்பார்க்கிறார், உன்னுடன் கூடினவராக இல்லாதபோது அசைவதற்குக் கூட திறனில்லாமல் இருக்கிறார்,

அப்பேர்ப்பட்ட உன்னை நமஸ்காரம் செய்வதற்கோ வாக்கினால் துதிப்பதற்கோ எனக்கு என்ன தகுதி இருக்கிறது?)

ஆதிசங்கரரே தனக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்கிறார் என்றால் நமக்கு நினைத்துப் பார்க்கக் கூட தகுதி கிடையாது. ஆனால் அம்பிகையின் குழந்தை என்ற முறையில்

உரிமை இருக்கிறது. உரிமை உரிமை என்று சொல்லிக் கொண்டிருந்தால் உரிமை ஏற்பட்டு விடாது. அந்த உரிமையை ஏற்படுத்திக் கொள்ள சில தகுதிகள் கடமைகள் இவைகளையும் நாம் செய்தாக வேண்டும். அன்பு என்பதைக் கொண்டு பக்தி செலுத்தி அவளுடைய கருணையைப் பெற்றாக வேண்டும்,

எல்லா தேவதைகளையும்விட அம்பிகை மிகவும் மேலானவள் என்று ஆதிசங்கரர் அவளைப் புகழ்கிறார். அப்பேர்ப்பட்ட மேலான தெய்வத்தின் கவனத்தை எடுத்த எடுப்பிலே பெறுவது எப்படி என்ற தந்திரத்தையும் அவர் தெரிந்து வைத்திருக்கிறார், அம்பிகையின் கணவரான சிவனின் பெயரைக் கொண்டு 'சிவ' என்று இந்நூலையே ஆரம்பிக்கிறார்.

எப்படி சௌந்தர்ய லகரியை சிவனுடைய பெயரைக் கொண்டு ஆரம்பித்தாரோ அதே மாதிரி சிவானந்த லகரியை சக்தியைக் குறிக்கும் பெயரைக் கொண்டு ஆரம்பித்திருக்கிறார் ஆதிசங்கரர்.

'கலாப்யாம் சூடாலங்கிருத சசிகலாப்யாம்' என்று 'க'வில் தொடங்குகிறது சிவானந்த லகரி.

பஞ்சதசி மந்திரத்தில் முதல் அக்ஷரமான 'க'காரத்தை ஸ்வரூபமாக உடையவள் பரம மங்கள ஸ்வரூபிணியான அம்பிகையே பரம்பொருளாகிய பரமசிவனுக்கே ஜகத் காரணத்வம் அம்பிகையால் ஏற்படும்போது அவள் மேலான தெய்வம் என்பதற்கு வேறு ருசு என்ன வேண்டும்? எல்லா தேவதைகளாலும் பூஜிக்கத் தகுந்தவள் அம்பிகை.

வீரை கவிராஜர் பாடலைப் பார்ப்போம்.

சிவம் எனும் பொருளும் ஆதிசக்தியோடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்
இவள் பிரிந்திடின் இயங்குதற்கு அரிதரிது என மறை
இரைக்குமால்
நவபெரும் புவனம் எவ்வகைத் தொழில்
நடத்தி யாவரும் வழுத்துதாள்
அவனியின் கண் ஒரு தவம் இலார்
பணியல் ஆவதோ பரவல் ஆவதோ ?

எல்லாம் வல்ல ஒரு சக்தி உண்டு என்றால் அது பராசக்தி தான். எல்லா சக்தியும் ஒருவரிடம் என்றுமே இருக்காது. அப்படியே இருந்துவிட்டாலும் எபபோதும் இருக்காது.

அம்பிகை ஒருவளிடமே எல்லா சக்திகளும் ஏக காலத்திலும் என்றும் நிலைத்திருக்கும்.

இதைக் காரியாசான் என்ற புலவர் சிறுபஞ்சமூலம் என்ற நூலில் வால்குருவி அமைத்த கூட்டையும் கோற்புழு இழைத்த நூலையும் தேனீ அடையையும் பார்த்தால் மனிதனுடைய ஆற்றல் எவ்வளவு குறைவு என்பதைக் காணலாம் என்கிறார். அவ்விதமான கூட்டையோ அல்லது நூலையோ மனிதனால் தயாரிக்க முடியுமா ?

இது ஒவ்வொரு ஜீவனுக்குள்ள ஆற்றல். ஆற்றல் என்பது ஒரு பண்பு. இப்பண்பு ஒரு பொருள் பற்றி மட்டுமே இருக்கும். ஆகவே பெரியவர்கள் இந்த பேராற்றலை இறைவனுடன் இணைபிரியாத பெண் தத்துவமாக்கி அம்மையப்பனாக (சிவசக்தியாக) வணங்குகின்றனர்.

இந்தப் பேராற்றலை ஆங்கிலத்தில் ''ஆல்மைட்டி'' (ALL MIGHTY) என்கின்றனர். இந்தப் பேராற்றல் கடவுளிடம் மட்டுமே இருப்பதால் கடவுளையே ''ஆல்மைட்டி'' என்று அழைக்கின்றனர். இஸ்லாமும் இத்தப் பேராற்றலைத்தான் அல்லா ரஹீம் என்று அழைக்கிறது.

நம்மைப் பெற்ற தாய் தந்தையர்கள் இந்த உடலுக்குத் தான் பெற்றோர்கள். உயிருக்கு அல்ல,

சக்தியும் சிவமும் தம் மக்களோடு உடம்பு வழியாகத் தொடர்பு கொள்பவர் அல்ல. அறிவின் வழியே தொடர்பு கொள்பவர். அவர்கள் உயிர்களின் அறிவுக்கறிவாய் நின்று அதனைத் தோற்றுவித்து வளர்ப்பவர். ஆகவே சிவமும் சக்தியும் உயிருக்குத் தாய தந்தையாகின்றனர். இதனால் சக்தியும் சிவமும் உலகிற்கே தாய் தந்தையாகின்றனர்.

இறைவனது சக்தி தேவியாகத் தோன்றுவதன்றி பிறவாதும் பலவாகத் தோன்றுகிறது.

சக்திதான் நாதமாதி தானாகும் சிவமும் அந்தச்
சக்தி தானாதி யாகும்
தரும் வடிவானவெல்லாம் சக்தியும் சிவமும் ஆகும்
சக்திதான் சக்தனுக்கோர் சக்தியாம் சக்தன் வேண்டில்
எல்லாம் சக்திதானே.

—சிவஞான ஸித்தியார்

சிவம் என்பது யாதொரு செயலுமின்றி என்றும் இருப்பது. ஆதலின் சிவபெருமான் 'சத்' என்னும் இறைவனது சக்தி ஞான மாதலின் தேவியை 'சித்' என்னும் சத் சித்களால் தோன்றுவது இன்பமாதலின் மகவாகிய முருகனை ஆனந்தம் என்றும் கூறுவர். இம் மூவரும் பொருளால் ஒன்றே.

அம்பிகையான சக்தியின் மகிமை அளவிட முடியாதது. சக்தி அற்ற பொருள் வெறும் ஜடமாகிறது.

சிரத்தயா தேவோ தேவத்வம் அச்னுதே

—ச்ருதி

இதன் பொருள் சிரத்தை என்ற சக்தியால்தான் கடவுள் கடவுளாகிறார்.

சிவா விச்வஸ்ய பேஷஜீ
சிவா ருத்ரஸ்ய பேஷஜீ

என்கிறது ருத்ரப் பிரச்ன மந்திரம். சிவா என்ற பராசக்தியே உலகுக்கும் ருத்திரனுக்கும் பிணியை அகற்றும் மருத்துவர் என்று இதன் அர்த்தம்.

திருமூலர் தன் திருமந்திரத்தில் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகையில்

'சீருடையாள் பதம் சேர்ந்திருந்தேனே'
என்கிறார்.

மந்திர சாஸ்திரத்தில் இச்சக்திக்கு 96 பெயர்கள் உண்டு. சங்க காலத்தில் இவளைக் கொற்றவை என்றார்கள். பாலை நிலத்தின் காவல் தெய்வமாகக் கொண்டாடினார்கள்.

இச்சக்தியே யாவரிடமும் இச்சா ஞானக் கிரியா சக்தியாக விளங்குகிறாள்.

அலங்கார சாஸ்திரத்தில் சாந்தி ரஸம் நீங்கலாக எட்டு ரஸங்களை அம்பிகையிடம் காணலாம். பரமசிவடம் சிருங் காரத்தையும் மற்றவர்களிடம் பீபத்ஸம் என்ற வெறுப்பையும் கங்கையிடம் சக்கிரவர்த்தி என்ற காரணத்தினால் கோபத்தை யும் பரமேஸ்வர பிரபாவத்தைக் கேட்பதில் ஆச்சரியத்தையும் சிவன் அணியும் பாம்புகளிடம் பயத்தையும் தன் காந்தியால் வீரத்தையும் தோழியர்களுடன் பேசுவதில் ஹாஸ்யத்தையும் என்மேல் காட்டும் கடாக்ஷத்தில் கருணையையும் காட்டுகிறது பின் கண்ட சுலோகம்.

சிவே சிங்காராத்ரே ததிதரஜனே க்ருத்சபைரா
சரோஷா கங்காயாம் கிரிஷாசரிதே விஸ்மயவதி
ஹராஹிம்யோ பீதா ஸரஸிருஹ ஸௌபாக்ய ஜயினி
ஸகீசு ஸ்மேரா தே மயி ஜனனி த்ருஷ்டி : ஸகருணா ||
த்ருஷா த்ராகீயஸ்யா தரதலித நீலோத்பலருஷா
தவியாம்ஸம் தீனம் ஸநபய கருபயா மாமபி சிவே
அநேனாயம் தன்யோ பவதி ந ச தே ஹாநேரி யதா
வநே வா ஹம்ர்யே வா ஸமகர நிபாதோ ஹிமகர : ||

## பூர்வ ஜன்ம புண்ணியம் வேண்டும்

அக்ருதபுண்ய: சென்ற ஜன்மாக்களில் அளவிட முடியாத புண்யத்தைச் செய்யாதவன்.

ப்ரணந்தும், ஸ்தோதும் வா—நமஸ்காரம் செய்வதற்கோ வாக்கினால் ஸ்துதிப்பதற்கோ கொடுத்து வைக்காதவன்,

அம்பிகையை வழிபட வேண்டும் அவள் உபாசனையை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணமே பூர்வ ஜன்ம புண்ணியம் செய்திருந்தால்தான் ஏற்படும்.


யதி வா பச்சிமம் ஜன்ம யதிவா சங்கரஸ்வயம்
தேனைவ லப்யதே வித்யா ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ ||

அதுவும் பஞ்சதசி ஷோடசி உபதேசம் பெறுவதற்கு முன் ஜன்மத்தில் பெரும் புண்ணியம் செய்திருந்தாலே கிட்டும்.

பரமசிவனும் சக்தியுடன் சேர்ந்தால்தான் சிருஷ்டி முதலிய காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே ஹரிஹர பிரும்மன் பூஜிக்கும் உன்னை பூர்வஜன்ம புண்ய பலன் இல்லாதவன் எப்படி நமஸ்கரித்து ஸ்தோத்தரிக்க முடியும்? இதுவே முதல் சுலோகத்தின் கருத்து. "திரிமூர்த்திக்கும் மேம்பட்டவரான சதாசிவத்திற்கும் பராசக்திக்கும் பேதம் கிடையாது என்று ஏற்படுகிறது" கைவல்யாஸ்ரமீ என்ற யதீந்திரர் தன் வியாக்யானத்தில்.

இந்த முதல் சுலோகத்தில் ஸ்தோத்திரத்தின் சகல தாத்பர்யமும அடங்கியுள்ளது. இதன் விவரணமே பாக்கி எல்லா சுலோகங்களும் என்று கூறுவர்.

1




சர்வ விக்ன நாசம். நினைத்த படி சகல காரியங்களும் ஸித்திக்கும். இந்த சக்ரத்தை தங்க தகட்டில் எழுதி கிழக்குமுகமாக இருந்து செளந்தர்ய லஹரி முதல் சுலோகத்தை 12 நாள் தினம் 1000 தடவை ஜபிக்க வேண்டும்.

நைவேத்யம் ஹவிஸ்.

வரும் கஷ்டங்கள் எல்லாம் நான்கு பக்கங்களிலிருந்து அல்லது நான்கு மூலைகளிலிருந்துதான் வரும். இச்சதுர சக்கரமும் நான்கு மூலைமெட்டுகளும் அவை வர விடாமல் காப்பாக இருக்கின்றன.

க்லீம்—என்பது காமராஜ மந்திரம். அதிலேயே ஈம் என்ற அம்பிகையின் காமகலை மந்திரமும் ஐக்கியமாகியுள்ளது. அதாவது காமராஜரும் காமேஸ்வரியும் சிவசக்திகளாக ஐக்கியப் பட்டிருக்கின்றனர். எல்லா காரியங்களும் சிவசக்தி ஐக்கியத்தினால்தானே நடைபெறுகிறது.

# அம்பிகையின் அழகு 3

## ஸ்வரூப லாவண்யம்

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளை கொம்பு இருக்க
இறவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே

(அபிராமி அந்தாதி 71)

அன்னை அம்பிகையின் அழகே அலாதி. அதற்கு இணை எதைச் சொல்ல முடியும்? அப்போதைக்கப்போது கண்வழியாக அமுதமல்லவோ பாய்கிறது. உள்ளத்தே புகுந்து தித்திக்க வைக்கிறதே! என்ன அழகு! என்று அதிசயித்த அபிராமி பட்டர் 'அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி' என்கிறார். அவள் எழிலுக்கு யார் நிகர் உள்ளவர்?

''அழகு எனும் அழகும்
ஒரு அழகு பெற்றதே''

என்று சீதையின் எழிலை கம்பர் கொண்டாடுவது இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

வேதத்திலுள்ள கருத்துப்படி அழகுக்கும் பெண்மைக்கும் நெருங்கிய உறவு காணப்படுகிறது.

எந்தப் பெண் தெய்வத்தை வர்ணித்தாலும் வேதம் பெண்மைக்குள்ள இயற்கையான அழகையும் செயற்கையான அழகையும் வர்ணிக்கத் தவறுவதில்லை.

அடக்கம், தூய்மை, நேர்மை, கட்டமை, சந்துஷ்டி முதலியவைகளே பெண்களின் முக்கியமான குணங்கள்.

பெண்கள் இயற்கையிலேயே அழகுள்ளவர்கள். இது ஆண்களுக்கில்லாத தனிச் சிறப்பு. இந்த இயற்கையின் அழகை பெண்களுக்கு சோமன் கொடுத்தான் என்று ஒரு மந்திரம் இருக்கிறது. பெண்கள் சர்வாலங்ருத பூஷிதையாக இருக்க வேண்டும் என்கிறது வேதம். அலங்காரம் இல்லாத பெண்மை பெண்மையாகக் கருதப்படுவதில்லை. இவைகளைப் பின்பற்றியே அம்பிகை சகலாங்க சௌந்தர்யத்துடன் சர்வாபரண பூஷிதையாக வர்ணிக்கப் படுகிறாள்.

த்வதீயம் ஸௌந்தர்யம் துஹிந
    கிரிகந்யே துலயிதும்
கவீந்த்ரா : கல்பந்தே கதமபி
    விரிஞ்சி ப்ரப்ருதய : |
யதாலோ கௌத் ஸுக்யாத
    அமரலலநா யாந்தி மநஸா
தபோபி: துஷ்ப்ராமபி கிரிச
    ஸாயுஜ்ய பதவீம் : ||

(சௌ.ல: 12)

தேவியின் அழகை எப்படி வர்ணிப்பது? யாருமே வர்ணிக்க முடியாத சௌந்தர்யம். பரமசிவனுடைய கண்ணல்லாது வேறு கண்களால் பரதேவதையின் அழகை முழுதும் ரசிக்க இயலாது. ஆகவே அவள் அழகை ரசிக்க தேவ ஸ்திரீகள் சிவ சாயுஜ்ய பதவியை விரும்புகிறார்கள்.

சரஸ்வதி தேவியை நாக்கில் கொண்ட நான்முகனும் அவள் அழகை வருணிக்க இயலாது. ஊர்வசி, ரம்பை, மேனகை

முதலியவர்கள் அம்பிகையின் அழகில் லயப்பட்டு அவளை அடைய தவம் செய்கிறார்கள் என்கிறார் ஆதிசங்கரர், இவளை 'அதிசயமான வடிவுடையோய்' என்று (17வது பாடல்) குறிப்பிட்டது எவ்வளவு பொருத்தம்.


காமத்தை வெறுத்து யோகத்தில் இருந்தவரை போகத்தில் ஈடுபடுத்திய ஆற்றல் அம்பிகையின் அழகுக்கு உண்டு.

சௌந்தரிய லகரி தமிழ்ப் பாடல்:

ஆதி சுந்தரி வடிவினை அயன் முதல் புலவோர்
ஏது கண்டு அளவிடுவது தமை இகழ் இமையோர்
மாதர் இங்கு இவள் மகிழ்நரோடு
உறைகுவம் எனில் ஓர்
பேதை கொங்கைகள் பெறுகுவம்
என மறுகுவரால்

என்கிறது. தேவ கன்னிகைகள் அம்பிகையை ஆலிங்கனம் செய்ய தாங்களே சிவபெருமானாக விரும்புகின்றனராம்.

12




இந்த யந்திர வழிபாட்டின் பலன் ஊமையும் பேசுவான். ஒரு பாத்திரத்தில் ஜலம் வைத்து அதில் இந்த சக்கரத்தையும் எழுத்துக்களையும் எழுத வேண்டும். பூஜை முடிந்ததும் அதை குடிக்க வேண்டும். தினம் 1000 தடவை வீதம் 45 நாள் பாராயணம் நைவேத்யம் தேன்.

இந்த சக்ரத்தை ஸ்வர்ணத் தகடு அல்லது விபூதியில் எழுதி கிழக்கு முகமாக அமர்ந்து தினம் 1000 தடவை வீதம் 12 நாட்கள் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

பாயஸம் அன்னம் நைவேத்யம்.

அம்பிகை முக்கியமாக மூன்று வடிவில் இருக்கிறாள். ஸ்தூலம், ஸூக்ஷ்மம், பரம்.□

**ஸ்தூலம்:** நம்மைப் போலவே மனித ரூபம், விக்ரகம், யந்திரம், மேரு ஆகியவை,

---

□இந்த ரூப வடிவங்கள் பிரதிபாவின் ''ராஜராஜேஸ்வரி'' யில் காணலாம்.

**ஸூக்ஷ்மம் :** மந்திரம், குண்டலினி ஆகியவை.

**பரம் :** எல்லா பொருள்களிலும் ஷடங்க ரூபமாகவும் ஷோடச நித்யா ரூபமாகவும் விளங்குவது.

# ஸ்தூல வடிவில் அம்பிகை

*க்வணத் காஞ்சீதாமா கரிகலப*
*கும்பஸ்தாந நதா*
*பரிக்ஷீணா மத்யே பரிணத*
*சரச்சந்திர வதநா*
*தநுர்பாணாந் பாசம் ஸ்ருணிமபி*
*ததாநா கரதலை :*
*புரஸ்தா தஸ்தாம் ந புரமதிது:*
*ஆரஹோ புருஷிகா ||* (7)

*அம்பிகை நித்ய யுவதியாக இருக்கிறாள்,*

அம்பிகையின் ரூப வர்ணனை இது. அநேக வித ரத்னங்கள் இழைத்த தங்க ஒட்டியாணம் இடுப்பில் ஸ்தன பாரம் காரணமாக அம்பிகை சிறிது வளைந்து காணப்படுகிறாள். இடுப்பு என்பது இல்லையோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. நான்கு கைகளில் பாசம், அங்குசம், புஷ்பபாணம், கரும்புவில் இவைகளுடன் காணப்படுகிறாள்.

இவளுடைய அழகு சிவபெருமானுடைய பிரதாபத்தையும் அடக்கி விடுகிறது.

'அஹம்' என்பது தேவியின் ரூபம். பரமசிவனின் அகங்கா ரூபிணியாக அம்பிகை விளங்குகிறாள். இதையே ''அஹமித் யேவ விபாபயே பவானீம்'' என்று சொல்லப்படுகிறது. பவாநியை அஹம் என்கிற தத்துவமாக பாவிக்கிறேன் என்று இதற்கு அர்த்தம்.

இப்படி அம்பிகையை நினைத்து வழிபடுவதற்கு 'மஹா வித்யா' என்று பெயர். வசிஷ்டர், விஸ்வாமித்திரர், ஜனகர் முதலானவர்கள் இவ்வித்யையால் பேறு பெற்றவர்கள்.

வீரைக் கவிராயர் தன் தமிழ் சௌந்தர்ய லகரியில் குறிப் பிடுவதாவது :

மேகலை பொங்க மதாசல கும்ப மெனுமுலை கண்டு
இடை சோரா, நீர் மாகம் வளம் கெழும்
நாள் நிறை அம்புவில் ஏடார் போது
ஏக நெடுங்கழை பாசமொடு அங்குசம் ஏர்பெற வந்து
அருள் கர்பாலி
கமலம் திகழ் நாள் வருடு என்று அரன் நீர்மையின்
விஞ்சிய கோமாதே

என்கிறார்,

அம்பிகை கையில் உள்ள பாசம், அங்குசம், கரும்பு வில், மலர்கள்.

இந்த ஆயுதங்கள் கைகளில் இடமாறியுமிருக்கும். அதற்கான தனித்தனி தியான சுலோகங்கள் உண்டு.

இந்த ஆயுதங்களுக்கான தேவதைகள் :

பாசம்—சம்பத்கரி
அங்குசம்—அஸ்வாரூடா
கரும்புவில்—சியாமளா
பஞ்சபுஷ்ப பாணம்—வாராஹி.

கரும்பு வில்லையும் புஷ்பங்களையும் மன்மதன் உபயோகிக்கும் போது மோகம் ஏற்படுகிறது. அம்பிகை இதை மனுஷ்யர்களுக்கு காமத்தைக் கட்டுப்படுத்தவும் மனதைக் கட்டுப்படுத்தவும் வைத்திருக்கிறாள்.

மூககவி "உன் கடாக்ஷம் சிவனிடம் மோகத்தை உண்டு பண்ணுகிறது. மனிதர்களின் மோகத்தை அடக்கிவிடுகிறது" என்கிறார்.

அண்ட பிண்டங்களில் வெளிப்படும் தத்துவம் தேவியினுடையது.

7



இந்த யந்திர உபாசனை மூலம் ராஜ வசியம், சத்ரு வசியம் ஏற்படும். ஸ்வர்ணத் தகடு அல்லது விபூதியில் இதை எழுதி கிழக்கு முகமாக அமர்ந்து 12 நாட்கள் 1000 தடவை இந்த சுலோகத்தை பாராயணம் செய்ய வேண்டும்.

பாயஸம், அன்னம் நைவேத்யம்.

அம்பிகை ரூப லாவண்யத்தை வழிபடும் வித்யை மஹா வித்யா என்று சொல்லப்படும். வசிஷ்டர், விசுவாமித்திரர், ஜனகர், அச்வபதி, அஜாசத்ரு முதலிய மகான்கள் இதை பின் பற்றியே அவள் அருள் பெற்றவர்கள்.

சௌந்தர்ய லகரியில் 42-வது சுலோகம் (கதைர் மாணிக்யத்வம்) முதல் 91-வது (பதந்யாஸ க்ரீடா) வரை அம்பிகையின் ஸ்தூல ரூபம்தான் வர்ணிக்கப்படுகிறது. லலிதா சகஸ்ரநாமத்தில் 6-வது நாமா முதல் 63-வது நாமா முடிய இவ்வடிவத்தின் வருணனைதான்.

இறை வழிபாட்டில் தொடக்க நிலையிலுள்ளவர்களுக்கு இவ்வடிவ வழிபாடே தக்க பலன் தருவதாகும்.

இவ்வடிவத்தை இடைவிடாமல் தியானிப்பதன் மூலம் தன் மனமே இறைவனுக உருவாகிறது. தனக்குப் புதிதாக ஏற்படும் ஆற்றல்கள் நம் மனதில் ஏற்கனவே மறைந்திருந்த ஆற்றல்களே. இதை நாம் அறிவதில்லை.

பாதாதிகேசம் (கால் முதல் தலை வரை) கேசாதி பாதம் (தலை முதல் கால் வரை) வருணிப்பது என்று இரு சம்பிரதாயங்கள் உண்டு. இந்த இரண்டு சம்பிரதாயமும் அம்பிகை விஷயத்தில் கடைப்பிடிக்கப் படுகிறது.

## செக்கச் சிவந்த நிறம்

பிரம்மமாக செயலற்று இருந்த வஸ்துவுக்கு லோகானுக்கிரகம் என்ற* பரம கருணை உதிப்பதைதான் அம்பிகை என்கிறோம். சுத்த ஸ்படிகமான வர்ணம் கருணையின் காரணமாக சிவப்பு நிறத்தை அடைகிறது.

அன்பு, கருணை இவற்றை சிவப்பாகவே சொல்வது வழக்கம். ராகம் (அன்பு) அனுராகம் என்பதிலிருந்தே ரக்தம் (ரக்தம்) என்ற பதம் வந்தது. தமிழிலும் மனச் செம்மை, செவ்விய உள்ளம் என்றெல்லாம் சொல்கிறோம். இதுவே அம்பிகையின் செந்நிறம்.

அம்பிகை மென்மையான வாசனை பொருந்திய குங்குமக் கலவை போன்ற திருமேனி உடையவள். இதனையே மூகர், ''காஸ்மீரஸ்தபக கோமலாங்க லதா'' என்கிறார். குங்கும ராக சோணே என்கிறான் காளிதாசன்.

அம்பிகையின் திருமேனிக்கு பல உபமானங்களை அபிராமி பட்டர் அடுக்குகிறார். உதிக்கின்ற செங்கதிர் என்றார். இது

நேரம் ஆக ஆக வெப்பம் காட்டுகிறது. மாணிக்கம் என்றால் கடினமானது. மாதுளம் போது என்றால் சிறிது நேரத்தில் வாடி விடுகிறது. மின்னல்கொடி என்றால் ஒரு நொடியில் மறைந்து விடுகிறது. ஆனால் அம்பிகையின் செந்நிறம் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கிறது.


93-வது சுலோகத்தில் அராலா கேசேஷு என்று ஆரம்பமாகும் சுலோகத்தில் அம்பிகையின் தேக காந்தியை ஆதிசங்கரர் வர்ணிக்கும்போது ''ஜயதி கருணா காசிதருணா'' என்று குறிப்பிடுகிறார். அருணோதயப் பிரகாசம் எப்படி இருக்கிறதோ அப்படி தேக காந்தி இருக்கிறது என்கிறார். மூகசங்கரர் தன் ஆர்யா சதகத்தில் காஷ்மீரக் குங்குமப்பூ செம்பருத்திப்பூ ஆகியவற்றைப் போன்ற வர்ணத்தில் அம்பிகை தோன்றுகிறாள் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வர்ணமே இன்றி ஒரே ஸ்படிக நிறமாக இருக்கிற சிவன் கூட அம்பிகை சம்பந்தத்தால் ஒரே சிவப்பாகப் போய்விடுகிறார்,

ஆதிசங்கரர் தேவியை முகம் முதல் பாதாரவிந்தம் வரை வருணித்துவிட்டு இந்த சுலோகத்தில் அம்பிகையின் செந்நிறத்தைக் குறிப்பிடுகிறார்.

கதாஸ்தே மஞ்சக்வம் த்ருஹிண ஹரி ருத்ரேச்வர ப்ருத :
சிவ : ஸ்வச்ச ச்சாயா கடித கபட ப்ரச்சதபட :|
த்வதீயாநாம் பாஸாம் ப்ரதிபலந ராகாருணதயா
சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம் || 92 ||

இவ்வித நிலையில் தேவியை அறிய ஜிதேந்திரியர்களான அந்தர்முகர்களே அதிகாரிகளாவர்.



92

இந்த யந்திரத்தை ஸ்வர்ண தகட்டில் எழுதி 30 நாட்கள் தினம் 2000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். பலன் ராஜ்யராப்தி.

சித்ரான்னம்

## தேவியின் சிவப்பில் சிவன் ஐக்கியம்

சிவனும் சக்தியும் அர்த்தநாரீயாக இருந்தபோதும் பாதி வெளுப்பு பாதி சிவப்பு என்றில்லாமல் எல்லாம் ஒரே சிவப்பாக விளங்குவதால் தேவியே சிவனையும் தன்னிடம் ஐக்கியப்படுத்திக் கொண்டு விட்டாள்.

ஆகவே சக்தியை பூஜை செய்தாலே சிவ பூஜை செய்ததாக ஆகிறது. 'உத்தர கௌலம்' என்ற மதத்தில் தனியாக சிவ பூஜை இல்லை. சிவனுக்கு தனி வடிவமும் இல்லை. இதை விளக்கும் நீலகண்ட தீக்ஷிதர் சுலோகம்:

*நிர்மாஸி ஸம்ஹரஸி நிர்வஹஸி திரிலோகீம்*
*வ்ருத்தாந்த மேதமபி வேத்தி ந வா மஹேச :।*
*தஸ்யாத் மனஸ்து கிரிஜேதவ ஸாஹசார்யாஜ் ஜாத :*
*ச்ருதிஷ்வபி ஜகஜ் ஜனகத்வ வாத :॥*

—ஆனந்தசாகரஸ்தவம்

தேவி! நீயே மூவுலகையும் உண்டாக்குகிறாய். ஆள்கிறாய். அழிக்கிறாய். இந்த விவரம் கூட சிவபெருமான் அறிவாரோ மாட்டாரோ தெரியவில்லை. ஆனால் அவருடன் நீ கூடி இருப்பதால் சுருதி அவரை உலகிற்குப் பிதா என்கிறது.

சௌந்தர்ய லகரி 23-ம் ஸ்லோகம் (த்வயா ஹ்ருத்வா) இதைக் குறிப்பிடுகிறது.

தேவியின் காந்தியுள்ள செந்நிறத்தை தியானம் செய்வது "சமரிட தந்திரம்" எனப் பெயர், இதனை விளக்கும் சுலோகம்:

*தநுச்சாயா பிஸ்தே தருண தரணி ஸ்ரீஸரணிபி :*
*திவம் ஸர்வாம் உர்வீம் அருணிமநிமக்னும் ஸ்மரதி ய :।*
*பவந்த்யஸ்ய த்ரஸ்யத்வநஹரிண சாலீந் நயநா :*
*ஸஹோர்வச்யா வச்யா : கதிகதி ந கீர்வாண கணிகா :॥*


18

உன்னை தியானிப்பவருக்கு தேவலோக ஸ்திரீகளும் வசப்படுகிறார்கள். இந்த சுலோகம் ஸ்திரீ வச்யகரம் என்று சொல்லப்படும். இந்த பிரயோகத்தில் ஸ்ரீவித்யோபாஸகர்களுக்குத் தான் அதிகாரம் ஏற்படும், ஏனெனில் அவர்கள்தான் எல்லா ஸ்திரீகளையுமே பரதேவதையின் வடிவங்களாக பாவிப்பார்கள்.

கிரகஸ்தாஸ்ரமத்தின் பெருமை பிரகாசப்படுத்தப்படுகிறது இந்த சுலோகத்தில். பூர்வ கர்ம வசத்தால் பிரதிகூல

மான மனைவியை அடைந்தவர்கள் இதன் மூலம் அவளை அனுகூலமாக்கிக் கொள்ள முடியும். தேவியின் காந்தியுள்ள செந்நிறத்தை தியானம் செய்வது சமரிட தந்திரம் என்பர்.

18




ஸ்திரீ வசியம், வாக் பலிதம், சித்ர வித்யா சித்தி. ஸ்வர்ண தகடு அல்லது சந்தனம் குங்குமம் இவைகளில் எழுதி தினம 1000 தடவை வீதம் 45 நாளைக்கு இந்த சுலோகத்தை ஜபம் செய்ய வேண்டும்.

நைவேத்யம் பாயஸம், பால், தாம்பூலம்.

# வாக்பவ கூடம்□ 4

## முகம் என்ன சந்திர பிம்பமோ?

ஸ்திரீகள் முகத்தைப் பூர்ண சந்திரனுக்கு ஒப்பிடுவது வழக்கம். "பூர்ண சந்திரன் போன்ற முகத்தாள்" என்று கவிகள் வர்ணிப்பது வழக்கம்.

சாமுத்திரிகா லக்ஷணத்தில் உத்தம ஸ்திரீகளின் முகம் பூரண சந்திரன் போலும் தாமரையைப் போலும் இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

சந்திரனைக் காட்டிலும் தேவியின் முகாரவிந்தம் மேலானது. அவளுடைய புன்சிரிப்பு அதிமதுரமானது என்கிற சுலோகம்,

ஸ்மிதஜ்யோத்ஸ்நா ஜாலம் தவ வதநசந்த்ரஸ்ய பிபதாம்
சகோராணும் ஆஸீத் அதிரஸதயா சஞ்சுஜடிமா!
அதஸ்தே சீதாம்சோ : அம்ருதலஹரீம் ஆம்லருசய :
பிபந்தி ஸ்வச்சந்தம் நிசிநிசி ப்ருசம் காஞ்ஜிகதியா || 63 || ||

சந்திர கிரணத்தைப் பருகும் சகோரப் பக்ஷிகள் அம்பிகை முக சந்திர கிரணங்களைப் பருக அந்த மந்தஸ்மிதம் அவைகளை

□முகம் வாக்பவகூடம்.

திகட்டச் செய்து விட்டனவாம். சந்திரனைவிட அம்பிகை முகம் மேலானது என்று குறிப்பிடப் படுகிறது.

ராமனை வால்மீகி வர்ணிக்கையில் சந்திரனைக் காட்டிலும் அழகான முகம் என்று வருணிக்கிறார்.

அம்பிகை இமவானுக்கு உபதேசித்த தேவி கீதையில்

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பூதர ।
அப்யுத்தாநம தர்மஸ்ய ததா வேஷான் பிபர்ம்யஹம் ॥

என்று குறிப்பிடுகிறாள்.

லோகத்தில் தர்மம் குறைந்து அதர்மப் மேலிடும்போது நான் ராமன், கிருஷ்ணன் என்ற பெயரில் புருஷ வேஷம் போட்டு தர்மத்தை ரக்ஷிக்கிறேன் என்று கூறுகிறாள்.

ராமன் முகமும் தேவியின் முகமும் சந்திரனுக்கு மேலாக ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடியது.

இவ்விதம் தேவியின் முகச்சந்திரனை தியானம் செய்பவர்கள் ஜனன மரணம் இல்லாதவர்களாகிறார்கள்.

இம்மாதிரி அம்பிகையை தியானம் செய்தால் ஸர்வஜன சம்மோகனம் ஸித்தி கிடைக்கும். இதற்கென்று தனி யந்திரம் இல்லை. சுலோகத்தையே ஒரு தங்கப் பட்டையில் எழுதி பின்னர் இடுப்பில் தரித்துக் கொள்ளலாம்.

**63**

ச்லோகத்தை பட்டையான அரணில் எழுதி இடுப்பில் தரித்துக் கொள்ளவும்.

30 நாட்களுக்கு தினம் 30000 வீதம் இதைப் பாராயணம் செய்ய வேண்டும். தத்யான்னம், தேன், பழம், தேங்காய் நைவேத்யம்.

போஜ மகாராஜனுக்கு மனதில் ஒரு சந்தேகம். அதைப் பாதிக் கவிதையாக்கி அதைப் பூர்த்தி செய்ய மற்றொரு பாதிக் கவிதையை இயற்றித் தரும்படி கவிகளைக் கேட்டான்.

'குஸுமே குஸுமோத்பத்தி ச்ரூயத ந சத்ருச்யதே ।

இதுதான் அரசனின் பாதிக் கவிதை, இதன் அர்த்தம்: மலரில் மலர் மலர்வதாகச் சொல்லப்படுகிதே யன்றி பார்க்க முடியவில்லை, அரச சபையில் இருந்த பவபூதி, வரருசி போன்றவர்களாலும் அரசன் மனதிலுள்ள சந்தேகம் புரிய

வில்லை. அரசன் காளிதாசனைப் பார்த்தான். அம்பிகையின் அருள் பெற்ற காளிதாசன் அனாயாஸமாக

'பாலே தவமுகாம் போஜே த்ருஷ்டம் இந்தீவரத்வயம்' என்று பாடி கவிதையைப் பூர்த்தி செய்தான்.

இதன் அர்த்தம் முகமாகிய தாமரை மீது கண்களாகிய நீலோத்பல மலர் மலர்கிறதாம்,

## தவ வதன சௌந்தர்ய லகரி

சௌந்தர்ய லகரியில் ''சௌந்தர்ய லகரி'' என்ற வார்த்தை வரும் ஒரு சுலோகம் இருக்கிறது.

தனோது க்ஷேமம் நஸ்தவ வதநஸௌந்தர்யலஹரீ
ப்ரீவாஹ: ஸ்ரோத: ஸரணிரிவ ஸீமந்தஸரணி:|
வஹந்தீ ஸிந்தூரம் ப்ரபல கபரீபார திமிர
த்விஷாம் ப்ருந்தை: பந்தீக்ருதமிவ நவீனர்ககிரணம் || 44 ||

ந—நமக்கு. க்ஷேமம்—க்ஷேமத்தை. தநோது—அனுக்கிரகம் செய்யட்டும். எது?

''தவ வதன ஸௌந்தர்ய லஹரீ''

உன் முகத்திலுள்ள லாவண்ய பிரவாகம் நமக்கெல்லாம் க்ஷேமத்தை அனுக்கிரஹிக்கட்டும் என்று அம்பிகையிடம் ஆதி சங்கரர் பிரார்த்திக்கிறார்.

அம்பிகையினுடைய முகத்தின் சௌந்தர்ய லாவண்யமே பெரிய பிரவாகமாக, லஹரியாக இருக்கிறது.(லஹரி என்றாலும் பிரவாகம்தான்) நிறைந்து வருவதற்கு பிரவாகம் என்று பெயர். லஹரி என்றால் மேல் எழுந்து பொங்கி வர வேண்டும். அதனால்தான் பிரவாகம் என்ற அர்த்தத்தைத் தரும் பரீவாஹம் என்ற சொல்லும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஸ்புரத்கண்டாபோகப்ரதிபலித தாடங்கயுகலம்
சதுச்சக்ரம் மந்யே தவ முகமிதம் மன்மதரதம்|
யமாருஹ்ய த்ருஹ்யதி அவநிரதம் அர்கேந்துசரணம்
மஹாவீரோ மார: ப்ரமதபதயே ஸஜ்ஜிதவதே || 59 ||

இதில் தேவியின் முகம் மன்மதனின் ரதமோ என்று வர்ணிக்கப்படுகிறது. தேவியின் காதுகளிலுள்ள இரண்டு தாடகங்கள் கன்னப் பிரதேசத்தில் பிரதிபிம்பித்து நான்காகக் காட்சி அளிக்கின்றன. பரமேஸ்வரன் திரிபுர தகனத்தின்போது இரு சக்ர ரதத்தில்தான் போனார். இப்படி இந்த இரண்டு ரதங்களையும்

ஒப்பிடுவதன் நோக்கம் அம்பிகையின் கடாக்ஷத்தால் மன்மதன் பரமேஸ்வரனையும் விட சக்தியுள்ளவனாக ஆகிறான்.

இப்படி அம்பிகையை வழிபடுவதால் ஸ்திரீ வசியம் சர்வ ஜன தாஸ்ய பிரதம் ஏற்படும்.

வரீகர மூகம் ஒருவருக்குச் சிறந்த அதிர்ஷ்டம். மனதைப் பிரதிபலிக்கும் கண்ணாடியே முகம்.

தானே முக அலங்காரத்தைப் பார்த்து மகிழ கண்ணாடியைத் தவிர சிறந்த பொருள் இல்லை. காலையில் கண் விழித்தவுடன் கண்ணாடியைக் காண்பதும் சுபம் என்று கூறுவர்.

59

| |
|---|
| ഐം |
| ക്ലീം |
| സൗം |

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகடு அல்லது மஞ்சள் பொடியில் எழுதி 3 தினங்கள் தினம் 25000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

முத்ரான்னம், தேன் நைவேத்யம்.

## தேவியின் ஆபரணங்கள்

தெய்வ மூர்த்தங்களுக்கு சிறப்பாக 15 வகை ஆபரணங்கள் உரியவை என்று ''சில்ப ரத்தினம்'' என்ற நூல் கூறுகிறது. பல்வேறு உபநிஷத்துக்கள் இறைவனுக்கும் தேவிக்கும் உரிய சிறப்பான அணி வகைகளைக் குறிப்பிடுகின்றன, ரிக் வேதத்தில் 'காந்தி' என்ற சிறப்பான ஆபரணம் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன.

இந்த காந்தி தற்கால 'நெக்லெஸ்' போன்ற கழுத்தணி. இதை எல்லா தெய்வ மூர்த்தங்களிலும் காணலாம்.

**முடி ஆபரணம்:** இது மூன்று வகை. கிரீட மகுடம், கரந்த மகுடம், ஜடா மகுடம். கிரீட மகுடம் தாமரை மொட்டுபோல கூம்பியிருக்கும். இது மூர்த்தத்தின் தோற்றத்துக்குப் பொலிவு தரும், இதில் பூரித துங்க தாரம், அகரப்பட்டு, திரிலேதிகம், திருவோத்ரகம், பத்மம், குட்கல சிகாமணி, மௌலிபந்தம், வல்லி முக்தா ஹாரம் முதலிய அணிகள் பதிக்கப்பட்டிருக்கும்.

கேசபந்தம், தம்மிலா, சிரஸ் சக்கரம் ஆகிய தலை அணிகள், எல்லா தெய்வ மூர்த்தங்களுக்கும் பொதுவானவை.

அம்பிகைக்கு கரந்த மகுடம் இருக்கும். இது மிகவும் வசீகரமானது.

தேவியின் கேச அலங்காரத்திற்கு அணிவிக்கப்படும் அணி மூன்று. அவை சிரஸ் சக்கரம், தம்மிலா, கேச பந்தம்.

சிவபெருமானுக்கு சிறப்பான முடியாபரணம் ஜடாமகுடம். சில ஆகமங்களில் இதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. வகுட்டிலிருந்து நெற்றியில் தொங்குவது சூடாமணி. ராமாயண காலத்திலேயே இது சிறப்பாக விளங்கியுள்ளது. ராமர் சூடாமணியைத்தான் அனுமன் மூலம் சீதைக்குக் கொடுத்தனுப்புகிறார்.

குண்டலம் என்பது தமிழில் தோடு எனப்படுகிறது. இந்த குண்டலங்களை தாடங்கம் என்றும் சொல்வர், பல்வேறு குண்டலங்களைப் பற்றி மானஸாரம் என்ற நூல் விவரிக்கிறது.

சர்ப்ப குண்டலத்தை சிவபெருமானிடமும். பத்ர குண்டலத்தை விஷ்ணுவிடமும் காணலாம். அம்பிகை ஸ்ரீசக்ரத்தையே தாடகமாக அணிந்து கொண்டிருக்கிறாள்.

''தாரா காந்தி திரஸ்காரி நாஸாபரண பாசுரா'' என்பது அம்பிகைக்கு ஒரு நாமம், இந்த நாஸாபரணம் (மூக்குத்தி) சுமங்கலிகள் அணிந்தாக வேண்டிய மங்கல அணிகளில் ஒன்று.

கழுத்தணி ஆபரணங்களில் ஹாரம் முக்கியமானது. திருமாங்கல்யம் மார்பில் அணிவதில் முக்கியமானது.

திருக்கரங்களுக்கு வளையங்கள், அனந்தா மகர, கேயூரம் முதலியன முக்யமானவை.

உதர பத்தம் என்பது ஒட்டியாணம் போன்ற இடை அணி. மேகலை என்பதும் இடுப்பில் அணிவதே. மிக கவர்ச்சி மிக்க ஆபரணம்.

அம்பிகை கணுக் காலில் அணிவது பாத ஜலகம். இது சிலம்பு போன்ற ஒரு ஆபரணம். இது நடக்கும்போது 'கலீர்' 'கலீர்' என ஓசை எழும்.

## அடியார் அணிவித்தவை

அடியார்கள் பலர் தெய்வ மூர்த்தங்களுக்கு அழகும், விலை மதிப்பு மிக்க ஆபரணங்கள் பலவற்றைச் செய்து அணிவித்

திருக்கின்றனர். இந்தப் பணி இன்றளவும் தொடர்வதைக் காண்கிறோம். ஆதி சங்கராச்சாரியார் திருச்சி அகிலாண்டேசுவரிக்கு ''தாடங்கம்'' எனும் காதணியை ஸ்ரீசக்ர வடிவில் செய்து அணிவித்து, உக்கிரமாக இருந்த தேவியை சாந்த வடிவினளாக அருள்பாலிக்கச் செய்தார் என்று கூறுவர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பல தலங்களிலும் தேவிக்கு ஸ்ரீசக்ர வடிவில் தாடங்க அணியை அணிவிக்கும் முறை பரவியிருக்கிறது. திருச்சி அகிலாண்டேசுவரியின் தாடங்க அழகை ஆதி சங்கரர் பாடிப் பரவியிருக்கிறார்,

பல தலங்களிலும் அடியார்கள் பலர் இறைவனுக்கும் தேவிக்கும் ஆபரணங்கள் செய்து அளித்துள்ளதை பண்டைக் கல்வெட்டுகள் பல குறிப்பிடுகின்றன. விஜயநகர வேந்தர் கிருஷ்ணதேவ ராயர் பல ஆலயங்களுக்கு ஆபரணங்கள் பலவற்றை அளித்திருக்கிறார்.

அன்னை ஆபரணங்கள் பல பூண்டு அழகே வடிவாக நின்று அருள் பாலிக்கும் அற்புதக் கோலத்தை,

''பரந்த கரம் இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரமிகு கொய்தளிர்ப்பாணி
பிரித்தருள் கொங்கைகள் முத்தார் பவளம்
இருந்த நல்லாடை மணிபொதித்தன்றே''

என்று படம் பிடித்துக் காட்டுகிறது திருமந்திரம்.

## கல்வெட்டுகளில்

தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்களில் சில பல்வகை ஆபரணங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. பல்வகை ஆபரணங்களின் வடிவங்கள், செய்முறை போன்ற விவரங்களை அக்கல்வெட்டுகளிலிருந்து அறியலாம். அக்கல்வெட்டுத்தான் மாதர் காதணிக்கு 'தோடு' என்ற பெயரை முதன் முதலாகக் குறிப்பிடுகிறது. சக்தி இயல்பையுக் குறிக்கும் வண்ணம் சிவ பெருமான் ''தோடுடைய செவியன்'' என்று பாடப்பட்டுள்ளார் அன்றோ! தஞ்சைக் கல்வெட்டுக்களிலிருந்து மன்னரும், பட்டத்தரசியும் பல ஆபரணங்கள் செய்து பெருவுடையாருக்கு அணிவித்ததை அறியலாம்.

நம் பண்டைய அரசர்கள் மட்டுமின்றி, அவர்களுக்குப் பின் இங்கு நாடாள வந்த வெள்ளையர்களும் கூட நம் தெய்வங்

களிடம் சித்தை பதித்து ஆபரணங்கள பல செய்து அணிவது திருக்கின்றனர். இந்தச் செய்தி பலருக்கு வியப்பளிப்பதாக இருக்கலாம். கிழக்கிந்தியக் கம்பெனியார் மதுரை மீனுட்சிக்கு நூற்றெட்டுப் பொன்னுலான தங்க நகை ஒன்றைக் காணிக்கை யாக அளித்திருக்கின்றனர். வேட்டையாடச் சென்றபோது காட்டு யானையின் பிடியிலிருந்து உயிர் தப்பிய உருசு பீட்டர் என்ற கலெக்டர், மீனுட்சி அம்மனுக்கு நகைகள் பல காணிக்கை யாக அளித்திருக்கிறுர்.

நித்தம் நமககு அருள் புரிந்து காக்கும் காஞ்சி காமாட்சிக் கும், மதுரை மீனுட்சிக்கும், குமரி அன்னைக்கும், திருப்பதி அலர்மேல் மங்கைக்கும் பல்வகை உயர்ந்த ஆபரணங்கள் உள்ளதை அறிவோம்,

''மணிமுடி பாதம் சிலம்பணி மங்கை
அணிபவ னன்றி யருளுமில்லை யாகும்
தணிபவர் நெஞ்சினுள் தன்னருளாகில்
பணிபவர்க் கன்றே பரகதி யாமே.''

—திருமந்திரம்

## மணிகள் இழைத்த கிரீடம்

41 சுலோகம் முதல் அம்பிகையின் கிரீடம் முதல் வருணிக்க ஆரம்பிக்கிறுர் ஆதிசங்கரர்.


கிரீடத்தில் பிறை சந்திரன். வைர வைடூரிய மாணிக்கங்கள் கிரீடத்தில் இழைக்கப்பட்டிருக்கின்றன. துவாதச ஆதித்யர்கள் அம்பிகையின் அருகில் எப்போதும் இருந்து அவளை தியானிக்க வேண்டும் என்று இந்த ரத்னங்களாகிய ஜடப் பொருளாக இருந்து வருகிறுர்கள்.

கதைர் மாணிக்யத்வம் ககநமணிபி: ஸாந்த்ரகடிதம்
கிரீடம் தே ஹைமம் ஹிமகிரிஸுதே கீர்தயதி ய: I
ஸ நீளே யச்சாயாச்சுரண சபலம் சந்த்ரசகலம்
தநு: ஸௌநாஸீரம் கிமிதி ந நிபத்நாதி திஷணும் || 42 ||

தேவர்களே தேவியின் சமீபத்தில் இருந்துகொண்டு அவளை உபாசித்து வருகிறபோது மனிதர்கள அவசியம் அவள் உபாசனை யில் ஈடுபட வேண்டும் என்பதை இந்த சுலோகம் குறிக்கிறது.

* ஸௌ—3,

42



இந்த சுலோகம் ஜலகண்ட நிவர்த்தியில் கைகண்ட பிரயோக மாகும், ஸ்வர்ணத் தகடு அல்லது என்ணு மாவில் ஓமத்தைக் கலந்து அதில் இந்த யந்திரத்தை வரைந்து தினம் 1000 தடவை வீதம் 45 நாட்கள் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

பால், சர்க்கரை நைவேத்யம்.

## கருங்கூந்தல்

துநோது த்வாந்தம் நஸ்துலிததலிதேந்தீவரவநம்
கந ஸ்நிக்தச்லக்ஷ்ணம் சிகுரநிகுரும்பம் தவ சிவே |
யதீயம் ஸௌரப்யம் ஸஹஜம் உபலப்தும் ஸுமநஸோ
வஸந்த்யஸ்மிந் மந்யே வலமதநவாடீவிடபிநாம் || 43 ||

அடர்த்தியான கருங்கூந்தல் நீலோத்பல புஷ்பங்கள் கூட்டம் போல இருக்கிறதாம். இயற்கையாகவே பசையுள்ளதாகவும் மிருதுவாகவும் இயற்கை மணம் உள்ளதாகவும் விளங்குகிறது. இக் கூந்தலில் இடம் பெற்ற காரணத்தால் மலர்கள் வாசனை பெற்றன.

அம்பிகையின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா? இவ் விஷயத்தை நக்கீரர் தமிழ் சங்கத்தில் கிளப்பினர். ஈஸ்வரனே புலவராக வந்து அம்பிகை கூந்தலுக்கு இயற்கை வாசனை உண்டு என்று அடித்துக் கூறினர். அம்பிகையிடம் நெருங்கி அந்த வாசனையை அனுபவித்தவர் கூறுவது சரியாகத்தானே இருக்க வேண்டும். ஆதிசங்கரர் ஈஸ்வரனின் அவதாரமே என்பதற்கு இந்த ஒரு சுலோகம் போதும்.

''யதீயம் ஸௌரப்ரம் ஸஹஜமுபலப்தும்''

என்ற வாக்கியத்தால் அம்பிகையின் கூந்தலுக்கு மணம் உண்டு என்று ஆதிசங்கரர் அடித்துப் பேசுகிறர்,


இதற்கு வியாக்யானம் செய்த பாஸ்கரராயர் உண்மையில் கூந்தலுக்கு இயற்கை மணம் கிடையாது. தான் ஆராதிக்கும் தெய்வமான அம்பிகையை உயர்த்திச் சொல்ல ஆதிசங்கரர் அம்மாதிரி குறிப்பிட்டிருக்க வேண்டும் என்கிறர். (பாஸ்கர

ராயர் ஒருவேளை முன்ஜன்மத்தில் நக்கீரராக இருந்தவரோ என்னவோ)

அம்பிகையின் கூந்தல் பற்றிய இந்த வியாக்யான சுலோகம் பாராயணம் ஸர்வஜன வசியத்தை ஏற்படுத்தும்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தை ஜபிப்பதால் சகலமும் வச்யமாகும்.

ம்ருஷ்டான்னம் நைவேத்யம்,




## வகிடு (சீமந்தம்)

தலை மயிரை இரண்டாகப் பிரிக்கும் வெள்ளைக்கோடு எனப்படும் சீமை என்றால் எல்லை என்று அர்த்தம். அந்தப் பக்கத்துக்கும் இந்தப் பக்கத்துக்கும் தலையில் எல்லையின் முடிவாக இக்கோடு இருப்பதால் சீமந்தம் (வகிடு பிளக்கும் எல்லை)

அம்பிகையின் தலையில் ஒரே கருப்பாக இருக்கும் கேசங்களுக்கு மத்தியில் இந்த வெள்ளைக் கோடு அம்பிகையின் முகலாவண்யப் பிரபாவம் அப்படி பாய்கிறதாம். அந்த வகிட்டில் அம்பிகை குங்குமம் வைத்திருக்கிறாள். (முன்பெல்லாம் சுமங்கலிகள் குங்குமத்தை முதலில் வகிட்டில் இட்டுக் கொண்டுதான் பின் நெற்றியில் வைத்துக் கொள்வார்கள்)

அம்பிகையின் சாந்நித்யம் வேண்டும் என்பவர்கள் வகிட்டைக் கோணலாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த சீமந்தப் பகுதிதான் பதிவ்ரதா ஸ்திரீகளுக்கு தெய்வ சாந்நித்யம் உள்ள இடம். நமக்குக் காட்டுவதற்காக அம்பிகை வகிட்டில் குங்குமம் இட்டுக் கொண்டிருக்கிறாள்.

இருட்டில் காலை சூரியன் உதயமானாற் போல தலைமயிரான இருட்டின் நடுவே குங்குமம் பாலசூரியனாக விளங்குகிறது என்று ஆதிசங்கரர் வருணிக்கிறார்.

செக்கச் செவேல் என்று இருக்கும் வகிட்டின் குங்குமத்தைச் சுற்றி கன்னங்கறேல் என்று கூந்தல் இருக்கிறது.

செக்கச் செவேல் என்று இருக்கும் பாலசூரியனைக் கண்டால் இருட்டு இருக்கிற இடம் தெரியாமல் ஓடிவிடும். ஆகையால் இருட்டுக்கு சத்ரு சூரியன். அதுவும் பாலசூரியன்.

இருட்டு எல்லாம் சேர்ந்து யோசித்ததாம். நாம் ஏதாவது ஒரு இடத்தில் இந்த பாலசூரியனை வளைத்துக் கொண்டு 'எங்கே இப்போது உன் கைவரிசையைக் காட்டு' என்று சொல்ல எண்ணியதாம். இதற்காக அத்தனை இருட்டும் அம்பிகையின் தலைமயிரில் குடிகொண்டன.

கபரீபாரம்-கூந்தல். திமிரம்-இருட்டு குங்குமமாகிய பால சூரியனைச் சுற்றி இருட்டு வளைத்துக் கொண்டிருக்கிறதாம்.

சிவப்பிரகாச சுவாமிகள் தன் பிரபுலிங்க லீலையில் இது பற்றிய பாடல் ஒன்றைப் பாடியிருக்கிறார்.

ஓதியாகிய அறல் மிசைச் சுவடுற ஊர்ந்து
தீதிலா வெண் சந்தனத் திலக வெண்மதிக்குப்
போதுமோர் சிறு பாம்பென மயிர் வகிர்ப் பொருத்தச்
சோதி மாமணி சுட்டி ஒன் றெருத்தி தூக்கினளால்.

தலையில் வகிடு நடுவில் செல்கிறது, கூந்தல் கருகருவென்று கருமணற் பரப்பு போல இருக்கிறது. வகிட்டின் நுனியில் நுத லுக்கு மேல் சுட்டியை அணிந்திருக்கிறாள் அம்பிகை. நுதலில் சந்தனப் பொட்டு மிளிர்கிறது. கரு மணலிடையே பாம்பு ஒன்று சந்தனப் பொட்டாகிய சந்திரனை விழுங்கப் போவது போல இருக்கிறதாம் இந்த சுட்டி.

ச்ருதிகளாகிய ஸ்திரீகள் அம்பிகை காலில் வணங்குவதால் அவர்களின் வகுட்டிலுள்ள குங்குமத் தூள் அம்பிகையின் பாத மலர்களில் தூவப்பட்டிருப்பதாக லலிதா சகஸ்ரநாமம் வர்ணிக் கிறது. இதைதான் "ச்ருதி ஸீமந்த ஸிந்தூரீ க்ருத பாதயஜ தூளிகா" என்ற நாமம் குறிப்பிடுகிறது.

ச்ருதிகளை ஸ்திரீகளாக வருணித்துள்ளது பொருத்தமே.

ஞான காண்டமாகிய உபநிஷதங்களை வேதங்களின் சிரோ பாகம் என்றும் வேதாந்தம் என்றும் குறிப்பிடுவார்கள். சரீரத் திற்கு சீமந்தப் பிரதேசம் (வகிடு) மேல் பட்டதோ அதேபோல ஞான காண்டமும் வேதங்களில் மேல்பட்டது.

ச்ருதிகளுக்கு அம்பிகையின் ஸ்வரூபத்தில் ஒரு சிறிதுதான்

தெரிகிறது என்பதைக் குறிக்கும் 'தூளி' உபயோகிக்கப்பட்டிருக்கிறது.


தனோது க்ஷேமம் நஸ்தவ வதநஸௌந்தர்யலஹரீ
ப்ரீவாஹ: ஸ்ரோத: ஸரணிரிவ ஸீமந்தஸரணி: ।
வஹந்தீ ஸிந்தூரம் ப்ரபல கபரீபார திமிர
த்விஷாம் ப்ருந்தை: பந்தீக்ருதமிவ நவீனார்க்கிரணம் ॥ 44 ॥

வகிட்டிலுள்ள குங்குமம் பால சூரியம் இரு பக்கமும் இருட்டு போன்ற தலைமயிர்கள். இவ்விதம் தியானம் செய்பவர்கள் யோக க்ஷேமத்தை அம்பிகை தானே கவனித்துக் கொள்கிறாள்.

அடையப்படாததான வஸ்துக்களை அடைவது யோகம். அடையப்பட்ட வஸ்துக்களை ரக்ஷிப்பது க்ஷேமம்: இவ்விரண்டையும் அம்பிகையே கொடுக்கிறாள். இந்த சுலோகத்தால் சர்வஜன வசியமும் சகல க்ஷேமமும் உண்டாகும்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் அல்லது மஞ்சள் பொடி குங்குமத்தில் வரைந்து 12 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். தேன் நைவேத்யம். ஸ்வர்ணத் தகடு உபயோகித்தால் சகல ரோக நிவர்த்தி. மஞ்சள் குங்குமம் உபயோகித்தால் சகல காரியங்களிலும் வெற்றி.

44





நெற்றியில் பரந்து விழும் கேசங்கள் வண்டுக் கூட்டங்கள் போல் இருக்கின்றனவாம். அம்பிகை முகமான தாமரையை மொய்க்கும் வண்டுகள் போல இவை இருக்கின்றனவாம்.

பரமேஸ்வரன் கண்களும் வண்டுகள் போல இம் முகத் தாமரையை நாடுகின்றன என்கிறார் ஆதிசங்கரர்.

இப்படி விவரிக்கும் சுலோகம்:

அராலை: ஸ்வாபாவ்யாத் அலிகலபஸஸ்ரீபி: அலகை:
பரீதம் தே வக்த்ரம் பரிஹஸதி பங்கேருஹருசிம் ।
தரஸ்மேரே யஸ்மிந் தசநருசிகிஞ்ஜல்கருசிரே
ஸுகந்தௌ மாத்யந்தி ஸ்மரதஹநசக்ஷு: மதுலிஹ: ॥ 45 ॥

இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யும்போது தேவி முகத்தை பத்மமாகத் தியானிக்க வேண்டும். இதை உபாசிப்ப வர்களின் சொன்ன வாக்கு பலிக்கும். (வாக்பலிதம்)




இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

த்ரி மதுரம் நைவேத்யம்.

## சந்திர கலை போன்ற நெற்றி

அம்பிகையின் நெற்றி இரண்டு பக்கவாட்டிலும் கொஞ்சம் வளைந்ததாக அமைந்திருக்கிறது. இந் நெற்றி கீழ் முகமாக நோக்கும் சந்திர கலையோ என்று நினைக்கத் தோன்றுகிறது. கிரீடத்தில் விளங்கும் மேல்புறமாக உள்ள சந்திர கலையை அதோ முகமாக திருப்பி வைத்து, அதோ முகமாக விளங்கும் நெற்றியாக சந்திர கலையை மேல் பார்த்து திருப்பி வைத்தால் பூர்ண சந்திரனாக விளங்கும்.


இதை விளக்கும் சுலோகம் :

லலாடம் லாவண்யத்யுதிவிமலம் ஆபாதி தவ யத்
த்விதீயம் தந்மந்யே மகுடகடிதம் சந்த்ரசகலம் |
விபர்யாஸந்யாஸாத் உபயமபி ஸம்பூய ச மித:
ஸுதாலேபஸ்யூதி: பரிணமதி ராகா ஹிமகர : || 46 ||

இவ்விதம் தேவியின் நெற்றியாகிய சந்திர கலையை அதோ முகமாகத் தியானம் செய்பவர்கள் மனதை அடக்கக் கூடிய சக்தியையுடையவர்களாவார்கள்.

மனதிற்கு சந்திரன் அதிஷ்டான தேவதை. இரண்டு சந்திர கலையையும் (கிரீடம், நெற்றி) பூரண சந்திரனாக தியானம் செய்பவர்களுக்கு என்றும் பௌர்ணமியாகவே தோன்றும். (இம்மாதிரிதான் அபிராமி பட்டருக்கும் தெரிந்திருக்கிறது.

இந்த சுலோகத்தால் சகல காரியம் ஜெயம் என்பதுடன் புத்திரோபத்தியும் கிடைக்கும்,




46

இச் சக்ரத்தை ஸ்வர்ண தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

பால், தேன், பாயஸம் நைவேத்யம்.

## திலகம்

சுமங்கலிகளுக்கு முக்கியமானது திலகம். அத்திலகம் நிலைத்திருக்க அன்னையின் அருள் வேண்டும். நெற்றிக் கண் இருக்கும் இடத்தில் இத்திலகம் இடப்படுகிறது.

குங்குமம் ஸ்திரீகளின் சௌபாக்ய சின்னம்.

த்ரு.பா. குல்கர்ணி என்பர் தொகுத்த "உற்பத்தி அகராதி" என்ற நூலில் "குங்குமத்தின் மூலப் பொருள் கேசரி. அதை சௌபாக்யவதிகள் இட்டு வந்தார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

விவாக விதியில் இதற்கு ஒரு ஸ்தானம் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலப் பொருள் புண்ட் - துவாரகையின் கோபி சந்தனம்.

பிஹார், உத்தரப் பிரதேசப் பெண்கள் குங்குமத்தைப் பல வித அழகான முறைகளில் இட்டுக் கொள்கிறார்கள். இரண்டு கண்களுக்கும் நடுவில், நெற்றி வகிட்டிலிருந்து இரண்டு காது வரையிலும் குங்குமம் வேறு கலர்ப் பொடிகள் இவற்றைச் சேர்த்து இட்டுக் கொள்கிறார்கள்; புள்ளி புள்ளியாக இட்டுச் கொள்வதும் உண்டு. வங்காளப் பெண்கள் குங்குமத்தைவிடச் சிந்தூரத்தையே அதிகமாக விரும்பி நெற்றி வகிட்டில் இட்டுக் கொள்கிறார்கள். 'கணவன்-மனைவி இரண்டு பேரின் ரத்தமும் கலந்த ஒன்றே சிந்தூரம்' என்று அவர்கள் சொல்கிறார்கள்.

## வில்லினையொத்த புருவம்

ப்ருவௌ புக்நே கிஞ்சித் புவநபயபங்கவ்ய ஸநிநி
த்வதீயே நேத்ராப்யாம் மதுகரருசிப்யாம் த்ருதகுணம் ।
தனுர் மந்யே ஸவ்யேதரகர க்ருஹீதம் ரதிபதே:
ப்ரகோஷ்டே முஷ்டௌ ச ஸ்தகயதி நிகூடாந்தரமுமே ॥
47 ॥

தேவி எப்போதுமே தன் கருணை காரணமாக லோகத்திற்கு கெடுதல் வரக்கூடாது என்ற கவலை கொண்டிருக்கிறாள். கவலை இருக்கும் முகத்தில் புருவங்கள் சிறிது வளைந்து கொடுக்கும். உத்தம ஸ்திரீகளுக்கு புருவம் இரு பக்கங்களிலும் வளைந்து காணப்படும். இப்புருவங்களை ஆதிசங்கரர் மன்மதனின் வில்லாக வருணிக்கிறார். மன்மதன் வில்லிற்கு வண்டுகளின் வரிசை நாண் ஆகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு கண்களும் வண்டுகள் போல் இருப்பதால் அவை புருவமான வில்லிற்கு நாண் போல இருக்கின்றனவாம்.

அம்பிகையின் இரு புருவங்களையும் ஒரே வில்லாக பாவிக்க வேண்டும். இப்படி தேவியின் புருவங்களை மன்மதன் வில்லாக பாவிக்கிறவர்களுக்கு காமஜயம் ஏற்படும்.

47

| |
|---|
| ஹ்ரீம் |
| ஹ்ரீம் |
| ஹ்ரீம் |

இந்த உபாசனை மூலம் சகல தேவதா வச்யம் ஏற்படும்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகடு அல்லது விபூதியில் எழுதி 25 தினங்கள் தினம் 1000 தடவை பாராயணம் செய்ய வேண்டும்.

தேங்காய், பழம், தேன் நைவேத்யம்.

அம்பிகை புருவ அசைவால் உணர்த்தும் உத்திரவுகளை பிரும்மா, விஷ்ணு, ருத்திரர்கள் நிறைவேற்றி வைக்கிறார்களாம். பராசக்தியின் உத்திரவைத்தான் இதர தேவதைகள் நிறைவேற்றுகிறார்கள். இவளை ஆராதித்தால் எல்லா தேவதைகளையும் ஆராதித்ததாக ஆகும். இது பற்றிய சுலோகம்:

ஜகத்ஸூதே தாதா ஹரிரவதி ருத்ர: க்ஷபயதே
திரஸ்குர்வந்நேதத் ஸ்வமபி வபுரீ சஸ்திரயதி ।


ஸதாபூர்வ: ஸர்வம் ததிதம் அநுக்ஷ்ஹ்ணாதி ச சிவ:
தவாக்ஞாம் ஆலம்ப்ய க்ஷணசலிதயோ: ப்ரூலதிகயோ: ||
24 ||

(ப்ரூலதிகயோ: கொடி போன்ற புருவங்களுடைய. ஆக்ஞாம்-உத்திரவு)

ஸமஸ்த பூதப்ரேத உச்சாடணம். க்ஷுத்ர ரோக நிவாரணம் இதற்குப் பலன் செயல்லப் படுகிறது.

பஞ்சாக்ஷர நாமா அடங்கிய இந்த யந்திரத்தை ஸ்வர்ண தகட்டில் எழுதி 20 நாட்கள் தினம் 1000 முறை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

தேன், உளுந்து வடை, எள்ளுசாதம் (திதிப்பு) நைவேத்யம்.



24

## கருணை தரும் கண்கள்

அம்பிகைக்கு சூரியன், சந்திரன், அக்னி மூன்றும் கண்களாக வுள்ளதால் அவளுக்கு த்ரி நேத்ரி, த்ரிநயனா, த்ரிலோசனா என்ற பெயர்கள் உண்டு. நெற்றிக் கண்தான் அக்னி. நெற்றி ஒளியும் இந்த அக்னி ஒளியும் சேர்ந்து அம்பிகையின் லலாட லாவண்யம் அபிராமி பட்டரை ''வாநுதல் கண்ணியை'' என்று பாடச் சொல்கிறது.

ஆதிசங்கரர் தன் சௌந்தர்ய லகரி 46வது சுலோகத்தில் ''லலாடம் லாவண்ய யுதி விமலம் ஆபாதி'' என்கிறார். 'வெண்ணிலவு போன்ற அழகுடன் உன் நெற்றியானது பிரகாசிக்கிறது' என்பது இதன் அர்த்தம், 48வது சுலோகத்தில் முக்கண்கள் யாவை. அவைகளின் செயல் யாவை என்பதை ஆதி சங்கரர் குறிப்பிடுகிறார்

அஹ: ஸுதே ஸவ்யம் தவ நயநம் அர்காத்மகதயா
த்ரியாமாம் வாமம் தே ஸ்ருஜதி ரஜநீநாயகதயா |
த்ருதீயா தே த்ருஷ்டி: தரதலித ஹேமாம்புஜருசி:
ஸமாதத்தே ஸந்த்யாம் திவஸநிசயோ: அந்தரசரீம் || 48 ||

பரமசிவனுக்கு முக்கண்கள் உண்டு. அந்த பரசிவ

ஸ்வரூபம் சக்தி ஸ்வரூபத்தில் அடங்கினது. இருவரும் வெவ் வேறானவர் இல்லை. ஆகவே தேவிக்கும் த்ரிநேத்ரம் உண்டு. வலது கண் சூரியன். இடது கண் சந்திரன். நெற்றிக்கண் அக்னி.

பகலுக்கு நாயகன் சூரியன். இரவுக்கு நாயகன் சந்திரன். அந்தி சந்திக்கு நாயகன் அக்னி,

அஹ: ஸ்ரீதே ஸவ்யம் தவநயனம் அர்க்க ஆத்ம கதயா
(வலது கண்-சூரியன். அது பகலைத் தோற்றுவிக்கிறது)

திரியா மாம் வாமம் தே ஸ்ருஜதி ரஜனீநாயக தயா
(இடது கண்-சந்திரன். அது இரவை உண்டாக்கு கிறது)

த்ருதீயா தே த்ருஷ்டிர் தாதலித ஹேமாம்புஜ ருசி:
(மூன்றாவது கண் சற்றே மலர்ந்த தங்கத் தாமரையைப் போல ஒளி வீசுகிறது. அதனால்)

ஸமாதத்தே ஸந்த்யாம் திவஸ் நிசயோர் அந்தர சரீம்
(பகல் இரவு இவற்றின் நடுவிலுள்ள சந்தியா காலத்தை உண்டாக்குகிறது)

இவ்வாறு தியானித்து முக்கண்ணியை வணங்குவோருக்கு நவக்ரஹ தோஷ நிவர்த்தி ஏற்படும்

காலத்தை உண்டாக்கும் அம்பிகை காலாதிதமாக இருக் கிறாள். தேவியை முக்கண் உடையவளாக தியானிப்பவர் களுக்கு ஜனன மரணத் தொல்லை இல்லை. ம்ருத்யு பயமும் இல்லை.

48

| | | |
|---|---|---|
| ஞீ° | ம° | ஐ |
| ஜ° | ர | க்ஷ° |
| கெ | ம | ரா |

இந்த யந்திர வழிபாட்டால் நவக்ரஹ தோஷம் நிவ்ருத்தி. சகல சம்பத் பிரதம் ஏற்படும். ஒன்பது நாட்களுக்கு தினம் 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

சித்ரான்னம், பழம், தேன், நைவேத்யம்.

## கடாக்ஷ வீக்ஷண்யம்


கவீநாம் ஸந்தர்பஸ்தபக மகரந்தைக ரஸிகம்
கடாக்ஷவ்யாக்ஷேப ப்ரமர கலபெள கர்ணயுகலம்।
அமுஞ்சந்தெள த்ருஷ்ட்வா தவ நவரஸாஸ்வாததரலௌ
அஸூயாஸம்ஸர்காத் அலிகாநயநம் கிஞ்சிதருணம் || 50 ||

பக்தர்கள் கவிகள் பாடும் ஸ்தோத்திரங்களை இரண்டு காதாலும் அம்பிகை கேட்கிறாள். அதிலுள்ள நவரஸங்களாகிற மகரந்தத்தை கர்ணாம்ருதமாக இருக்கும் காரணத்தால் அதன் தேனை கண்களாகிய வண்டுகள் மொய்க்கின்றனவாம். அதாவது அம்பிகையின் கண்கள் விசாலமாக நீண்டிருக்கின்றன என அர்த்தம்.

இந்த இரண்டு கண்களைப் போல நெற்றிக் கண்ணுக்குக் காதைத் தொட பாக்கியமில்லாததால் அதற்கு இரண்டு கண்கள் மீதும் அசூயை. அதனால் கோபத்தால் சிவந்து காண்கிறதாம். தேவியினுடைய நேத்ரங்கள் கர்ணாந்தவிஸ்தாரத்துடன் கூடியது என்று தியானம் செய்பவர்களுக்கு தூரதர்சித்வம் ஏற்படும்,

இந்த சுலோகத்தால் வைஸூரி முதலிய ரோக நிவர்த்திக்குப் பிரயோகம் சொல்லப்படுகிறது.

இந்த ஊமை (உச்சரிக்க முடியாத பீஜ) அக்ஷரத்தை ஜலத்தில் தினம் 25000 தடவை எழுதி ஐந்து நாட்கள் இந்த சுலோகத்தை 1000 முறை பாராயணம் செய்து அன்றன்று உட்கொள்ளவும்,



50


## திருஷ்டியின் மகிமை

சிவே ச்ருங்காரார்த்ரா ததிதரஜநே குத்ஸனபரா
ஸரோஷா கங்காயாம் கிரிசநயநே விஸ்மயவதீ |
ஹராஹிப்யோ பீதா ஸரஸிருஹ ஸௌபாக்யஜநநீ
ஸகீஷு ஸ்மேரா தே மயி ஜநநி த்ருஷ்டி: ஸகருணா || 51 ||

இதில் அம்பிகை திருஷ்டியில் எட்டு வித ரஸங்களும்□ நிறைந்திருப்பதாக வர்ணிக்கப்படுகிறது. (அவை: சிருங்காரம், ஹாஸ்யம், கருணை, பீபத்ஸம், ரௌத்ரம், அத்புதம், பயானகம் வீரம்)

---

□ சாந்தியை சேர்த்து ஒன்பது ரசங்கள். சாந்தம் என்பதை ஒரு ரசமாக சிலர் ஒப்புவதில்லை.



51

இந்த இயந்திரத்தை ஸ்வர்ணத் தகடு அல்லது சந்தனத்தில் எழுதி 45 நாட்களுக்கு தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்தால் ஸர்வ ஜன வச்யம் ஏற்படும்.

தேன் உளுந்து வடை நைவேத்யம்.


*கதே கர்ணாப்யர்ணம் கருத இவ பக்ஷ்மாணி தததீ*
*புராம் பேத்து: சித்தப்ரசமரஸ வித்ராவணபலே।*
*இமே நேத்ரே கோத்ராதரபதி குலோத்தம் ஸகலிகே*
*தவ ஆகர்ணாக்ருஷ்டஸ்மரசர விலாசம் கலயத: ||52||*

பாணங்களுக்கு இருபுறமும் இறக்கை கட்டுகிற வழக்க முண்டு அதுபோல் அம்பிகையினுடைய கண் இமை மயிர்கள் பாணத்திற்குக் கட்டப்பட்ட இறக்கைகள் போலத் தோன்று

பரமசிவனிடம் எப்போதும் சாந்தி ரஸம் நிரம்பியிருப்பது வழக்கம். தேவியின் பாணமாகிய கண்கள் பாய்ந்த மாத்திரத்தில் சாந்திரஸம் விலகிவிட்டது. அதற்குப் பதில் சிருங்கார ரஸம் குடியேறிவிட்டது. காதுவரை இழுக்கப்பட்ட மன்மத பாணத்தின் சௌபாக்யத்தை தேவியின் கண்கள் உண்டு பண்ணியதால் தேவியின் கண்கள் மன்மத பாணமே என்று கருத வேண்டியிருக்கிறது.

இப்படி தேவியின் கண்களை மன்மத பாணமாக தியானிப்பவர்களுக்கு காமஜயம் ஏற்படும்

52



இந்த சுலோகத்தில் கண் காதுகளுக்கான ரோக நிவர்த்தி கூறப்படுகிறது. ஸ்வர்ணத் தகடு அல்லது விபூதியில் இந்த யந்திரத்தை எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

திலான்னம், பாயஸம் நைவேத்யம்.


## நேத்ர சௌபாக்யம்

விபக்தத்ரைவர்ண்யம் வ்யதிகரித லீலாஞ்ஜநதயா
விபாதி த்வந்நேத்ரத்ரிதயமிதம் ஈசாநதயிதே :
புந : ஸ்ரஷ்டும் தேவாந் த்ருஹிண ஹரிருத்ராந் உபரதாந்
ரஜ : ஸத்வம் பிப்ரத்தம இதி குணாநாம் த்ரயமிவ || 53 ||

உத்தம ஸ்திரீகளின் கண்களில சூக்ஷ்மமான சிவப்பு ரேகை காணப்படும். லீலார்த்தமாக அம்பிகை மையிட்டுக் கொண்டிருக்கிருள். இதனுல் தேவியின் கண்களில் கருப்பு, வெள்ளை, சிவப்பு மூன்று வர்ணங்களும் இடம் பெற்றுள்ளது.

கருப்பு தமோ குணம் என்றும், வெளுப்பு சத்வ குணம் என்றும், சிவப்பு ரஜோ குணம் என்றும் இதிலிருந்து இம்முக்குண தேவதைகளான பிரும்மா, விஷ்ணு, ருத்ரன் அம்பிகையிடமே லயமாகிவிட்டதாகத் தெரிகிறது. இம்மூவரும் சிருஷ்டி காலத்தில் அம்பிகையினிடமிருந்தே ஆவிர்பவிக்கிருர்கள்.

இந்த ஸ்தோத்திரத்திஞல் கண், காது இவைகளின் ரோக நிவர்த்திக்குப் பரிகாரம் சொல்லப்படுகிறது. பிறவியிலேயே ஏற்பட்ட இத்தோஷங்கள் நீங்கும் .




தீபத்தினடியில் ஸ்வர்ணத் தகட்டில் எழுதிய இந்த யந்திரத்தை வைத்து 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

பால் பாயஸம் நைவேத்யம்.


பவித்ரீகர்தும் ந : பசுபதிபராதீநஹ்ருதயே
தயாமித்ரைர்நேத்ரை : அருணதவலச்யாமருசிபி : |
நத : சோணோ கங்கா தபந தநயேதி த்ருவமமும்
த்ரயாணும் தீர்த்தாணும் உபநயஸி ஸம்பேதமநகம் || 54 ||

தேவி பரமேஸ்வரனிடம் தன் மனதை செலுத்திவிட்டதால் அவருடைய தீர்மானம் எதுவோ அதுவே தேவிக்கு சந்தோஷம் உண்டு பண்ணும். இத்தகைய பதிவ்ரதைகள் கண்களில்தான் மூன்று ரேகை இருக்கும்.

அம்பிகை கண்களிலுள்ள மூன்று ரேகைகள் சோணபத்ரா, கங்கை, யமுனை என்ற மூன்று நதிகளோ என்று எண்ணத் தோன்றுகிறது. கங்கை ஸ்படிக (வெண்மை ரூபம், யமுனு கருப்பு ரூபம், சோணு சிவப்பு ரூபம். மூன்று நதிகளும் பாபத்தைப் போக்கக் கூடியவை. அம்மாதிரியே அம்பிகையின் கண்களும் பாபத்தை ஒழிக்கக் கூடியவை.

கங்கை யமுனை சங்கமத்தை பிரயாகையில் காணலாம். சோணபத்ரா எங்கோ வடக்கில் இருக்கிறது. இம்மூன்றின் சங்கமத்தை அம்பிகையின் கண்களில்தான் காணலாம்.

இந்த சுலோகம் ஸ்திரீகளின் கர்ப்ப சம்பந்தமாக ஏற்படக் கூடிய சகல ரோகங்களேயும் நிவர்த்திக்கக் கூடியது. (யோநி ரோக நிவாரணம்)




54

ஸ்வர்ணத் தகடு அல்லது ஜலத்தில் இந்த சக்ரத்தை எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

குள பாயஸம் நைவேத்யம்.

## அம்பிகை இமை 'கொட்டு'வதில்லை


நிமேஷோந்மேஷாப்யாம் ப்ரலயமுதயம் யாதி ஜகதீ
தவேத்யாஹுஃ : ஸந்தோ தரணிதரராஜந்யதநயே |
த்வதுந்மேஷாஜ்ஜாதம் ஜகதிதமசேஷம் ப்ரலயத :
பரித்ராதும் சங்கே பரிஹ்ருதநிமேஷாஸ்தவ தருச : || 55 ||

கண் திறந்திருந்தால் லோகம் காணப்படுகிறது. கண்களை மூடினுல் எதுவும் காணப்படுவதில்லை. அதாவது கண் திறந்திருந்தால் சிருஷ்டி. மூடினுல் சம்ஹாரம். இதுவே திருஷ்டி சிருஷ்டி வாதம் எனப்படும். இந்த லோகம் என்றும் வாழ வேண்டும் என்று நினைத்து அம்பிகை கண்களை மூடாமல் அதாவது இமை கொட்டாமல் இருக்கிருள்.. இதைதான் லலிதா சகஸ்ரநாமம் "உன்மேஷ நிமிஷோத்பன்ன விபன்னு புவனுவளீ" என்கிறது.

இந்த சுலோகத்தால் சத்ரு மாரண பிரயோகம் சொல்லப் படுகிறது.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் 2500 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

பாயஸம், தேங்காய், தாம்பூலம் நைவேத்யம்.



55


தவாபர்ணே கர்ணேஜபநயநபைசுந்யசகிதா
நிலீயந்தே தோயே நியதமநிமேஷா : சபரிகா : ।
இயம் ச ஸ்ரீர்பத்தச்சதபுடகவாடம் குவலயம்
ஜஹாதி ப்ரத்யூஷே நிசி ச விகடய்ய ப்ரவிசதி ॥ 56 ॥

தேவர்களும் இமை கொட்டுவதில்லை அதே போல் பெண் மீன்களும் இமை கொட்டுவதில்லை. அத்தகைய மீனின் கண்களையுடையவளானதால் அம்பிகைக்கு மீனாக்ஷி என்றொரு பெயர். மீன்கள் தன் கண்களாலேயே தன் குஞ்சுகளைக் காப்பாற்றுகின்றன.

பந்த விமோசனம், கால் விலங்கு தரிக்கும் என்ற பலன் இந்த சுலோகத்திற்கு கூறப்பட்டுள்ளது.

ஸ்வர்ணத் தகட்டில் இந்த யந்திரத்தை எழுதி 45 நாள் தினம் 20000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

நைவேத்யம் தேன்.




56

தேவியின் கண்களுக்கும் காதுக்குமிடையேயுள்ள கன்னப் பகுதி பின் கண்ட சுலோகத்தில் வர்ணிக்கப்படுகிறது.

அராலம் தே பாளீயுகளம் அகராஜந்யதநயே
  ந கேஷாமாதத்தே குஸுமசர கோதண்ட குதுகம் |
திரச்சீநோ யத்ர ச்ரவணபதமுல்லங்க்ய விலஸந்
  அபாங்கவ்யாஸங்கோ திசதி சரஸந்தாநதிஷுணும் || 58 ||

கண்களுக்கும் காதுகளுக்கும் நடுவிலுள்ள இடம் பாளீ எனப்படும். இந்த இடமும் தேவியின் கடைக் கண் பார்வையும் மன்மதனை எரித்த பரமேஸ்வரனுக்கும் காம பரவசத்தை உண்டுபண்ணுகிறபடியால் பாளீ மன்மதன் வில்லாகவும் கடைக்கண் பார்வை பாணமாகவும் ஒப்பிடப் படுகிறது.



இந்த சுலோகப் பலன் ஸர்வ ஜன வசியம். சகல ரோக நிவர்த்தி. இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 தினங்கள் 5000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

சித்ரான்னம், தேன் நைவேத்யம்.

அம்பிகையின் அடியவர்களைப் பின்தொடர்ந்து அழகிய பெண்கள் மேலாடை சரியவும் கரும் கூந்தல் கலையவும் ஆசையுடன் ஓடி வருகின்றனர் என்கிறார் ஆதிசங்கரர்.

பெண்ணாசை யற்றவர்களைப் பெண்கள் ஏன் தொடர்கின்றனர்?

இங்கு பெண்கள் சிற்றின்பம் தரும் பூத உடலினையுடைய பெண்களைக் குறிக்கவில்லை, சித்திகளை நல்கும் சித்தி தேவதைகளையும் உபநிஷத மாதர்களையே குறிக்கும். அதாவது அன்னையின் அடியவர்களுக்கு சித்திகளும் வேதாந்த ஞானமும் ஏற்படுவது எளிது என்பது கருத்து.

## கடைக் கண் பார்வை
## ஒரு காயகல்ப மருந்து

என்றும் இளமையுடன் கூன்குருடு ஆகாமல் நீண்ட காலம் வாழ முடியுமா? முடியும், இப்படியிருக்க 'காயகல்பம்' என்ற

மருந்து ஏதாவது உண்டா? இருக்கிறது என்கிறார் ஆதி சங்கரர்.

சௌந்தர்ய லகரி 6-வது சுலோகத்தில் சிவபெருமானால் பஸ்மமாக்கப்பட்ட மன்மதன் அம்பிகையின் அருட் பார்வை பெற்றதால் மீண்டும் உயிர் பெற்று உலவுகிறான் என்கிறார். அவன் உயிர் பெற்று விளங்குவது மட்டுமல்ல. அம்பிகையின் கடைக்கண் பார்வை பெற்றவர்கள் முதுமை ஏற்படாமல் என்றும் இளமையுடன் இருக்க முடியும். அவர்களைக் கண்டு உபநிஷதங்களாகிய பெண்கள் ஆசை கொண்டு அவர்களை அணைய ஓடி வருவார்கள் என்கிறார். ஆதிசங்கரர் தன் 13-ம் சுலோகத்தில் குறிப்பிடுகிறார்.

அம்பிகையின் கடைக்கண் பார்வை எவை எல்லாவற்றை யும் தரும் என்று அபிராமி பட்டர் ஒரு பட்டியலே தயாரித்துத் தருகிறார்.

தனந்தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே (69)

அபிராமியின் கடைக்கண் பார்வை அன்பர்களுக்கு இம்மை மறுமை இன்பங்கள் எல்லாவற்றையும் கொடுக்க வல்லது.

பட்டியல்:

1. இம்மை, மறுமை, வீடு என்ற மூன்று பயனும் பெறுவர். 'மண் அளிக்கும் செல்வம்' 'விண்ணளிக்கும் செல்வம்' 'அழியா முக்தி'. (15)

2. இகலோக வாழ்வும் பரலோக வாழ்வும் பெறுவர். அழியா அரசும் செல்லும் தவ நெறியும் சிவலோகமும் சித்திக்குமே' (28)

சாம்ராஜ்யத்தையே தருவாள். வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை இவை எல்லாம் ராஜ்ய சின்னங்கள். (51)

தனம், கல்வி, தளர்வு அறியா மனம், தெய்வ வடிவு, வஞ்ச மில்லா இன்பம், நன் மனைவி, நன் மக்கள், செல்வம், நல்லன எல்லாம் தரும். (68)

இந்திரப் பதவியே கிடைக்கும். பொன் சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவர். (74)

அயிராவதமும் பகீரதியும் உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. (83)

பிரமன், முராரி, பொதிய முனி காதி...கந்தன், காமன், கணபதி சாதித்த புண்ணியம் பெறுவர். (96)

## கடைக்கண்ணின் கருணை

*தநு: பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விசிகா :*
*வஸந்த : ஸாமந்தோ மலயமருதாயோதநரத:।*
*ததாப்யேக: ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்*
*அபாங்காத்தே லப்த்வா ஜகதிதமநங்கோ விஜயதே ‖ 6 ‖*

அம்பிகையின் அருளினால் எப்படி மன்மதன் இவ்வுலகை ஆட்டி வைக்கிறான் என்பது இதில் விளக்கப்படுகிறது.

மன்மதனின் வில் கரும்பு. அதன் நாண் தேனீக்கள், அம்பு ஐந்து புஷ்பங்கள். இந்த மன்மதனுக்கு ஆலோசனை கூறும் அமைச்சன் இளவேனில். பொதிய மலையிலிருந்து வரும் தென்றலே அவன் தேர்.

இந்த மன்மதனுக்கு ஸ்தூல தேகம் கிடையாது. பரமசிவன் கோபத்திற்காளாகி பஸ்மமாகி விட்டது. அம்பிகையின் அருளால் கண்ணுக்குத் தெரியாத ஸூக்ஷ்ம உடலைப் பெற்றவன். இந்த உருவிலாக் காமன் இப்பூவுலகம் முழுவதும் ஆட்டி வைக்கிறான்.

இந்த சுலோகத்தால் சொல்லப்படும் வித்யைக்கு "அனங்க வித்யை" எனப்படும். இதற்கு ரிஷி மன்மதன். ராஜராஜேஸ்வரி தேவதை.

இந்த சுலோகத்தால் சொல்லப்படும் வித்யையை உபாசித்தான் மன்மதன்.

அம்பிகையின் கடாக்ஷ வீக்ஷண்யம் எவன் மீது விழுகிறதோ அவன் வசமாகவே சகல உலகமும் இருந்து வருகிறது.


இந்த மன்மதனுக்கோ சரீரமில்லை. (சக்திக்கு எப்போதுமே உருவமில்லை. சிவத்தோடு சேர்ந்துதான் உருவம் பெறுகிறது) சக்தியின் பூர்ண அருள் பெற்றதினால் இவனுக்கும் உருவமில்லை. மின் சக்திக்கு உருவமிருக்கிறதா? ஆனால் தொட்டால் "ஷாக்" அடிக்கிறதே! இவன் பாணமோ புஷ்பங்கள். அவை தொட்டாலே வாடிவிடும். இப்படிப்பட்டவன் லோகத்தை ஆட்டி வைப்பது உன் கடாக்ஷத்தினால்தானே என்கிறார் ஆதிசங்கரர்.

இந்த வித்யைக்கு ''அனங்க வித்யை'' அல்லது ''மன்மத பிரஸ்தாரம்'' என்று பெயர். மன்மதனே ரிஷி. காயத்ரீ சந்தஸ். ராஜராஜேஸ்வரி தேவதை. பஞ்ச சக்தி வித்யை யினுல் பீஜ சக்தி கீலகம். அங்கன்யாஸ கரன்யாஸம். பஞ்சதசி யின் த்யான சுலோகமே இதற்கும் தியான சுலோகம்.

அங்கம் இல்லை என்பதால் உணர்ச்சியை அறிய முடியா தவன். எல்லா உயிர்களிடமும் உணர்ச்சியை ஊட்டுகிருன். இவன் ஸ்ரீவித்யையில் மிகவும் தேர்ந்தவன். இவனை அறியாமல் ஸ்ரீவித்யையில் ஈடுபடலாகாது: ஸ்ரீசக்ர பூஜையை செய்யக் கூடாது என்கிறது யஜுர் வேத சுலோகம்.

அசேதா யச்ச சேதன : ஸ
    தம் மணி மவிந்தத்
ஸோனங்குலி ராவயத் ஸோகரீவ :
    ப்ரத்யமுச்சத்
ஸோ ஜிஹ்வோ அஸச்சத :
    நைதம் ருஷிம் விதித்வா நகரம் ப்ரவிசேத் ||

இந்த சுலோகத்தின் பலன் நபும்சகனுக இருந்தாலும் இவனுக்குப் புத்திர சந்தானம் ஏற்படும்.




6

ஸ்வர்ணத் தகட்டில் இந்த சக்ரத்தை எழுதி 21 நாட்கள் தினம் 500 தடவை இந்த சுலோ கத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

நைவேத்யம் கரும்பு.

நரம் வர்ஷீயாம்ஸம் நயநவிரஸம் நர்மஸு ஜடம்
    தவா பாங்காலோகே பதிதம் அநுதாவந்தி சதச : |
களத்வேணீ பந்தா : குசகலச விஸ்ரஸ்த ஸிசயா
    ஹடாத் த்ருட்யத்காஞ்ச்ய: விகளிததுகூலா யுவதய : || 13 ||


அம்பிகையின் கடைக்கண் பார்வை எவன்மீது விழுகிறதோ அவன் பரம சௌபாக்யத்தை அடைகிருன் என்பது இதில் வர்ணிக்கப்படுகிறது.

இந்த சுலோகத்தை ஸ்திரீ வச்யதரம் என்று மகான்கள் வருணித்திருக்கிறார்கள் இங்கு குறிப்பிடப்படும் ஸ்திரீகள் உபநிஷத்துக்களே. உபநிஷத்துக்களுக்கு சச்சிதானந்த ரூபமான பரபிரும்மம் என்ற காமேஸ்வரனிடத்தில்தான் பரம ஈடுபாடு என்பதை உபக்ரமேய ஸம்ஹார ஐக்யம், அப்யாஸம், அபூர்வத்வம், பலம், அர்த்த வாதம், உபபத்தி என்ற ஆறுவித தாத்பர்யங்களால் அறிய வேண்டும். தேவியின் கடைக் கண் எவன் மீது விழுகிறதோ அவன் காமேஸ்வரனாக ஆகிவிடுகிறான், ஸ்திரீகளாக வருணிக்கப்படும் சக்திகள் எல்லாம் அவனைத் தானே வந்தடைகின்றன.

அம்பிகை கடாக்ஷம் விழுந்துவிட்டால் எல்லாவற்றையும் சமமாக பாவிக்கின்ற நிலை, எந்த விஷயத்திலும் மோகம் ஏற்படாத நிலை உண்டாகிவிடும்.

இந்த சுலோக பலன் ஸ்திரீ வச்ய பலப்ரதம்.

13




காரீயத் தகடு அல்லது தங்கத் தகட்டில் இந்த யந்திரத்தை எழுதி 6 தினங்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

நைவேத்யம்: திரிமதுரம் அல்லது அன்னம்.

இத்தகைய சக்தி வாய்ந்த கடைக்கண் பார்வை தனக்குக் கிடைக்க வேண்டும் என்று 57ம் சுலோகத்தில் பிரார்த்திக்கிறார். (த்ருசா த்ராகீயஸ்யா என்று ஆரம்பமாகும் சுலோகம்)


அம்மா! நீலோத்பல மலரைத் தோற்கடிப்பதாகவும் காது வரை நீண்டதாகவுமுள்ள உன் கடைக்கண் பார்வை உன் பக்தர்களுக்கு மட்டுமல்லாது உன்னைக் கையெடுத்துத் தொழாமலும் உன்னையே நினைக்காமலும் இருக்கும்படியான பாமர மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார். என்ன கருணை இருந்தால் இம்மாதிரி பிரார்த்திக்கத் தோன்றும்!

அந்த சுலோகம்

த்ருசா த்ராகீயஸ்யா தரதலித நீலோத்பலருசா
தவீயாம்ஸம் தீநம் ஸ்நபயா க்ருபயா மாமபி சிவே।
அநேநாயம் தந்யோ பவதி ந ச தே ஹாநிரியதா
வநே வா ஹர்ம்யே வா ஸமகரநிபாதோ ஹிமகர: ॥ 57 ॥

என்னிடமுள்ள புண்ய பாவத்தை கவனிக்காமல் நீ கடாக்ஷிக்க வேண்டும்.

இந்த சுலோகம் சகல சௌபாக்யங்களையும் தரவல்லது.

57 


ஸ்வர்ணத் தகட்டில் இந்த யந்திரத்தை எழுதி 6 தினங்கள் தினம் 25000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்,

தேன், பாயஸம் நைவேத்யம்.

## தேவியின் தாடங்க மகிமை

*ஸுதாமபி ஆஸ்வாத்ய ப்ரதிபயஜரா ம்ருத்யுஹரிணீம்*
*விபத்யந்தே விச்வே விதிசதமகாத்யா திவிஷத : ।*
*கராலம் யத்க்ஷ்வேலம் கபலிதவத: காலகலநா*
*ந சம்போ: தந்மூலம் தவ ஜநநி தாடங்கமஹிமா ॥ 28 ॥*

ஞானேந்திரியமான காது ஓம்கார ரூபம். காது குத்தினால் ம் என்ற பிந்து சேரும். இல்லையேல் வெறும் ஓவாகவே இருக்கும். இந்தக் காதில் அம்பிகை தாடங்கத்தை அணிந்திருக்கிறாள்.

ஸ்திரிகளுக்கு முக்கியமான சௌபாக்ய ஆபரணங்களில் ஒன்று தாடங்கம். (ஓலை அல்லது தோடு) இந்த தாடங்க மகிமையே புருஷர்களின் தீர்க்காயுளுக்கு காரணம். அம்பிகை ஸ்ரீசக்ரத்தையே தாடங்கமாக அணிந்து கொண்டிருக்கிறாள்.

அமிருதம் உண்ட இந்திராதி தேவர்கள் பிரளயத்தில் மறைந்து விடுகிறார்கள். ஆனால் ஆலகால விஷமுண்ட சிவ பெருமான் பிரளய காலத்திலும் அழியாது இருக்கிறாரே இது உன் தாடங்கத்தின் மகிமையால்தான்,

அம்பிகையின் தாடங்கம் ஸ்ரீசக்ரமே.

கால ஸ்வரூபிகளான சூரிய சந்திரர்கள் உலகில் உள்ளவர்களின் உயிர்களை நாள் தோறும் விழுங்குபவர்கள். ஆயினும்

அவர்கள் தேவியினிடம் அடங்கி அவளுடைய அங்கங்களாகவும் ஆபரணங்களாகவும் ஆகி விடுகின்றனர்.


சூர்ய சந்திரௌ ஸ்தனௌ தேவ்யாஸ் தாவேவ
நயனே ஸம்ருதௌ | உபௌ தாடங்க யுகளம்
இத்யேஷா வைதிகீ ச்ருதி: ||

இதனால்தான் பதிவிரதைகள் ஒருபோதும் காதில் பூஷணம் இல்லாமல் இருக்கக் கூடாது என்கிறது அருண மோதினி.

(காதில் அணிவதை ஓலை என்பார்கள். பனை ஓலையைச் சுருட்டி காதில் அணிவது பழங்கால வழக்கம். வைரத்தால் ஆன தோடும் வைர ஓலை என்றே வழங்கப்படுகிறது)

திருவானைக் காவின் அம்பிகை அகிலாண்டேஸ்வரி ஸ்ரீசக்ரத்தையே தாடங்கமாக அணிந்து கொண்டிருக்கிறாள்.

இந்த சுலோகம் அம்பிகையின் பதிவ்ரத மகிமையைப் புகழ்கிறது.




இந்த சுலோகத்தின் பலன் சகல விஷபய நிவ்ருத்தி. ஸகல கார்ய ஸித்தி. இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி தினம் 1000 வீதம் 45 நாட்கள் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

த்ரிமதுரம், பால் பாயஸம், தாம்பூலம் நைவேத்யம்.

## நஞ்சு நீக்கும் நாயகி

அம்பிகையை நஞ்சை நீக்கும் நாயகியை அபிராமி பட்டர் குறிப்பிடுகையில் வார்சடையோன் அருந்திய நஞ்சை அமுதாக்கிய நாயகி என்கிறார்.

இந்த அம்பிகையை ஆதிசங்கரர் 20-வது சுலோகத்தில் குறிப்பிடுகிறார்.

கிரந்திமங்கேப்ய: கிரண நிகுரும்பாம்ருதரஸம்
ஹ்ருதி தவாமாதத்தே ஹிமகர சிலாமூர்த்திமிவய: |
ஸ ஸர்ப்பாணும் தர்பம் சமயதி சகுந்தாதிப இவ
ஜ்வர ப்ருஷ்டாந் த்ருஷ்ட்யா ஸுகயதி ஸுதாதார ஸிரயா
|| 20 ||

இந்த சுலோகத்தை ஆறுமாத காலம் விடாது பாராயணம் செய்தால் கருடாம்ஸம் பெற்று பார்வையிலேயே விஷத்தைக் குணப்படுத்தலாம்.

உன்னைத் தியானம் செய்பவன் விஷம், ஜ்வரம் இவைகளைப் போக்கும் சக்தி பெறுகிறுன்.

இதில் கருடப் பிரயோகம் குறிப்பிடப்படுகிறது. இந்த சுலோகத்தைச் சொல்லி தேவியை ஆறு மாத காலம் விடாது வழிபடுபவன் பக்ஷிராஜாவான கருடனுக்கு சமானமாகிறுன்.

குருமுகமாக ஸ்ரீவித்யை தீக்ஷை செய்து கொண்டுள்ள உபாஸகர்களுக்கே இப்பிரயோகத்தில் அதிகாரம் ஏற்படும். இதில் சித்தி ஏற்பட்டால் எப்பேர்ப்பட்ட விஷத்தையும் இறக்கலாம், ஜ்வரத்தையும் தணிக்கலாம்.

அமிருதம் கடைந்தபோது ஏற்பட்ட ஆலகால விஷம் தன்னைத் தாக்காமலிருக்க மகாவிஷ்ணு அம்ருதேஸ்வரியை தியானம் செய்ததாகக் கூறப்படுகிறது. இவளுக்குத் தாரா என்றும் பெயர்,

இந்த சௌந்தர்ய லஹரி சுலோகத்தை 16 ஆவ்ருத்திக்குக் குறையாமல் அம்பிகா தியானத்துடன் சொல்லிக் கொண்டு விபூதியையோ தீர்த்தத்தையோ மந்திரித்து நோயாளிகளுக்குக் கொடுத்தால் சகல ரோக நிவ்ருத்தியும் ஏற்படுகிறது என்று தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் குறிப்பிடுகிறுர்.

## கருடோப நிஷத்


சந்திர மண்டல சங்காச
ஸூர்ய மண்டல முஷ்டிக
பிருத்வீ மண்டல முத்ராங்க
ஸ்ரீ மஹா கருடாய விஷம் ஹர ஹர
ஹூம்பட் ஸ்வாஹா ||

ஓம் க்ஷிப் ஸ்வாஹா
ஓம் ஸ சரதி ஸ சரதி

தத்காரீ மத்காரீ
விஷாரூஞ்ச விஷரூபிணி
விஷதூஷிணி விஷ சோஷணி
விஷநாசினி விஷ ஹாரிணி
ஹதம் விஷம் நஷ்டம்
விஷம் அந்த: ப்ரலீனம்
விஷம் பிரநஷ்டம் விஷம்
ஹதம் தே பிரஹ்மணு விஷம்
ஹதம் ஹதமித்ரஸ்ய
வஜ்ரேண ஸ்வாஹா

இதை தினம் 100 ஆவர்த்தி எவ்வித பலனும் எதிர் பார்க்காமல் செய்து வந்தால் மிகவும் சிரேஷ்டமானது.

20




இந்த யந்திரத்தை விபூதியில் எழுதி 25 நாட்களுக்கு தினம் 1000 தடவை இந்தச் சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்,

பால் பாயஸம் நைவேத்யம்.

பலன்: விஷ நிவ்ருத்தி


அம்பிகையின் பாதிவ்ரத்யம் பற்றி பேசும் மற்ெருரு சுலோகம்

விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்நோதி விரதிம்
விநாசம் கீநாச: பஜதி தநதோ யாதி நிதனம்
வித்ந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலித த்ருசா
மஹாஸம்ஹாரேஸ்மிந் விஹரதி ஸதி த்வத்பதிரஸௌ ||
26 ||

பிரும்மா, விஷ்ணு, யமன் முதலியவர்கள் மகா பிரளய காலத்தில் அழிந்து விடுகிறார்கள். அம்பிகையின் கணவரான சதாசிவன் மட்டும் பராசக்தியோடு இருந்து வருகிறார். இதற்குக் காரணம் அம்பிகையின் பாதிவ்ரத்யமே.

இந்த வழிபாட்டால் சத்ரு நாசனம் ஏற்படுகிறது.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகடு அல்லது காரீயத் தகட்டில் எழுதி 6 அமாவாஸ்யை தினங்கள் தினம் 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்,



26

நைவேத்யம் சர்க்கரைப் பொங்கல். சத்ரு நாசனம்.

## மூக்கு

ஒரு பெண்ணின் அழகை வர்ணிப்பது என்றால் "மூக்கும் முழியுமா என்ன அழகு!" என்கிறோம்.

அன்னை பராசக்தியின் மூங்கில் போன்ற மூக்கின் வலது பக்க மூக்கு வழியே (சூரிய நாடி-இடா) இழுக்கப்படும் காற்றானது இடது பக்கமான (சந்திர நாடி-பிங்கலை) மூக்கு வழியே வெளிவந்து மூங்கில் கணுக்களில் முத்து தங்குவது போல இடது நாசியின் மூக்குத்தியில் தங்கியும் நடுநாசியான அக்னி நாடி (சுழுமுனை)யில் புல்லாக்கிலுள்ள முத்தாகத் தொங்குகிறதாம்-

முத்துப் போன்ற பற்கள் என்றுதான் கூறுவதுண்டு. ஒரு கவிஞன் பற்கள் போன்ற முத்து என்று வர்ணித்துவிட்டானும். முத்துக்கு அவமானம் வந்து அந்தப் பற்கள் முன்பே புல்லாக்காக தூக்கு போட்டுக் கொண்டுவிட்டதாம்.

பாண்டியநாடு முத்துடைத்து அல்லவா! ஆகவே பாண்டிய ராஜகுமாரியான மீனாக்ஷியின் விசேஷ ஆபரணம் மூக்குத்தி தான்.

ஞானிகள் செய்யும் பிராணாயாமத்தை அம்பிகை நாஸாபரணம் மூலம் விளக்குவதாக ஆதிசங்கரர் 'அஸௌநாஸா' என்று ஆரம்பமாகும் ஸௌந்தர்யலகரி 61-ம் சுலோகத்தில் குறிப்பிடுகிறார்.

## மூக்கு வர்ணனை


அம்பிகையின் மூக்கு நாஸிகை மூங்கில் போல அடிபெருத்து நுனி சிறுத்து இருக்கிறது. மூங்கிலில் முத்து பிறக்கும், அம்பிகை மூக்கிலும் நல்முத்துகள் ஒளி விடுகின்றன.

பிராணாயாமம் செய்தால் முத்து போல நல்ல பலன் கிடைக்கும் என்பதை அம்பிகை அணிந்துள்ள முத்து காட்டுகிறது.

மூக்குத்தி சுமங்கலிகள் அணிந்திருக்க வேண்டிய முக்கிய மான ஆபரணங்களில் ஒன்று மூக்கில் மூக்குத்தி, காதில் தோடு. இவையில்லாமல் மனைவி கணவன் முன் வரக்கூடாது என்று வாத்ஸாயனர் கூறுகிறார். இதைப் பற்றிய சுலோகம்

அஸௌ நாஸாவம்ச: துஹிநகிரிவம்ச த்வஜபடி
த்வதீயோ நேதீய: பலது பலம் அஸ்மாகமுசிதம்।
வஹத்யந்தர் முக்தா: சிசிரகர நிச்வாஸ கலிதம்
ஸம்ருத்யா யஸ்தாஸாம் பஹிரபி ஸ முக்தாமணிதர: || 61 ||

அம்பிகையின் முத்து ஆபரணம் அணிந்த நாஸிகையை தியானம் செய்பவர்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும்.




இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 8 தினங்கள் தினம் 12000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். ஸகல கார்ய ஜயம்.

முத்ரான்னம், தேங்காய், பழம், தேன் நைவேத்யம்.

## வாயிதழ் பவளம்

''நவ வித்ரும பிம்பஸ்ரீ ந்யக்காரி தசனச்சதா'' என்கிறது லலிதா சகஸ்ரநாமம். புதிய பவளம், கோவைப் பழம் ஆகிய வற்றின் ஒளியை மங்கச் செய்கின்ற இதழ்களுடையவள் அம்பிகை என்பது இதன் அர்த்தம்.

பவளக் கொடியிற் பழுத்த செவ்வாயும்
பனி முறுவல் தவளத் திருநகை

என்கிறார் அபிராமி பட்டர். பனி முறுவலையுடைய தவளத் திருநகை என்பது அம்பிகையின் பல் வரிசைகளைக் குறிப்பிடு கின்றன. பவளமும் முத்தும் வரிசை வரிசையாக வைத்தது போல மேலும் கீழும் போன்ற உதடுகள் அவைகளுக்கு இடை யில் முத்துப் போன்ற பல் வரிசை. இப்பல் வரிசைகள் சுத்தி வித்யையின் முளைகள் என்கிறது லலிதா சகஸ்ரநாமம். (சுத்த வித்யாங்குரா காரத்விஜ பங்க்தி த்வயோஜ்வலா)


அம்பிகை உதடு பற்றிய வர்ணனை சுலோகம்.

ப்ரக்ருத்யா ரக்தாயாஸ்தவ ஸுததி தந்தச்சதருசே:
ப்ரவக்ஷ்யே ஸாத்ருச்யம் ஜனயது பலம் வித்ருமலதா |
ந பிம்பம் தத்பிம்ப ப்ரதிபலநராகாத் அருணிதம்
துலாம் அத்யாரோடும் கதமிவ விலஜ்ஜேத கலயா || 62 ||

அம்பிகையின் உதட்டுக்கு சமானம் அவளுடைய உதடுகள் தான். பவழமோ கோவைப் பழமோ லஜ்ஜைப்பட்டு ஒப்பிடச் சம்மதிக்காது. இப்படி அம்பிகையை தியானம் செய்பவர்கள் சர்வ ஸம்ருத்தியோடும் கூடினவர்களாவர்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 8 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். பலன் நித்ராப்ரதம், ஸகல கார்ய ஜயம்.

நைவேத்யம் மாஷான்னம், ஜபத்திற்குப் பின் யந்திரத்தைத் தலைகாணிக்கடியில் வைக்கவும்.



62

## புன்சிரிப்பு (மத்தஸ்மிதம்)

பெண்கள் சிரித்த முகத்துடன் எப்போதும் இருந்துவந்தால் அவள் குடும்பத்தில் சந்துஷ்டி ஏற்படும். சாந்தி இருக்குமிடத்தில் சந்துஷ்டி தானுகவே வரும். சிரிப்பு, புன்னகை சந்தோஷத்தின் அடையாளமே. உஷஸ் தேவதையை வர்ணிக்கும் ரிக் வேதம் சிரித்த முகத்துடன் அத் தேவதை விளங்குவதாக கூறுகிறது.

தியான சுலோகங்களில் அம்பிகை சிரித்த முகத்துடன் இருப்பதாக வர்ணிக்கப்படுகிறது.

அம்பிகைக்கு புன்முறுவல் (மந்தஸ்மிதம்) ஏற்படக் காரணமுண்டு என்கிறுர் ஆதிசங்கரர்.

ஜீவன்கள் தடுமாறுவதைக் கண்டு புன்னகை. அனுதி கர்ம வாசனை மூலம், உயிரிலும் ஊனிலும் ஆத்ம சக்தியாகவுள்ள தன்னையே மறைப்பதைப் பார்த்து மந்தஸ்மிதம். போற்றத் தகாத இடத்தைப் போற்றி, தூற்ற வேண்டிய இடத்தைத் ஸ்துதித்து, மாற்றவேண்டிய மனப்போக்கை மாற்ருமல் காமக்

குரோதங்களால் ஆடும் உயிர்களைப் பார்த்து அம்பிகை புன்னகை செய்கிறாளாம்.

மற்றொரு திருநாமம் அன்னையின் புன்முறுவலைப் பற்றிச் சொல்கிறது. காமேஸ்வரர் அம்பிகையின் புன்முறுவலில் தோன்றும் ஒளி வெள்ளத்தில் மூழ்கி இன்பத் திணறலை அடைகிறாராம். ''மந்தஸ்மித பிரபாபூர மஜ்ஜத் காமேச மாநஸா'' ''சாருஹாஸா'' என்ற நாமம் அழகுப் புன்னகையையுடையவள் என்ற அர்த்தம் கொண்டது.

இந்த புன்சிரிப்பை 100 சுலோகங்களில் மந்தஸ்மித சதகம்□ என்று மூகசங்கரர் புகழ்ந்திருக்கிறார்.

காதலன் காதலியின் பேச்சுக்காக ஏங்கி அவள் வாயையே பார்த்துக் கொண்டிருக்க அவள் மெல்ல புன்முறுவல் காட்ட, அந்த முறுவலில் உறவுக் குறிப்புத் தோன்றுவதை உணர்ந்து மகிழ்ந்து அவளை அணுகுவான். (இதைத்தான் ''பெண் சிரித்தாள் போச்சு'' என்பார்கள்) அகப் பொருள் நூல்களில் ''முறுவற் குறிப்புணர்தல்'' என்ற ஒரு துறையுண்டு. இறைவன் அக்குறிப்புணர்ந்து அணுகி அம்பிகையோடு ஒன்றுபடுகிறார்.

''ஆனந்தம் என்பது ஸ்தூல உருவத்தில் ஆடம்பரமாக இருந்தாலும் சூக்ஷ்மநிலையில் மனதிற்கு சாந்தியைக் கொடுக்கும் தத்துவமாகவே இருக்கிறது'' என்று பிருஹதாரண்ய உபநிஷத் கூறுகிறது.

சாந்தி என்பது என்ன? வெண்ணெய் உருக்கப்படுகிறது. சப்தமிடும் வரை அது நெய்யாக மாறவில்லை. பக்குவமாகும் போது ஓசை குறைகிறது. பக்குவ வாசனை அக்கம்பக்கம் பரவி மணக்கச் செய்கிறது. வெண்ணெயின் சாந்த நிலையே நெய்.

மனிதன் வாழ்வில் சத்குரு கடாக்ஷத்தால் அக்ஞான ஓசை நின்று ஞானப் பசி வந்தால் மன அடக்கமும் புலன் அடக்கமும் அடைகிறான், சத்குரு கடாக்ஷம் கிடைத்தால் ஞானக் கண் திறக்கும். 'நான்' என்ற துர்நாற்றம் ஒழியும். சாந்தம் ஏப்பட்டால் கூடவே ஆனந்தமும் ஏற்பட்டுவிடும். இந்த சாந்தி ஏற்பட அம்பிகை துணை புரிகிறாள்.

ஆனந்தம் என்பது ஆத்மாவிற்கு ஒரு ஊன்றுகோல். அதைப் பெற்றால்தான் ஆத்ம சாந்தியைப் பெற முடியும்.

---

□ பிரதிபாவின் ''மூக பஞ்ச சதி'' புத்தகத்தில் மூகசங்கரரின் 5 சதகங்களும் விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளன.

அம்பிகை அனுக்கிரகம் இருக்கிற இடத்தில் புஷ்டி ஏற்படும். புஷ்டியின் அடையாளமாகவே பெண் தெய்வ வழிபாடு இருந்து வருகிறது.

## அம்பிகையின் வாக்விலாசம்

விபஞ்ச்யா காயந்தீ விவிதமபதாநம் பசுபதே!
    த்வயாரப்தே வக்தும் சலிதசிரஸா ஸாதுவசநே |
ததீயைர் மாதுர்யைரபலபிததந்த்ரீகலரவாம்
    நிஜாம் வீணும் வாணீ நிசுலயதி சோலேந நிப்ருதம் || 66 ||


சரஸ்வதியுடைய வீணையின் அபார வாசிப்பைக் கேட்டு மிக சந்தோஷித்து 'சபாஷ்' என்ற சொல்லின் சப்தத்தைச் சொல்ல ஆரம்பித்தாள். அந்த இனிமையான மதுரசப்தத்தைக் கேட்டு சரஸ்வதி லஜ்ஜைப்பட்டு தன் வீணு வாத்யத்தை உறைக்குள் போட்டு விட்டாள். இவ்விதம் தேவியின் வாக்விலாசத்தை தியானம் செய்பவர்கள் தன் வாக்சாதுர்யத்தால் எல்லோரை யும் தன் வசமாக்கிக் கொள்வர்.

இந்த சுலோகப் பலன் வீணை முதலிய சர்வ சங்கீதப்ரதம் ரோக நிவ்ருத்தி ஏற்படும்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகடு அல்லது விபூதியில் எழுதி 3 நாட்கள் தினம் 5000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

குடான்னம் நைவேத்யம்,

66




சகல வித்தை, கலையில் திறமை பெற விரும்புவோர்களுக்கு 15, 16, 17 சுலோகங்கள் மிக முக்கியம்.

## கவித்வப் ப்ராப்தி

சரஜ்ஜ்யோத்ஸ்ஞ சுத்தாம் சசியுத ஜடாஜூட மகுடாம்
    வரத்ராஸத்ராண ஸ்படிக கடிகா புஸ்தககராம் |
ஸக்ருந்நத்வா நத்வா கதமிவ ஸதாம் ஸந்நிததேதே
    மதுக்ஷீரத்ராக்ஷா மதுரிமதுரீணு: பணிதய: || 15 ||

அம்பிகையை உபாசிக்கும் ஸ்ரீவித்யா உபாசகர்களுக்கு சகல வித்யைகளிலும் அபாரமான பாண்டித்யமும் ஸ்வய


மாகவே கவனம் செய்யக் கூடிய சக்தியும் ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சரஸ்வதி கடாக்ஷத்தால் வித்யையில் உயர்வடைய விரும்பு பவர் தேவியை தியானம் செய்ய வேண்டிய முறை கூறப்படு வதால் இது ''ஸாரஸ்வத பிரயோகம்'' எனப்படும். (இதையே அடுத்து வரும் இரு சுலோகங்களும் குறிப்பிடுகின்றன)

''ஜபம் செய்தால் என்னைக் காணலாம். கல்வி அனைத்தை யும் என் கடாக்ஷத்தால் பெறலாம்'' என்பதைக் குறிப்பிடவே தேவி புஸ்தகத்தையும் ஸ்படிக மாலையையும் கையில் கொண் டிருக்கிறுள். தேவியின் நான்கு கைகளிலும் அபயமும், வரத மும், ஸ்படிக மாலையும், புத்தகமுமாக இருப்பனவாக தியானிப் பது வாக்கு சித்தி தந்திரம் எனப்படும்.

கவன சக்தி, வித்யா லாபம்.

15




ஸ்வர்ண த் தகடு, ரகைஷ், ஜலம், (ஜலத்தை ஜபத்திற்குப் பின் உட்கொள்ளவும்) தினம் 1000 விதம் 45 நாட்கள் இந்த சுலோகத்தை ஜபம் செய்யவும்.

நைவேத்யம் — தேன், பழம். சர்க்கரை.

## வித்யா விலாஸம்

கவீந் த்ராணும் சேத:கமலவந பாலாதபருசிம்
பஜந்தே யே ஸந்த: கதிசித் அருணமேவ பவதீம் |
விரிஞ்சி ப்ரேயஸ்யா: தருணதர ச்ருங்காரலஹரீ
கபீராபி: வாக்பி: விதததி ஸதாம் ரஞ்சநமமீ || 16 ||

இதுவும் சாரஸ்வத பிரயோக சுலோகம். சரீரத்தில் இருதய கமலத்தில் அம்பிகையை தியானம் செய்ய வேண்டும்.

ஹிருதயத்தில் வாசம் செய்யும் அம்பிகைக்கு 'அருண' என்று பெயர். நிறம் சிவப்பு. சூரியன், சந்திரன், அக்னி மூன்று கண்கள். இவர் அக்ஷர ரூபமானவள்.

இந்த தியானத்திற்கு உபயோகமாகவுள்ள வாமகேச தந்திரத்திலுள்ள சுலோகம்:


அருணாக்யாம் பகவதீம் அருணாபாம் விசிந்தயேத்
பாசாங்குசதராம் தேவீம் தநுர் பாணதாராம் சிவாம் ||
வரதாபய ஹஸ்தாஞ்ச புஸ்தகாக்ஷஸ் ரகந்விதாம்
அஷ்ட பாஹூம் த்ரிநயநாம் கேலநதீம் அம்ருதாம்புதௌ ||
ஸாகரத்யேவ ச்ருங்கார ஸாஸ் வாதந லம்படாந்
ஸபாத: ததா ஸர்வாந் ஸாதி கேந்த்ர: ஸபாஸ்தல : ||

அருண நிறமுள்ள இந்த அம்பிகையை எட்டு கைகள் உடையவளாக தியானிப்பதை காமராஜகூட தந்திரம் என்பர்,

சதுர்வேத வித்யா பிரதம்
பைசாச நிவ்ருத்தி.

ஸ்வர்ண தகட்டில் எழுதி தினம் 1000 தடவை வீதம் 45 நாட்கள் ஜபம் செய்யவும்.

நைவேத்யம் தேன்.




## வாக்விலாச வைபவம்


ஸவித்ரீ பிர்வாசாம் சசிமணி சிலாபங்கருசிபி :
வசித்யாத்யாபி: த்வாம் ஸஹ ஜநநி ஸஞ்சித்தயதி ய : |
ஸ கர்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கிருசிபி :
வசோபி: வாக்தேவீவதன கமலாமோத மதுரை: || 17 ||

இதுவும் ஸாரஸ்வத பிரயோகத்தைக் கூறும் ஸ்லோகமே. அம்பிகையினுடைய ஸ்வரூபம் அகாரம் முதல் ள காரம் முடிவான ஐம்பது மாத்ருகா வர்ணங்கள் என்கிற பீஜாக்ஷரம் என்று ஸ்ரீவித்யா தந்திரங்களில் கூறப்பட்டுள்ளன.

இந்த 50 அக்ஷரங்களேயும் எட்டு பாகங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

'அ' வர்க்கம்
'க' ,,
'ச' ,,
'ட' ,,
த' ,,
'ப' ,,
'ல' ,,
'ஸ' ,,

அம்பிகையினிடமுள்ள வாக்தேவதைகள்: வசினி காமேச்வரி, மோதினீ விமலா, அருணா, ஜயினீ, ஸர்வேஸ்வரீ, கௌலினீ, தேவியையும் இவர்களையும் சேர்த்து தியானிப்பதற்கு சக்திகூட தந்திரம் என்று பெயர்.



17

சகல சாஸ்திர வித்யாப்ரதம். வர லாபம்.

ஸ்வர்ணத் தகட்டில் எழுதி தினம் 1000 வீதம் 45 நாட்கள் இந்த சுலோகத்தை ஜபிக்க வேண்டும்.

நைவேத்யம் தேன், பால், கரும்பு, சர்க்கரை.

## முகவாய்க்கட்டை வர்ணனை

கராக்ரேண ஸ்ப்ருஷ்டம் துஹிநகிரிணா வத்ஸலதயா
கிரீசேன உதஸ்தம் முஹு: அதரபாநாகுலதயா |
கரக்ராஹ்யம் சம்போ : முகமுகுர வ்ருந்தம் கிரிஸுதே
கதம்காரம் ப்ரூம: தவ சுபுகம் ஔபம்யரஹிதம் || 67 ||

அம்பிகை முகம் கண்ணாடி போல் இருக்கிறது. அதற்குக் கைப்பிடி போல முகவாய்க்கட்டை விளங்குகிறது.


இந்த முகவாய்க்கட்டையைத் தொட்டு முகத்தை நிமிர்த்தும் பாக்கியம் பரமேஸ்வரன் ஒருவருக்கே உண்டு, ஆகவே இந்த இடத்தில் தேவியின் சௌபாக்யம் அபாரமாக விளங்குகிறது.

இவ்விதம் தேவியை அதாவது பரமசிவன் தேவியின் முகத்தை முகவாய்க்கட்டையைத் தொட்டு நிமிர்த்துவதாக தியானம் செய்பவர்களுக்கு சகல வித்யைகளும் கண்ணாடியில் பிரதிபிம்பம் பிரகாசிப்பது போல தானே பிரகாசிக்கும். இதன் பலன் ராஜ வசியம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

க்ஷீர பாயஸம், தாம்பூலம் நைவேத்யம்.

67




## அம்பிகையின் நாக்கு வர்ணனை

அவிச்ராந்தம் பத்யுர்குணகண கதாம்ரேடநஜபா
ஜபாபுஷ்பச்சாயா தவ ஜநநி ஜிஹ்வா ஜயதி ஸா ।
யதக்ராஸீநாய: ஸ்படிகத்ருஷதச்சச்சவிமயீ
ஸரஸ்வத்யா மூர்த்தி: பரிணமதி மாணிக்யவபுஷா ।। 64 ।।

அம்பிகையின் நாக்கு செம்பருத்தி புஷ்பம்போல் சிவப்பாக இருந்து வருகிறது. அம்பிகை தன் கணவர் பிரதாபத்தை தன் தோழிகளிடம் அடிக்கடி சொல்லி வருகிறாளாம். இந்த நாக்கின் உள் பாகத்தில் சரஸ்வதி தேவி வசித்து வருகிறாள். அவள் நிறம் வெளுப்பு. அவள் சிவப்பு நிறத்தில் மாறிவிட்டாள்.

64



சகலகாரிய ஸித்தி. ஸ்திரீகளுக்கு சகலரோக நிவாரணம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 18 நாள் தினம் 25000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்,

குள பாயஸம் நைவேத்யம்.

# காமராஜகூடம் 5

## தேவியின் கழுத்து பாக வர்ணனை

புஜாச்லேஷாந்நித்யம் புரதமயிது: கண்டகவதி
தவ க்ரீவா தத்தே முககமலநாலச்ரியம் இயம் ।
ஸ்வத: ச்வேதா காலாகுருபஹுளஜம்பலமலிநா
ம்ருணாலீலாலித்யம் வஹதி யததோ ஹாரலதிகா ।। 68 ।।

முகமாகிய தாமரை புஷ்பத்திற்கு தேவியின் கழுத்துதண்டு போல இருக்கிறது. இவ்விதம் தியானம் செய்பவர்களுக்கு ஸத்வாஸனை ஏற்படும்.

தன் கணவனை ஆலிங்கனம் செய்த தன் காரணமாக தேவிக்கு மயிர்கூச்சல் ஏற்படுகிறதாம். அப்போது சூக்ஷமமான முள் கண்டப் பிரதேசத்தில் காணப்படுகிறதாம்.

## குருமுகமாக அறியவும் 68

இதில் யந்திரம் பலன் எதுவும் போடாமல் குருமுகமாக அறிந்து கொள்ளவும் என்று போட்டிருப்பதன் காரணம் தேவி முக்கியமாக ஸ்ரீவித்யை உபாசனை மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும். அந்தர்முக ஸமாராத்யா பஹிர்முக ஸு துர்லபா என்கிறது லலிதா சகஸ்ர நாமம்.

ஸ்திரீகளுக்கு நெற்றியிலும் கழுத்திலும் வயிற்றிலும் மூன்று ரேகைகள் காணப்பட்டால் அது பரம சௌபாக்யத்தைக் குறிக்கும். தேவி பரம சங்கீத ரசிகை☐ என்பதை இம்மூன்று கழுத்து ரேகைகள் உணர்ந்துகின்றன. ராகங்கள் ஷட்ஜம், மத்யமம், காந்தாரம் என்ற மூன்று விதமான கிராமங்களிலிருந்து உற்பத்தியானவை ஆகும். ஆகவே இடம் மூன்று ரேகைகளும் சங்கீதத்தைக் குறிப்படுகின்றன.

பரமேஸ்வரன் அம்பிகையின் கழுத்தில் மாங்கல்யதாரணம் செய்யும்போது சிவ சூத்திரசூக்ஷமங்களையும் சரட்டில் சேர்த்துக் கட்டியிருக்கிறார். இவ்வித சரங்கள் கட்டப்பட்ட காரணத்தால் அதன் வரம்புகள் தானோ என்று இந்த ரேகைகளைப் பார்க்கும் போது தெரிகிறது.

இதன் ஸ்லோகம்

கலே ரேகாஸ்திஸ்ரோ கதிகமக கீதைகநிபுணே
விவாஹவ்யா நத்தப்ரகுண குணஸம்க்யா ப்ரதிபுவ: ।
விராஜந்தே நாநாவிதமதுரராக ஆகரபுவாம்
த்ரயாணாம் க்ராமாணாம் ஸ்திதிநியம ஸீமாந இவ தே
॥ 69 ॥


---

☐ இதன் விளக்கம் பிரதிபாவின் "நாதோபாஸனை"யில் காணவும்.

இதன் பலன் சகல காரிய சித்தி.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி கணவனும் மனைவியும் சேர்ந்து ஜபிக்கவும். 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகம் பாராயணம் செய்யவும்.

தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, தேன் நைவேத்யம்.




69

ஸௌக்ஷ்ம அர்த்தம்

கண்டம் என்றாலே பாதி ஸ்ரீயை (விஷத்தை) கண்டத்தில் உடையவராகையால் பரமசிவனுக்கு ஸ்ரீகண்டன் என்று பெயர் பரபிரும்மம், பதிபத்னீ என்று இரண்டாக ஏற்பட்டதை பிருஹதாரண்ய உபநிஷத் "ஆத்மை வேதமக்ர ஆஸீத்" என்ற வாக்கியத்தால் ஆரம்பித்து "ஸ இதமே வாத்மானம் த்வேதா பாதயத் சத: பதிச்ச பத்னீ சாபவதாம்" என்று சொல்லப் பட்டிருக்கிறது.

வாகுர்பூதா பராசக்திர்யா
சித்ரூபா பராபிதா
வந்தே தாமநிசம் பக்தயா
ஸ்ரீகண்டார்த்த சரீரிணீம்

—ஸூதஸம்ஹிதை

சைவ சாஸ்திரங்களில் சொல்லப்படும் மகா நியாஸத்தில் பூர்ணோதரி முதலிய சக்திகளால் இடதுபாகத்திலும் ஸ்ரீகண்டன் முதலிய சிவ மாத்ருகைகளால் வலது பாகமும் நியாகம் செய்யப் பட வேண்டும்.


## தேவியின் சதுர்புஜங்கள் வர்ணனை

ம்ருணாலீம்ருத்வீநாம் தவ புஜலதாநாம் சதஸ்ருணாம்
சதுர்பி: ஸௌந்தர்யம் ஸரஸிஜபவ; ஸ்தௌதி வதனை: |
நகேப்ய: ஸந்த்ரஸ்யந் ப்ரதமமதனாத் அந்தகரிபோ:
சதுர்ணாம் சிர்ஷாணாம் ஸமம் அபயஹஸ்தார்ப்பணதியா
|| 70 ||

அம்பிகையின் கரங்கள் ஸ்வர்ணக் கொடி போல விளங்குகின்றன. இந்த நான்கு கைகளின் சௌந்தர்யத்தை பிரும்மா தன் நான்கு முகங்களாலும் ஏக காலத்தில் வருணிக்கிறார். தேவியின் அனுக்கிரகம் காரணமாக இந்த நான்கு முகங்களும்

சிவனிடமிருந்து தப்பிப் பிழைத்தது. எந்த விதமான சிவ அபராதத்தையும் தேவியின் கிருபையால் சமாளிக்கலாம் என்பது தெரிகிறது.

70



இந்த தியானம் மூலம் காரிய ஜபம் கிட்டும்.


ஸ்வர்ணத் தகட்டில் இந்த யந்திரத்தை எழுதி 45 நாட்கள் தினம் 1000 விதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்,

ஹரித்ரான்னம், தாம்பூலம் நைவேத்யம்:

நகா நாமுத்யோதை: நவநலிநராகம் விஹஸதாம்
    கராணும் தே காந்திம் கதய கதயாம: கதமுமே |
கயாசித்வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்
    யதி க்ரீடல்லக்ஷ்மீசரணதல லாக்ஷாரஸசணம் || 71 ||

தேவியின் கைவிரல் நகங்கள் ஏற்கனவே சிவப்பாக இருக்கின்றன. இவை காந்தியுடன் விளங்குகிறது. இக்காந்தி உபமானமற்றது. இப்படி தியானம் செய்பவர்கள் லக்ஷ்மி கடாக்ஷம் பெறுகிறார்கள்.

71



இந்த தியான பலன் யக்ஷிணி வச்யம். ஆலமரத்தடியில் உட்கார்ந்து ஜபம் செய்ய வேண்டும்.

இந்த யந்திரத்தை ஸவர்ணத் தகட்டில் வரைந்து 45 நாட்கள் தினம் 12000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.


தேன் நைவேத்யம்.

## தேவியின் மார்பகம்

ஸஹத்யம்ப ஸ்தம்பேரமதநுஜ கும்பப்ரக்ருதிபி:
    ஸமாரப்தாம் முக்தாமணிபி: அமலாம் ஹாரலதிகாம் |
குசாபோகோ பிம்பாதரருசிபி: அந்த: சபலிதாம்
    ப்ரதாபவ்யாமிச்ராம் புரதமயிது: கீர்த்திமிவ தே || 74 ||

அம்பிகை மார்பகத்தில் வெண்மையான முத்துமாலைகளை அணிந்து கொண்டிருக்கிறார். உதட்டின் சிவப்பு அம்மாலைகளில் பிரதிபலிக்கிறது. இப்படி இருப்பது சிவபெருமானின் கீர்த்தி பிரகாசிப்பது போலத் தோன்றுகிறதாம்.

பலன் கீர்த்தி ப்ரதம்




இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 3 நாட்கள் தினம் 12000 தடவை இந்த சுலோகத்தைச் சொல்ல வேண்டும்.

தேன், முத்ரான்னம், பழம் நைவேத்யம்.

## ஞானப்பால் கொண்ட ஸ்தனங்கள்

பால் குடிக்கும் குழந்தைகளின் நோக்கம் எல்லாம் தாயின் ஸ்தனங்கள் பேரிலேயே லயித்திருக்கும் ஒரு பெண்ணுக்குத் தாய்மை ஸ்தானத்தை அளிப்பது ஸ்தனங்களே.

அம்பிகைக்கு உண்ணாமுலை என்ற ஒரு பெயர் உண்டு. கணபதி, முருகன் கூட தாயுணர்ச்சியால் பொங்கி வரும் பாலை உண்டவர்களே. குளக்கரையில் அழுத ஞானசம்பந்தருக்கு அம்பிகை பாலை பொற்கிண்ணத்தில் இட்டுதான் ஊட்டினாள் என்பது வரலாறு.

பக்தர்கள் குழந்தை மனப்பான்மையுடன் அம்பிகையை அணுக வேண்டும் என்பதற்காகவே ஆதிசங்கரர் அம்பிகையின் ஸ்தனங்களை ஒவ்வொரு கடைசி வரியில் குறிப்பிட்டு சாரதா அஷ்டகத்தை இயற்றியிருக்கிறார்.

செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி

என்று அபிராமி பட்டர் குறிப்பிடுகிறார். செப்புக் கலசத்தை ஸ்தனங்களுக்கு உபமானம் காட்டப் படுகிறது.

பொன்னை உருக்கி நகைகள் செய்ய வேண்டுமானால் சிறிதளவு செம்பு கலக்கப்பட வேண்டும். பொன் போன்ற மனத்தவர்களான புண்ணியர்களுக்கும் செம்பு போன்ற அம்பிகையின் அருள் கிடைத்தால்தான் பரிமளிக்கும். மின் சாரத்தைக் கொண்டு செல்ல உபயோகிக்கப்படுவது செம்புக் கம்பிகள்தான்.

செம்புக் கலசம் கோபுரத்தின் உச்சியில் இடம் பெறும். அம்பிகையின் ஸ்தனங்களும் உயர்ந்த ஞான நிலைக்குக் கொண்டு செல்வதாகும்.

செம்புக் கலசம் புனிதமான பொருள். அதைப் போலவே ஸ்தனங்களும் எண்ணத் தக்கது.

அம்பிகையின் ஸ்தனங்கள் ஞானத்தைப் பொதுவாகக் குறிப்பிட்டாலும் ஒன்று பரஞானத்தையும் ஒன்று அபரஞானத்தையும் கொடுப்பது. அபர ஞானம் லௌகிக அறிவு. பரஞானம் தெய்வீக அறிவு.

தூய உடம்பினனுதல் என்பது இறைவனின் எண்குணங்களில் ஒன்று ஆகவே அம்பிகையின் சரீரமும் நம்முடையது போன்ற மாமிச சம்பந்தமான ஊனுடல் அல்ல. அவனுடையது திவ்ய மங்கள சரீரம் என்ற தூய அழகுடல்.

''கரிகலப கும்பஸ்தனந்தா பரிக்ஷீண மத்யே'' என்கிறது சௌந்தர்ய லகரி. அதாவது யானையின் மத்தகம் போன்ற ஸ்தன பாரத்தினால் சற்றே சாய்ந்த மெல்லிடையுடையவள் என்று அர்த்தம். த்ரிசதியும் கடின ஸ்தல மண்டலாயை என்று குறிப்பிடுகிறது.

அம்பிகை தன் இரண்டு ஸ்தனங்கள் கொடுத்து இறைவனின் பிரேமை என்ற ஒன்றை 'பண்டமாற்று' செய்து கொண்டாள் என்று காளிதாஸன் வருணித்திருக்கிறார்.

## சிவபெருமான் அடைந்த தோல்வி

அம்பிகையினிடம் சிவபெருமான் தோல்வியடைந்திருக்கிறார். அத்தோல்வியை அவர் அவமானமாகக் கருதவில்லை. இம்மாதிரி தோல்வியடையவே அவர் விரும்பினார்.

அம்பிகை தன் படைத் தலைவர் இருவரை அனுப்பி அவர்களுக்குத் துணையாக மற்றிருவரை அனுப்பி வெற்றி பெற்றிருக்கிறாள்.

இப்படைத் தலைவர்கள் இருவரும் அம்பிகையின் கொங்கைகளே. இவர்களுக்குத் துணையாகச் சென்றவர்கள் அம்பிகையும் வாயும் புன்னகையும் செவ்வாயையும் புன்முறுவலையும் முன்னிட்டு நகில்கள் இறைவனைத் துவளும்படி பொருதனவாம். இந்த இன்பப் போரை வருணிப்பவர் அபிராமி பட்டர்.

பவளக்கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துடியிடையாள்

அம்பிகை இறைவனோடு ஒன்றுபடுவதினால் உலகமெலாம் இன்பம் பெற்று வளர்ச்சியடைகிறது என்பதை குறிப்பிடவே அபிராமி பட்டர் இப்படி பாடியிருககிறார்.

அம்பிகையுடைய கொங்கைகள் கருணையும் ஞானமுமே. அவற்றிலிருந்து வரும் பால் கருணையையும் ஞானத்தையும் உண்டாக்குகின்றன.

ஆதிநாயகன் கருணையாய் அமலமாய்ப் பரம

போத நிரதாய் இருந்ததன் கொங்கையிற் பொழிபால்
என்கிறது கந்த புராணம்.

ஸ்தனங்கள் பற்றிய சௌந்தர்ய லகரி ஸ்தோத்திரம்


ஸமம் தேவி ஸ்கந்தத்விபவதநபீதம் ஸ்தநயுகம்
தவேதம் ந: கேதம் ஹரது ஸததம் ப்ரஸ்நுதமுகம் |
யதாலோக்ய ஆசங்காகுலிதஹ்ருதயோ ஹாஸஜநக:
ஸ்வகும்பௌ ஹேரம்ப: பரிம்ருசதி ஹஸ்தேநஜடிதி || 72 ||

புத்ர வாஞ்சை காரணமாக கணபதி சுப்பிரமணியம் குழந்தைப் பருவத்தில் அம்பிகை அருகில் வந்ததாலேயே ஸ்தனங்களிலிருந்து பால் ஊறி வழியுமாம். அதை உண்ட அவ்விருவர்களும் அவர்கள் ஈடானவர்கள் இல்லை என்று விளங்கி வருகிறார்கள். விநாயகர் தன் மஸ்தகத்தைதான் அம்பிகை ஸ்தனங்களாக எடுத்து வைத்துக் கொண்டு விட்டாளோ என்று தன் தலையை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொள்கிறாராம்.

இப்படி தியானிப்பவர்களுக்கு சகல பயமும் நிவர்த்தியாகும்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

72




தேன் நைவேத்யம்.

ஒரு அவஸ்தையிலிருந்து மற்றொரு அவஸ்தைக்குப் போகாத நிலை அமிருதம் உண்டவர்களுக்கே சாத்யம். இந்த ஞானப் பாலை உண்டதினாலேயே கணபதியும் முருகனும் சர்வ சக்திமான்களாகவும் சர்வ லோக பூஜ்யர்களாகவும் விளங்குகிறார்கள். இதைக் குறிப்பிடும் சுலோகம் :

அமூ தே வக்ஷோஜௌ அம்ருதரஸமாணிக்யகுதுபௌ
    ந ஸந்தேஹஸ்பந்தோ நகபதிபதாகே மநஸி ந: |
பிபந்தௌ தௌ யஸ்மாத் அவிதிதவதூஸங்கரஸிகௌ
    குமாராவத்யாபி த்விரதவதந க்ரௌஞ்சதலநௌ || 73 ||

அம்பிகையின் ஸ்தனங்களை மோக்ஷ சாதனமான ஞானாம்ருதம் என்று தியானம் செய்பர்கள் ஜீவன் முக்தர்களாவர்.

இதன் பலன் க்ஷீர ஸம்ருத்தி (பால் பெருக்கம்)



73

ஸ்வர்ணத் தகடு அல்லது ஜலத்தில் இந்த யந்திரத்தை எழுதி 8 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

தேன் நைவேத்யம்.

## ஸ்தனப் பாலின் மகிமை

அம்பிகையின் ஸ்தனங்களிலிருந்து பெருகும் பால் ஸாரஸ்வத பிரவாகமோ என்று தோன்றுகிறது. சரஸ்வதி தேவியே அம்பிகை உத்தரவின் பேரில் இப்படிப் பெருகி வருகிறாளோ? அம்பிகையினுடைய ஞானப் பாலை உண்டே ஞான சம்பந்தர் பக்திப் பாடல்களைப் பாடி ஞானவானாக விளங்கினார், இவர் முருகனுடைய அவதாரம் என்று சொல்லப்படுகிறது. இம் மகிமையை விளக்கும் சுலோகம்:

தவ ஸ்தந்யம் மந்யே தரணிதரகன்யே ஹ்ருதயத :
    பய: பாராவார: பரிவஹதி ஸாரஸ்வதமிவ |
தயாவத்யா தத்தம் த்ரவிடசிசு: ஆஸ்வாத்ய தவ யத்
    கவீநாம் ப்ரௌடாநாமஜநி கமநீய: கவயிதா || 75 ||


(திரவிட சிசு என்பது ஞானசம்பந்தரையும் குறிக்கலாம். ஆதிசங்கரர் தன்னேயேயும் குறிப்பிட்டிருக்கலாம்)

அம்பிகையை தியானித்துக் கொண்டு 'ஐம்' என்ற பீஜாக்ஷரத்தை எழுதி தேவியின் ஸ்தன்யமாக பாவித்து குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸ காலத்தில் கொடுத்தால் வித்தை நன்கு வரும்.

பலன் கவன ஸித்தப்ரதம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 3 நாள் தினம் 12000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

தேன், முத்கான்னம், பழம் நைவேத்யம்,





## தேவியின் நாபி வர்ணனே

ஹரக்ரோதஜ்வாலாவலிபி: அவலீடேந வபுஷா
கபீரே தே நாபீஸரஸி க்ருதஸங்கோ மநஸிஜ: |
ஸமுத்தஸ்தெள தஸ்மாத் அசலதனயே தூமலதிகா
ஜநஸ்தாம் ஜாநீதே தவ ஜநநி ரோமாவலிரிதி || 76 ||

சிவபெருமானின் நெற்றிக்கண் சூட்டினைல் வெந்த மன்மதன் அம்பிகையின் நாபி என்ற சரஸில் மூழ்கியதால் ஏற்பட்ட புகையே ரோமாவளி போல காணப்படுகிறதாம்,

தேவியின் நாபி மன்மதனின் இருப்பிடம் என்றே வருணிக்கப் படுவதுண்டு, ஸ்திரீகளின் நாபி பகுதி புருஷர்களின் மோகத்திற்கும் காரணமாக விளங்குகிறது.

இவ்விதம் தியானம் செய்பவர்களுக்கு மோக்ஷ சாம்ராஜ்யம் கிடைக்கும்.

76 

பலன் சகல காரிய ஜயம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 10 தினங்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.


தத்யான்னம், தேங்காய், பழம் நைவேத்யம்,

யதேதத் காலிந்தீ தநுதர தரங்காக்ருதி சிவே
க்ருசே மத்யே கிஞ்சிஜ்ஜநநி தவ யத்பாதி ஸுதியாம் |
விமர்தாத் அந்யோந்யம் குசகலசயோ: அந்தரகதம்
தநூபூதம் வ்யோம ப்ரவிசதிவ நாபிம் குஹரிணீம் || 77 ||

'நான் உன் குழந்தைதானம்மா? இதனால் உன் இடுப்பின் மேல் பாகமுள்ள ரோமாவளியை வர்ணிக்கத் துணிந்தேன். இந்த அபராதத்தைப் பொருத்துக் கொள்' என்று ஆதிசங்கரர் முதலில் குறிப்பிடுகிறார்.

இந்த ரோமாவளி யமுனா நதியின் சூக்ஷ்மமான அலை போல விளங்குகிறது,

உத்தம ஸ்திரீகளுக்கு இரு ஸ்தனங்களின் நடுப் பாகத்திலிருந்து நாபி வரை நீண்ட ரோம வரிசை மெல்லியதாகக் காணப்படும். இது பரம சௌபாக்யத்தைக் குறிக்கும், இப்படி தியானம் செய்பர்கள் ஸர்வக்ஞராக ஆவார்கள்.

77 

பலன் ஸர்வ ஜன வச்யம்.

ரக்த தாமரஸ புஷ்பத்தையும் சுட்ட சாம்பலையும் பசு நெய்யில் கலந்து இதில் யந்திரத்தை எழுதி பாராயணத்திற்குப் பின் நெற்றியில் இட்டுக்கொள்ளவும். 15 நாட்கள் தினம் 2000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

தேன், பழம் நைவேத்யம்.

ஸ்திரோ கங்காவர்த: ஸ்தந முகுல ரோமாவலிலதா
கலா வாலம் குண்டம் குஸுமசர தேஜோ ஹுதபுஜ: |
ரதேர்லீலா காரம் கிமபி தவ நாபிர் கிரிஸுதே
பில த்வாரம் ஸித்தே: கிரிசநயநாநாம் விஜயதே || 78 ||


தேவியின் நாபி கங்கா தேவியில் சுழலோ என்று எண்ணும் படி இருக்கிறது. கங்கை சுழல்கள் ஸ்திரமாக இராது. அதன் தரிசனமே மகாபாபங்களைப் போக்கக் கூடியது. ஸ்திர சுழி யான தேவி நாபி தரிசனம் மோக்ஷத்தையே தரக் கூடியது.

தேவியின் நாபியை ஹோமாக்னி குண்டம் என்றும் தியானம் செய்ய வேண்டும். இப்படி தேவியின் நாபி பிரதேசத்தை தியானம் செய்பவர்களுக்கு மூன்று லோகமும் வசமாகும்.

இந்த யந்திரத்தை சந்தனத்தில் எழுதி 45 நாட்கள் தினம் 108 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

முத்கான்னம், மாஷா பூபம் நைவேத்யம்.

78





## இடுப்பு பிரதேச வர்ணனை

நிஸர்கக்ஷீணஸ்ய ஸ்தநதடபரேண க்லமஜுஷோ
நமந்மூர்த்தே: நாரீ திலக சநகை: த்ருட்யத இவ ।
சிரம் தே மத்யஸ்ய த்ருடித தடி நீதீரதருணா
ஸமாவஸ்தாஸ்தேம்நோ பவது குசலம் சைலதநயே ॥ 79 ॥

ஸ்திரீகளின் இடை இருக்கிறதா என்று சந்தேகிக்கும்படி மெல்லியதாக இருக்கும். ஸ்தன பாரத்தால் இடுப்பு வளைந்து இருக்கும்.

தேவியின் சரீரம் புண்ய நதி. சௌந்தர்யாதிசயம். பூர்ண பிரவாகம், இரு பார்ச்வங்களும் கரைகள். இக்கரைகள் பிரவாகம் காரணமாக இடிந்து விடுமோ என்றிருக்கின்றன வாம். அப்படி இடியாமல் இருக்க வேண்டுமே என்று ஆதி சங்கரர் பிரார்த்திக்கிறார்.

இப்படி தியானம் செய்பவர்கள் எல்லோரையும் தன்வசப் படுத்திக் கொள்கிறார்கள்.



79


இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் வரைந்து 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

தேன், க்ஷீர பாயஸம் நைவேத்யம்.

குசௌ ஸத்ய: ஸ்வித்யத் தட கடித கூர்ப்பாஸ பிதுரௌ
கஷந்தௌ தோர்மூலே கநககலசாபௌ கலயதா |
தவ த்ராதும் பங்காத் அலமிதி வலக்நம் தநுபுவா
த்ரிதா நத்தம் தேவி த்ரிவலி லவலீவல்லிபிரிவ || 80 ||

உத்தம ஸ்திரீகளுக்கு இடுப்புப் பிரதேசத்தில் மூன்று மடிப்புகள் காணப்படும். ஸ்தனங்கள் ஸ்வர்ண கலசங்கள் போலுள்ளன. ஸ்தனங்களை சிருஷ்டித்தவன் மன்மதன். நம்மால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்தனங்களின் பாருத்தால் இடுப்பு ஒடிந்துவிட்டது என்கிற அபக்யாதி வரலாகாது என்று இடுப்பில் வல்லிக் கொடிகளால் மூன்று சுற்று மன்மதன் கட்டியிருக்கிருனே என்று தோன்றுகிறதாம்.

இவ்விதம் தேவியை தியானம் செய்பவர்கள் மன்மதனுக்கும் மன்மதனுக ஆவார்கள்.




80

இதன் பலன் மஹேந்த்ர ஜால வித்யை ப்ரதம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

தேன் நைவேத்யம்.

# சக்திகூடம்□ 6


*குருத்வம் விஸ்தாரம் க்ஷிதிதரபதி: பார்வதி நிஜாத்*
*நிதம்பாத் ஆச்சித்ய த்வயி ஹரணரூபணே நிததே ।*
*அதஸ்தே விஸ்தீர்ணோ குருரயமசேஷாம் வஸுமதீம்*
*நிதம்பப்ராக்பார, ஸ்தகயதி லகுத்வம் நயதி ச ॥ 81 ॥*

உத்தம ஸ்திரீகளுக்கு உட்காரும் பிரஷ்டபாகம் விசால மாகவும் கனமுள்ளதாகவும் இருக்கும். பர்வதராஜன் புத்திரி அம்பிகை. பர்வதங்களின் அடிப்பாகம் விசாலமானதாக இருக்கும். இப்படி தியானிப்பவர் பூமியின் அதிபதியாவார்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி தென்கிழக்கு முக மாக இருந்து ஜபிக்க வேண்டும். 16 தினங்கள் தினம் 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்,

குடபாயஸம், மாஷாபூபம் நைவேத்யம்,

பலன் அக்னி ஸ்தம்பன ப்ரதம்.



81


## துடை, முழங்கால்கள் வர்ணனை

*கரீந்த்ராணும் சுண்டாந் கநககதலீ காண்டபடலீம்*
*உபாப்யாம் ஊருப்பாம் உபயமபி நிர்ஜித்ய பவதீ ।*
*ஸுவ்ருத்தாப்யாம் பத்யு: ப்ரணதிகடிநாப்யாம் கிரிஸுதே*
*விதிக்ஞே ஜாநுப்யாம் விபுதகரிகும்பத்வயமஸி ॥ 82 ॥*

தேவியின் துடைகள் யானையின் துதிக்கை போல் இருக் கின்றன. தேவியின் முழங்கால் மிருதுவாகவும் அழகாகவும் விளங்குகின்றன. அடிக்கடி பரமேஸ்வரனுக்கு நமஸ்காரம் செய்த காரணத்தால் முழங்கால்கள் கடினமாயுள்ளன. மனைவி கணவனை நமஸ்கரிக்க வேண்டும் என்று அம்பிகை செய்து காட்டுகிறாள்.

□இடுப்புக் கீழிருந்து பாதங்கள் வரை.

இப்படி தேவியை தியானம் செய்பவர்கள் தங்கம் விளையும் பூமிக்கு அதிபதியாவார்கள். பலன் ஜலஸ்தம்பன ப்ரதம்.




82

இந்த யந்திரத்தை அச்விகர்ண மரப் பலகையில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

தேன், திராக்ஷைப் பழம் நைவேத்யம்.

*பராஜேதும் ருத்ரம் த்விகுணசரகர்பௌ கிரிஸுதே*
*நிஷங்கௌ ஜங்கே தே விஷமவிசிகோ பாடமக்ருத |*
*யதக்ரே த்ருச்யந்தே தசசரபலா: பாதயுகலீ*
*நகாக்ரச்சத்மாந: ஸுரமகுட சாணைக நிசிதா : || 83 ||*

தேவியின் முழங் கால்களுக்கு கீழ் உள்ள பாகம் மன்மதனுடைய அம்பராத்துணிகளாக வருணிக்கப்படுகிறது. பத்து விரல்கள் அம்பராத்துணியிலுள்ள பாணங்களின் என்றிருக்கின்றனவாம்.



83

இதன் பலன் கஜதுரங்க சைதன்ய ஸ்தம்பனம. இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி செம்பரத்த பூவால் அர்ச்சிக்கவும், 12 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

மதுகுட பாயஸம் நைவேத்யம்.

## நடை அழகு

அழகிய மங்கை ஒயிலுடன் செல்கையில் நம்மை முதலில்

கவர்வது அவளுடைய நடை அழகுதான். அன்னம் போன்ற நடையழகு என்று சொல்வது வழக்கம்.

சீதையின் நடையைக் காணும்போது ராமபிரானுக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சிக்கு அளவேயில்லை. சீதையின் நடையைக் கண்டு நாணி அன்னங்கள் மெல்ல ஒதுங்குகின்றன. சீதையின் நடையைக் கண்டு "சிறியதோர் முறுவல் பூத்தார்" என்கிறார் கம்பர்.

பார்வதியின் நடையழகை காளிதாசன் குமார சம்பவத்தில் வருணித்திருக்கிறார்.

அம்பிகையின் நடை அன்னங்களுக்கு நடக்கக் கற்றுக் கொடுப்பதாக ஆதிசங்கரர் தன் சௌந்தர்ய லகரியில் குறிப்பிட்டிருக்கிறார்.

## பாத கமலங்களின் சக்தி

த்வதந்ய: பாணிப்யாம் அபயவரதோ தைவதகண:
  த்வமேகா நைவாஸி ப்ரகடிதவராபீத்யபிநயா ।
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
  சரண்யே லோகாநாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ || 4 ||

(எல்லா தேவதைகளுமே தங்கள் கைகளால் பக்தர்களுக்கு அருள அன்னையின் பாத கமலங்களின் அருள் வேண்டியிருக்கிறது. அதனால்தான் அவர்கள் தங்கள் கைகளால் அபயவரத முத்திரையைக் காட்டிக் கொண்டிருக்கின்றனர். உன் பாத கமலங்களே ஜனன மரண ரூபமான சம்சார பயத்திலிருந்து காப்பாற்றி பக்தர்களுக்கு அருள் வழங்குகிறது)

பாதங்களை கமலங்கள் என்று வர்ணிப்பது வழக்கம். சரணாம்புயம் என்று குறிப்பிடுகிறார் அபிராமி பட்டர்.

ஒரு வண்டு சேற்றில் விழுந்து விடுகிறது. இதனால் அதன் இறக்கைகள் நனைந்து அது பறக்க முடியாமல் அவஸ்தைப் படுகிறது. மெதுவாக நகர்ந்து ஒரு தாமரைத் தண்டை அணுகுகிறது. அத்தண்டில் தன் உடம்பிலுள்ள சேற்றைத் தேய்த்துக் கொஞ்சம் விடுவித்துக் கொள்கிறது. பிறகு மெதுவாக மேல் ஏறி தாமரை மலரை அணுகி விடுகிறது. இதற்குள் அதன் இறக்கை மீதிருந்த சேரும் போய் உலர்ந்து விடவே அதற்கு பறக்கும் சக்தி வந்து விடுகிறது. பின் பூவிலுள்ள தேனைக் குடித்து இன்ப வாரிதியில் மூழ்குகிறது. நாமும் சேற்றில் விழுந்த வண்டு மாதிரியே இருக்கிறோம். அந்த வண்டு தாமரை

மலரை நாடியது போல நாமும் அம்பிகையின் பாதமலர்களை நாட வேண்டும், அப்போது அந்த வண்டு போல நாமும் இன்ப வாரிதியில் மூழ்கலாம்.

## அம்பிகைக்கு வரத அபய முத்திரை ஏன் இல்லை?

அபயம் என்றால் பயப்படாதே, நான் இருக்கிறேன் உன்னைக் காப்பாற்ற என்பதைக் குறிப்பிடுகிறது. வரத முத்திரை என் கால்களில் சரணடைந்துவிட வேண்டியது மட்டுமே நீ செய்ய வேண்டிய காரியம் என்பதை உணர்த்துகிறது. கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையில் செய்த உபதேசம்தான் இந்த அபய வரத முத்திரைகளின் தத்துவார்த்தம்.

அம்பிகை இந்த வரத அபய முத்திரைகளைக் காட்டாமல் இருக்கிறாளே இது ஏன்?

இக பர இன்பங்கள் அம்பிகையின் திருவடிகளில் விழுந்து வணங்கியதுமே கிடைத்து விடுவதால் கைகளால் முத்திரை காட்டுவதற்கான அவசியம் ஏது? அம்பிகையின் பாத தூளியே அறியாமையைப் போக்கி ஆன்ம ஞானம் அருளி பிறவித் துயரையும் போக்கிவிடுகிறது.

அம்பிகையின் பாதங்களை மூகசங்கரர் தன் மூகபஞ்ச சதீ பாதாரவிந்த சதகத்தில் வருணிப்பதாவது :

அம்பிகைக்கும் அவர் கணவனுக்குமிடையே சண்டை. ஊடல் என்பார்களே அதுதான். அம்பிகையின் மனதைத் திருப்ப காமேஸ்வரர் என்னவெல்லாமோ செய்கிறார். கடைசியில் எதுவும் பலிக்காமல் அம்பிகையின் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறார். அப்போது பாதங்களின் சிவந்த ஒளி பரமசிவனுடைய ஜடையிலுள்ள சந்திர கலையில் விழுவதைப் பார்த்தால் செவ்வானத்தில் தோன்றும் பிறை போல் இருக்கிறதாம். இதை விவரிக்கும் சுலோகம்:

ப்ரணம் ரீ பூதஸ்ய ப்ரணய கலஹ த்ரஸத மனஸ :
ஸ்மராராதே : சூடாவியதி க்ருஹமேதீ ஹிமகா :
யயோ : ஸாந்த்யாம் காந்திம் வஹதி ஸுஷமா
பிச்சரணயோ :
தயோர்மே காமாக்ஷ்யா : ஹ்ருதயம யந்திரம் விஹரதாம்.

அம்பிகையின் பாதங்களில் ஈஸ்வரன் அடிபணியும்போது அம்பிகை அணிந்துள்ள தண்டைச் சிலம்பு முதலிய


ஆபரணங்கள் இனிமையாக ஒலிப்பதைப் பார்த்தால் அம்பிகை யின் கோபத்தைத் தணிக்க சாமர்த்தியமான தோழி சிவனுக் காகப் பரிந்து பேசுவது போல இருக்கிறதாம்.

தேவியின் பாதங்களை நடனமாடும் பெண்களாக வர்ணிக் கிறார் மூகசங்கரர். என் மனதே நடன மேடை. மந்தகதியே லாஸ்யம் என்ற நடனம் ஞானவான்களே சபையிலுள்ள தேவர் கள். பாதத்திலுள்ள வர்ணமே நாட்டியத்தில் சேர்ந்த சங்கீதம் (ராகம்) என்கிறார்.

தேவெனப்புகழ அதிர் நிமிர்ந்து நிகர்
செப்புவார் அபயவரதமாம்
பாவகத்து அபிநயத்தோடு உற்றகை
பரப்பி என் பயம் ஒறுக்குமே
யாவர்க்கும் அஃது அரிது நின்பதம்
இரப்ப யாவையும் அளிக்குமால்
மூவருக்கும் ஒரு தாவரப் பொருள் என
மூலமே தழையும் ஞானமே.

கவி அம்பிகையின் மீதுள்ள அன்பின் மிகுதியால் மற்ற தெய்வங்களை ஓரளவு குறைத்துப் பேசுகிறார். உனக்கு அச்ச மில்லை. நான் காப்பாற்றுகிறேன் என்று சொன்னால் உன் அருளின்றி அத்தெய்வங்களால் காப்பாற்றி விட முடியுமா அம்பிகையைத் தொழுபவர்களுக்கு பகையினால் அறிவின்மை யால் வரக் கூடிய அச்சம் எதுவும் கிடையாது. அவளுடைய பாதங்களை மட்டும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

4




இந்த நான்காவது சுலோகம் அமானுஷ்ய சக்தியையுடையது. இச்சரத்தை தங்கத் தகட்டில் பதிய வைத்து கிழக்குமுகமாம உட் கார்ந்து 36 தினம் 3000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

நைவேத்யம்: எலுமிச்சம் பழ ரச அன்னம்.

தும் என்பது துர்க்கையின் மந்திரம். எப்பேர்ப்பட்ட பயங்களையும் ரோகங்களையும் தீர்க்க வல்லவள் துர்க்கையே தான். வெளி எட்டு தளங்கள் எட்டு ஆத்ம குணங்கள். உள்

நான்கு தளங்கள் நான்கு புருஷார்த்தங்கள். இந்த வழி பாட்டால் அவைகளும் கிடைக்கும்,

சௌந்தர்ய லகரியில் 84 முதல் 90 சுலோகங்கள் வரையில் எல்லாம் அம்பிகையின் பாதாரவிந்த வர்ணனைதான்.


ச்ருதீநாம் மூர்த்தாநோ தததி தவ யௌ சேகரதயா
மமாப்யேதௌ மாத: சிரஸி தயயா தேஹி சரணௌ I
யயோ: பாத்யம் பாத: பசுபதி ஜடாஜூடதடிநீ
யயோ: லாக்ஷாலக்ஷ்மீ: அருணஹரிசூடாமணிருசி: II 84 II

உபநிஷத்துக்கள் தேவியின் பாதங்களை தலைக்கு ஒரு அணி யாக கொள்கின்றன. இதையே லலிதா ஸகஸ்ரநாமம் 'ஸர்வோப நிஷதுத் குஷ்டா' என்று குறிப்பிடுகிறது. அப் பேர்ப்பட்ட பாதங்களை தேவி! உன் குழந்தைகளான எங்கள் தலையிலும் வை என்று ஆதிசங்கரர் பிரார்த்திக்கின்றார். (இதுவே திருவடி தீக்ஷை)

ஊடல் காலத்தில் கணவன் மனைவியின் கால்களில் விழுவதுண்டு. அப்படி சிவபெருமான் அம்பிகை கால்களில் விழுந்தபோது அவர் ஜடையிலுள்ள கங்கை அம்பிகை பாதங் களில் விழுகிறது,

அதுபோலவே விஷ்ணுவும் பிரும்மாவும் இதர தேவர்களும் நமஸ்கரிக்கிறார்கள்.

## பரகாய பிரவேச ஸித்தி



84

தேவியின் பாதாரவிந்த ஜலப்ரோக்ஷணை உட்கொள் ளுதல் மகிமை இங்கு சொல்லப் படுகிறது. இந்த ஷட்கோணத் தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி தினம் 1000 தடவை இந்த சுலோகத்தை ஒரு வருஷ காலம் வழிபட்டால் கூடுவிட்டு கூடு பாய்வதென்கிற பரகாய ஸித்தி ஏற்படும்.

நைவேத்யம் தேன், சித் ரான்னம், க்ஷீர பாயஸம்.

நமோவாகம் ப்ரூமோ நயநரமணீயாய பதயோ:
தவாஸ்மை தவந்த்வாய ஸ்புடருசி ரஸாலக்தகவதே I
அஸூயதி அத்யந்தம் யதபிஹநநாய ஸப்ருஹயதே
பசூநாமீசாந: ப்ரமதவந கங்கேலிதரவே II 85 II


சிவபெருமான் ஒருவரைத் தவிர மற்றெல்லாரும் தூரத்திலிருந்தே தேவியின் இரு பாதங்களுக்கு நமஸ்காரம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

நமஸ்காரம் என்ற வசனத்தினுலேயே சகல புருஷார்த்தங்களேயும் அடையலாம். (பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம) ஆகவே தேவியின் பாதார விந்தங்களை தியானித்து நமஸ்கரிக்கலாம். இந்த பரமசிவனுக்கு தன் தேவியின் பாதங்கள் அசோக மரத்தைக் கூடத் தொடக் கூடாது என்கிற எண்ணமாம். அசோக மரம் ஸ்திரீகள் பாதம் பட்டால்தான் புஷ்பிக்கும். இந்த அசோக மரங்கள் தேவி தன் காலால் தங்களை உதைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. இதனுல் அவைகளிடம் பரமேஸ்வரனுக்கு அசூயை ஏற்படுகிறதாம்.

இந்த சக்ரத்தில் அம்பிகையை வழிபடுவதால் பூத மாரண பிசாச நிவ்ருத்தி ஏற்படும்.

ஸ்வர்ணத் தகட்டில் இதை வரைந்து இந்த சுலோகத்தை தினம் 1000 வீதம் 12 தினங்கள் பாராயணம் செய்ய வேண்டும்.

தேன், பால் பாயஸய் நைவேத்யம்.




85

ம்ருஷா க்ருத்வா கோத்ரஸ்கலநம் அத வைலக்ஷ்யநமிதம்
லலாடே பர்தாரம் சரணகமலே தாடயதி தே|
சிராதந்த : சல்யம் தஹநக்ருதம் உந்மூலிதவதா
துலாகோடிக்வாணை: கிலிகிலிதம் ஈசாநரிபுணா || 86 ||

அம்பிகையின் பாதம் சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் பட்டது மன்மதனுக்கு அளவில்லாத சந்தோஷம் தன்னை எரித்த கண் உதைபடுகிறதே என்று,


## லக்ஷ்மி

| | |
|---|---|
| லக்ஷ்மி கடாக்ஷம் | ரூ. 15 |
| வரலக்ஷ்மி தாயே வருக வருகவே | ,, 10 |
| மங்களகர மகாலக்ஷ்மி | (2-ம் பதிப்பு-அச்சில்) |




86

இந்த யந்திர வழிபாட்டிஞல் சகல பிசாசு பயநிவ்ருத்தி.

ஸ்வர்ணத் தகட்டில் இது எழுதப்பட வேண்டும். கும்பத்தில் ஜலம் வைத்துப் பூஜித்து பின்னர் அபிஷேகம் செய்து வைக்க வேண்டும். தினம் 1000 தடவை விதம் 21 நாள் பாராயணம்,

க்ஷீர பாயஸம், தேங்காய், வாழைப்பழம் நைவேத்யம்.

*ஹிமாநீஹந்தவ்யம் ஹிமகிரிநிவாஸைகசதுரௌ*
*நிசாயாம் நித்ராணும் நிசி சரமபாகே ச விசதௌ |*
*வரம் லக்ஷ்மீபாத்ரம் ச்ரியமதி ஸ்ருஜந்தௌ ஸமயிநாம்*
*ஸரோஜம் த்வத்பாதௌ ஜநநி ஜயதச்சித்ரமிஹ கிம் || 87 ||*

தேவியின் பாதாரவிந்தங்கள் தாமரை புஷ்பங்களுடன் ஒப்பிடப்படுகின்றன,

| சாதா தாமரை | பாத தாமரை |
|---|---|
| பனியில் வாடி வதங்கிவிடும் | ஹிமாசல பனியில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது, |
| இரவில் தாமரை மூடிக் கொள்ளும். சூரியனைக் கண்டால் மலரும். | இரவில் பகலில் எப்போதும் மலர்ந்திருக்கும். |
| லக்ஷ்மியின் வாசஸ்தலம் | அஷ்ட லக்ஷ்மிகளின் அருள் கிடைக்கச் செய்யும். |

சிவபெருமான் முகத்தில் தேவியின் கால் பட்டதை மன்மதன் உதை என்று கருதிஞன். ஆனுல் பாதமாகிய தாமரை சிவன் முகத்தில் அர்ச்சிக்கப்பட்டது என்று ஆதிசங்கரர் குறிப்பிடுகிருர்.


## சரஸ்வதி


| | | |
|---|---|---|
| **வாக்தேவி வைபவம்** | ரூ. | 10 |
| **சிருங்கேரி சாரதா** | ,, | 8 |
| **வாக்வாதினி** | ,, | 8 |

இந்த யந்திர வழிபாட்டால் சர்வப்ரேரணம் ஸித்திக்கும்.

இந்த கீழ் நோக்கிய முக்கோணத்தை தங்கத் தகட்டில் எழுதி ருத்ர பூமி பஸ்மத்தால் யந்திர தாரணம் செய்ய வேண்டும்.

தினம் 1000 தடவை 16 நாளைக்கு இந்த சுலோகம் பாராயணம் செய்யப்பட வேண்டும்.

க்ஷீர பாயஸம், தேங்காய், பழம் நைவேத்யம்.



87

பதம் தே கீர்த்திநாம் ப்ரபதம்பதம் தேவி விபதாம்
கதம் நீதம் ஸத்பி: கடிநகமடீகர்பர துலாம் |
கதம் வா பாஹுப்யாம் உபயமநகாலே புரபிதா
யதாதாய ந்யஸ்தம் த்ருஷதி தயமாநேந மநஸா || 88 ||

தேவியின் பாதத்தின் அக்ர பாகம் வர்ணிக்கப்படுகிறது. இப்பாகம் மிகவும் மிருதுவானது. இதை எப்படி ஆமையின் முதுகு ஓட்டிற்கு ஒப்பிட்டார்களோ. சிவபெருமான் திருமண காலத்தில் இந்த மெல்லிய பாதத்தை கடினமான கல்லின் மேல் எப்படித்தான் மனம் வந்து தூக்கி வைத்தாரோ?

இந்த யந்திர உபாஸனம் மிருகாகர்ஷண ஸித்தியைத் தரக் கூடியது. இதை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி, தினம் 1000 முறை 6 மாதங்கள் இந்த சுலோகம் பாராயணம் செய்ய வேண்டும்.

க்ஷீர பாயஸம், தேங்காய், பழம் நைவேத்யம்.




88

நகைர் நாகஸ்த்ரீணாம் கரகமல ஸம்கோசசசிபி:
தருணாம் திவ்யாநாம் ஹஸத இவ தே சண்டி சரணௌ
பலாநி ஸ்வ: ஸ்தேப்ய: கிஸலய கராக்ரேண தததாம்
தரித்ரேப்யோ பத்ராம் ச்ரியம் அநிசமஹ்நாய ததெள
|| 89 ||

தேவியின் பாதங்களிலுள்ள நகங்கள் அநேக சந்திர கிரணங்கள் போல ஒளி வீசுகின்றன. இவை கற்பக விருக்ஷங்களை காட்டிலும் மேலானதாக விளங்குகிறது. கல்பக விருக்ஷம் தேவலோகத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமே வேண்டியதை

அளிக்கிறது. அம்பிகையின் நகங்கள் எல்லா உலகத்திலுள்ள வர்களின் அபிலாஷையையும் பூர்த்தி செய்கிறது.



89


இந்த யந்திர வழிபாட்டினுல் சகல ரோக நிவ்ருத்தியும் ஏற்படு கிறது, ஸ்வர்ணத் தகட்டில் இதை எழுதி தினம் 1000 விதம் 30 நாட் களுக்குப் பாராயணம் செய்ய வேண்டும்.

குள பாயஸம், தேன் நைவேத் யம்.

ததாநே நிநேப்ய: ச்ரியமநிசமாசா நுசத்ருசீம்
அமந்தம் ஸௌந்தர்யப்ரகர மகரந்தம் விகிரதி!
தவாஸ்மிந் மந்தார ஸ்தபக ஸுபகே யாது சரணே
நிமஜ்ஜந் மஜ்ஜீவ: கரணசரண: ஷட்சரணதாம் || 90 ||

நமஸ்காரம் செய்த மாத்திரத்தில் தரித்திரர்கள் ஐஸ்வர்ய வான்களாக ஆகிவிடுகிறுர்கள்.

நம் உடம்பிலுள்ள 5 ஞானேந்திரியங்களும் மனதும் தேவி யின் பாதகமலங்களில் ஈடுபட்டால் முக்திக்கு சந்தேகமென்ன?




90

இந்த யந்திர வழிபாட்டி டால் சர்வ க்ஷுத்ர ப்ரயோக நிவ்ருத்தி ஏற்படும். இந்த யந திரத்தை சுவர்ணத் தகட்டிலோ அல்லது விபூதியிலோ எழுதி 1000 தடவை 30 நாட்களுக்கு இந்த சுலோகத்தைப் பாரா யணம் செய்ய வேண்டும்.

பாயஸம், தேன் நைவேத் யம்.

அம்பிகையின் பாதம் இயற்கையாகவே தாமரையின் எழிலும் மணமும் உடையது. இந்திராதி தேவர்கள் கற்பக மலர் முதலியவற்ருல் பூஜிக்க அவற்ருல் உண்டாகும் மணத் தைப் பெற்றது. வேதம் இவள் திருவடிகளைச் சூழ்ந்து கோஷிக்கிறது.

அம்பிகையை வணங்கச் சென்ற இந்திராதி தேவர்கள் தங்கள் கிரீடங்களைக் கழற்றி கீழே வைத்துள்ளனர். அம்பிகையின் கொலுமண்டபம் எங்கும் இந்த கிரீடங்கள். அன்னையின் பரிவாரங்கள் கிரீடங்களில் இடறாமல் பார்த்து வாருங்கள் என்று எச்சரிக்கின்றனர் என்று அன்னையின் தர்பார் சிறப்பை ஆதிசங்கரர் வருணிக்கிறார்.

பாதாரவிந்த சதகத்☐தில் மூகசங்கரர் கூறும் அருமையான ஒரு சுலோகம் :

*கிராம் தூரௌ சோரௌ ஜடிமதிமிராணாம் க்ருத ஜகத்*
*பரித்ராணௌ சோணௌ முனிஹ்ருதய லீலைக நிபுணௌ*
*நகை: ஸ்மேரௌ ஸாரௌ நிகம வசஸாம் கண்டிதபவ*
*க்ரஹோன் மாதௌ பாதௌ தவ ஜனனி காமாக்ஷி கலயே ||*
(பாதாரவிந்த சதகம் 44)

அம்பிகையின் பாதங்கள் வாக்கிற்கு எட்டாதவை. ஜகத்தைப் பரிபாலிப்பவை. செந்நிறமுடையவை. முனிவர்களின் இதயப் பரமானந்தம் வேத வாக்குகளின் சாரம். சம்சாரம் என்ற பிசாசின் செருக்கை அடக்குபவை. இத்தகைய திருவடிகளைத் தியானிக்கிறேன்.

## அக்ஞான இருளை நீக்கும் பாததூளி

சௌந்தர்ய லகரி 2-வது 3-வது சுலோகங்கள் அம்பிகையின் பாததூளி மகிமையை விவரிக்கிறது.

*தநீயாம்ஸம் பாம்ஸும் தவ சரணபங்கேருஹபவம்*
*விரிஞ்சி: ஸம்சிந்வன் விரசயதி லோகானவிகலம் |*
*வஹத்யேநம் சௌரி: கதமபி ஸஹஸ்ரேண சிரஸாம்*
*ஹர: ஸம்க்ஷுத்யைநம் பஜதி பஸிதோத்தூலநவிதிம் || 2 ||*

முப்மூர்த்திகளும் பரமேஸ்வரியின் பாததூளியை அணிந்து அதன் மகிமையினால் தன் காரியங்களைச் செய்ய சக்தி பெற்றுள்ளனர்.

*அவித்யாநாம் அந்தஸ்திமிர மிஹிரத்வீபநகரீ*
*ஜடாநாம் சைதந்யஸ்தபக மகரந்தஸ்ருதிஜரீ |*
*தரீத்ராணாம் சிந்தாமணிகுணநிகா ஜன்மஜலதௌ*
*நிமக்நாநாம் தம்ஷ்ட்ரா முராரிபுவராஹஸ்ய பவதி || 3 ||*

---

☐ மூகபஞ்ச சதி 500 சுலோகங்களும் அவைகளின் அர்த்தத்துடன் பிரதிபா பிரசுரம் வெளியிட்டுள்ளது.

அம்பிகையின் பாததூளி சிந்தாமணிபோன்று கேட்டதை எல்லாம் கொடுக்கக் கூடியது.

சிவசக்தி ஐக்யத்தை முதல் சுலோகத்தில் விவரித்த ஆதி சங்கரர் அடுத்தபடி முக்யத்வம் கொடுப்பது அம்பிகையின் பாத தூளிக்குத்தான்.

அம்பிகையின் பாததூளிகளைத் திரட்டி பிரும்மா 14 சுலோகங்களையும் சிருஷ்டித்திருக்கிறார். அப்பாததூளியை சிவபெருமான் தன் உடல் முழுவதும் பூசிக் கொண்டிருக்கிறார். இத்தூளியின் மகிமை காரணமாகவே மகாவிஷ்ணு ஆதிசேஷனாக இருந்து லோகங்களைத் தாங்கி வருகிறார். (இது 2ம் சுலோகத்தின் அர்த்தம்)

அம்பிகையின் பாததூளி அக்ஞானத்தை அகற்றும். ஏழைகளுக்கு சகல ஐஸ்வர்யங்களையும் கொடுக்கும். பிறப்பாகிய சமுத்திரத்தில் மூழ்கும் நிலையிலுள்ளவர்களுக்கு கடலில் மூழ்கிய பூமியை வெளிக் கொணர்ந்த வராஹ மூர்த்தியின் தெற்றிப் பல் போல கை கொடுக்கும், (இது 3ம் சுலோகத்தின் அர்த்தம்)

தமஸ், மாயை என்ற இருள் ஆத்மாவை அறியவொட்டாமல் மறைத்து வருகிறது. அம்பிகையின் பாததூளி அந்த அக்ஞான இருளை விரட்டுகிறது. இதனால்தான் அம்பிகைக்கு "ஹார்த்த ஸந்த மஸாபஹா" என்று லலிதா திரிசதியில் ஒரு நாமா இருக்கிறது.

அம்பிகையின் பாததூளிக்கே இவ்வளவு மகிமை இருந்தால் அத்தூளி பட்ட பாதங்கள் மகிமை எத்தன்மையதாக இருக்கும்.

வராஹ மூர்த்தி மகாவிஷ்ணுவின் அவதாரம். அவர் பூமியைக்காக்க எடுத்த அவதாரம் பன்றி உருவம். அவருடைய தெற்றிப் பல் கூர்மையாக இருப்பினும் காக்கும் காரியத்தையொட்டி அப்பல், வலியை ஏற்படுத்தாமல் பூமியைக் கவ்விக் கொண்டிருக்கிறது. (பூனைக் குட்டிகளைத் தாய் பூனை வாயால் கவ்விக்கொண்டிருப்பது போல) இத்தகைய ஆற்றல் இந்த வராஹருக்கு ஏற்பட்டதும் அம்பிகையின் பாததூளி மகிமையே.

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் எல்லாவற்றையும் செய்யக் கூடியது அம்பிகையின் பாதத்தூளி. அந்த தூளி வேறு இடத்தில் இ[illegible] என்று ஒதுக்கித் தள்ளப்படும். ஆனால்

அம்பிகையின் திருவடியுடன் சம்பந்தம் ஏற்பட்டதால் அதைக் கொண்டு பிரும்மா உலகைப் படைக்கிறார், விஷ்ணு உலகைக் காப்பாற்றுகிறார். சிவபெருமான் அதை உடலில் பூசிக்கொண்டு சம்ஹார சக்தியைப் பெறுகிறார்.

பாத தாமரையின்கண் நுண்துகள்
　　பரம அணுவினில் பல இயற்றிஞல்
வேத நான்முகன் விதிக்க வேறுபடு
　　விரிதலைப்புவனம் அடையமால்
முதுஅரா வடிவு எடுத்து அனந்தமுது
　　கணபணுடவிபரிப்ப மேல்
நாதனுர் பொடிபடுத்து நீறணியில்
　　நாம் உரைத்தது என் அவள் பான்மையே.

அம்பிகை பாததூளியினுல் ஏற்பட்ட உலகம் எப்படிப் பட்டது? வேறுபாடு விரிதலை உலகம் என்கிறார். இந்த உலகம் பேதம் அபேதம் நிறைந்தது. பற்றில்லாமல் இருந்தால் இந்த பேத அபேதங்கள் பாதிக்காது. அத்தகைய பற்றில்லா நிலைமை ஏற்பட அம்பிகையின் அருள்தான் வேண்டும்.

இந்த ஜன்மத்தில் சீருடனும் சிறப்புடனும் வாழ்வது முன் பிறவியில் செய்த பூஜா பலத்தினுலே. இந்த ஜன்மத்தில் கடைத் தேற அம்பிகையின் அருள் முக்கியம். இதே கருத்தை அபிராமி பட்டர்

வந்திப்பவருன்னை வானவர் தானவரானவர்கள்
சிந்திப்பவர் நாற்றிசை முகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவரழியாப் பரமானந்தர் மாரிலுன்னை
சந்திப்பவர் கெளிதாம் எம்பிராட்டி நின்றன் ணிளியே.

(அந்தாதி-14)


என்கிறார்.

## பாததூளி பெறும் விதம்

இவ்வளவு மகிமை பொருந்திய அம்பிகையின் பாததூளி எப்படிக் கிடைக்கும்?

ஒரு பௌர்ணமி தினத்தில் ஸ்ரீவித்யா உபாசியான சுமங்கலியை பூஜா விதிக்ரமத்தை அனுசரித்து பூஜிக்க வேண்டும். எல்லா சுமங்கலிகளுமே அம்பிகைதான்- நல்ல சுத்தமான மணலைப் பரப்பி அதில் பூஜிக்கும் சுமங்கலியை

நடக்கச் செய்ய வேண்டும். அவள் திருவடி பெற்ற மணலை யத்திரப்படுத்தி அதை தேவியின் பாததூளியாக வைத்து பூஜிக்க வேண்டும்.





2-வது சுலோகத்திற்கான சக்ரம்.

இதைத் தங்கத் தகட்டில் பதித்து வடக்கு முகமாக உட்கார்ந்து 55 நாள் தினம் 1000 தடவை இரண்டாவது சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

நைவேத்யம் பால் பாயஸம்.

சர்வலோக வசியம்.

முக்கோணம் அம்பிகையின் சக்ரம். ஸ்ரீசக்ரத்தில் பிந்து இரும்பது இம் முக்கோணத்தில்தான். ஹ்ரீம் என்பது சக்திப் பிரணவம். மும் மூன்றாக உள்ள எதுவுமே அம்பிகை ஸ்வரூபம் என்பது முக்கோணத்தின் மூன்று மூலையிலுள்ள மூன்று இலை சூலம் குறிப்பிடுகிறது.




3-து சுலோகத்திற்கான சக்ரம்

தங்கத் தகட்டில் இச்சக்ரத்தைப் பதித்து வடகிழக்கு முகமாக உட்கார்ந்து 45 நாட்கள் தினமும் 2000 தடவை மூன்றாவது சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

சகல வித்யா ப்ராப்தி.

நைவேத்யம் உளுந்துவடை.


கீழ் நோக்கிய முக்கோணம் சக்தி பரமானது. மேல் நோக்கிய முக்கோணம் சிவபரமானது. நடுவிலுள்ள ஸ்ரீம் லக்ஷ்மியினுடைய மந்திரம். எல்லா முனைகளிலும் சூலம் இருப்பது ரக்ஷை. லக்ஷ்மி தேவியின் கடாக்ஷம் சிவசக்தி இணைப்புடன் விளங்குகிறது. சகல வித்யைகளுமே ஐஸ்வர்யம் தானே.

## சுவாஸினி அர்ச்சனப் பிரீதா

கிரீடம் வைரிஞ்சம் பரிஹா புர: கைடபபித:
 கடோரே கோடீரே ஸ்கலஸி ஜஹி ஜம்பாரிமகுடம் |
ப்ரணம்ரேஷ்வேதேஷு ப்ரஸபமுபயாதஸ்ய பவநம்|
 பவஸ்யாப்யுத்தாநே தவ பரிஜநோக்தி: விஜயதே || 29 ||

அம்பிகையைத் தேடி பரமேஸ்வரனே வந்து விடுகிறார். அவரை எதிர்கொண்டழைக்க அம்பிகை எழுந்து வருகிறாள். வழியில் பிரும்மா முதலிய தேவர்கள் நமஸ்கரிப்பதால் அவர்கள் கிரீடங்கள் இடருமல் அம்பிகை வரவேண்டியிருக்கிறது.

பரதேவதையை புருஷர்கள் ஆராதிப்பதைக் காட்டிலும் பெண்கள் வழிபடுவதே சிறப்பு என்று சொல்லப்படுகிறது. ஒரு பெண்மணி ஒருவர் வீட்டுக்குப் போனுல் அந்த வீட்டு ஆடவர் தன் மனைவியைக் கொண்டே அவளை வரவேற்பது சகஜம். பரதேவதையை சுவாஸினிகள் பூஜித்தால் அவளுக்குப் பரம சந்தோஷம் ஏற்படுகிறது.



29

பலன் பிரஸவாரிஷ்ட நிவிருத்தி. சுகப் பிரசவம்.

இந்த சக்கிரத்தை ஸ்வர்ணத் தகட்டில் வரைந்து 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

குளான்னம் நைவேத்யம்.


## தேவியின் அன்ன நடை

பதந்யாஸக்ரீடாபரிசயம் இவாரப்துமநஸ :
 ஸ்கலந்தஸ்தே கேலம் பவநகலஹம்ஸா ந ஜஹதி |
அதஸ்தேஷாம் சிக்ஷாம் ஸுபகமணி மஞ்ஜீர ரணித
 ச்சலாத் ஆசக்ஷாணம் சரணகமலம் சாருசரிதே || 91 ||

உத்தம ஸ்திரீகளின் கால் நடையை அன்ன பக்ஷிகளின் நடைக்கு ஒப்பிடுவர். அன்னபக்ஷிகள் தேவி நடப்பதைக் கண்டு தாங்களும் அம்மாதிரி நடக்க முயல்கின்றனவாம்.

தேவியின் நடை அன்ன பக்ஷிகளுக்கு உபதேசிக்கும் ஆசார்ய ஸ்தானத்தைப் பெற்றுள்ளது. இப்படி தேவியின் நடையைத்

நியாணிப்பவர்கள் ஆகாசத்தில் சஞ்சரிக்கும் சக்தியுள்ளவர்களாவர்.




91

இதை வழிபடுபவருக்கு தனலாபம் ஏற்படும்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 15 நாளைக்கு தினம் 2000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

உத்தம நைவேத்யம்.

## சரணுகதியின் பெருமை

அம்பிகையின் அருளைப் பெற சுலபமான வழி சரணுகதி. உடல் பொருள் ஆவி இம் மூன்றையும் ஈஸ்வரிக்கே அர்பித்து விடுவதுதான் சரணுகதியின் தன்மையாகும். இதனையே மாணிக்கவாசகர்

அன்றே என்றன் ஆவியும்
உடைமையும் எல்லாம்
குன்றேயனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குமுண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.

கண்ணுடி போன்றது மனம். அக்கண்ணுடியின் வழியே நாம் வெளியுலகைக் காண்கிறோம். அதே கண்ணுடியின் ஒரு புறத்தில் பாதரசத்தைப் பூசிவிட்டாய் நம்முடைய உருவத்தையே காண்கிறோம். நமது மனமாகிய கண்ணுடியில் இறைவனுடைய பாதரசத்தைப் (பக்தியை) பூசிவிட்டால் வெளியுலகம் மறைந்து விடுகிறது.

பக்தர்களுக்கு ஏற்படும் துன்பத்தை அம்பிகை தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதுகிறாள். இதை ஒரு பக்தர் சாதுர்யமாக ஒரு சுலோகத்தில் கூறுகிறார்.

அபூதபூர்வம் மம பாவி கிம்வா
ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி துக்கம்
கிந்து த்வதக்ரே சரணு கதாநாம்
பராபவோ நாத ந தேநுரூப : ||

''நான் முன்பு துக்கங்களை அனுபவித்துவிட்டேன். இன்னும் வருகிற துக்கங்களையும் சகித்துக் கொள்வேன். துக்கம் ஏற்படுவது சகஜம்தானே. உன்னைச் சரணமடைந்தவருக்கு அவமானம் ஏற்படுவது உனக்குப் பொருந்தாது,''

## ஆத்ம நிவேதனம்

தன்னையே அம்பிகையினிடம் அர்ப்பணம் செய்வதுதான் சரணுகதி என்பது. இதைத்தான் ஆத்ம நிவேதனம் என்ற ஒன்பதாவது பக்தியாகக் கூறுகிறுர்கள். ''நான்'' என்று சொல்லப்படும் மனமானது பாபம் நிறைந்து சம்சாரக் கடலில் மூழ்கிக் கரையேறும் வகை தெரியாமல் தவிக்கிறது. எல்லா தேவதைகளும் கைவிட்டு விட்டனர், அவர்களால் கரை ஏற்ற முடியவில்லை. மனம் இவ்வளவு இழிவுள்ளதாக இருப்பினும் பிறர் துன்பத்தைக் கண்டு இரங்கும் சுபாவமுள்ள அம்பிகை அருள் புரிய முன்வருகிறுள்,

இதை விளக்கும் சாரதா புஜங்க ஸதோத்திரம் (சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ சுவாமிகள் இயற்றியது)

பவாம் போதி மக்னம் பவாத்யை: ஸுதூரம்
விஸ்ருஷ்டம் மஹாபாப கேஹாய மானம்
விவேகாதி ஹீனம் தயாநீரதே தே
மமாத்மாநமம் பாங்க்ரி யுக்மேர் பயாமி

(என் ஆத்மாவை கருணைக் கடலான தாயே உன் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்)

மனதை அர்ப்பணம் செய்வதென்பது சுலபமான காரியமல்ல. இதற்கும் அம்பிகையின் அருள் வேண்டும் என்பதைக் காட்ட சிருங்கேரி ஆச்சார்யாள் அதிலுள்ள சிரமங்களைக் கூறுகிறுர்,

சரீரம் ஸ்வதந்திரம் ததாக்ஷரணி
ஸர்வாணயஹோ கிம் கரோமி க்வ யாம் யம்பிகே வா
மயா போஷ்ய மாணுதி மத்வச்யதாம் ந
ப்ரயாந்த்யஞ்ஜஸா மத்வசே தாதி தன்யா : ||

இச் சரீரம் நமக்கு அடங்கி சொன்னபடி கேட்பதில்லை. இந்திரியங்கள் அதனதன் இஷ்டப்படி நம்மை இழுத்துச் செல்கின்றன. நாம் அதற்கு அடிமையாக இருக்கிறோம். இந்த நிலையில் எப்படி அர்ப்பணம் செய்வது? எல்லாவற்றையும் அடக்கியாளும் பராசக்தி அருளால்தான் அவை நமக்கு அடங்கும். ஆத்ம அர்ப்பணம் செய்யவும் அவள் அருள் வேண்டும்.

ஆதிசங்கரர் இந்த அம்பிகையின் திருவடி தியானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். அவர் பரம்பரையில் வந்த ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்கள் இது விஷயமாகக் குறிப்பிட்டது இங்கு மிகப் பொருத்தமாகும்.

"மந்திர த்யானமோ ரூபத்தியானமோ செய்வதற்கு நமக்கு பக்குவமில்லை. ஏதாவது ஒரு மந்திரத்தை ஜபிப்பது, ரூபத்தைத் தியானிப்பது என்ற பழக்கம் மனதிற்கு வருவது கொஞ்சம் சிரமம். ஆனாலும் முதல் அடி எடுத்து வைக்கத் தானே வேண்டும். நம் மனத்துக்கு ஹிதமாக ரஞ்சகமாக இருந்தால்தான் முதலடி எடுத்து வைப்போம். அப்படி அத்யாத்ம மார்க்கத்தில் ஒரு முதல் படி இருக்கிறது. அதுவே அம்பிகையின் திருவடி.


"எவ்வித சிரமமுமின்றி எவரும் தேவியின் சரண கமலத்தைத் தியானிக்கத் தொடங்கலாம். அந்தச் சரணாரவிந்தத்தில் தானாக மனது நிலைத்து நிற்கப் பழகும். இப்படி எப்போதும் உபாசித்தால் அவளுடைய கடாக்ஷத்தால் ஜனன நிவிருத்தி ஏற்படும். அல்லது முதலில் அவளது மகிமைகளைச் சொல்லும் துதிகளைப் படிக்கலாம்.

"முதல் படி பாராயணம். அடுத்தது ஜபம். பின்பு தியானம். அப்படி தியானம் பண்ணும்போது "பராசக்தி! இந்த உடலிலிருந்து உயிர் போகும் தருணத்தில் நான் உன்னையே தியானம் பண்ணிக்கொண்டிருக்கும்படியாக அனுக்கிரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் பிரார்த்தித்து வேண்டிக் கொண்டால் உயிர்போகும் தருணத்தில் அவளுடைய தியானம் வரும். இந்த உடல் போன பின் இன்னொரு உடல் வராமல் விடுபடலாம்."

### தேவியின் பாதாரவிந்தம் உறையும் இடம்

க்ஷிதௌ ஷட்பஞ்சாசத்விஸமதிக பஞ்சாசதுதகே
ஹுதாசே த்வாஷஷ்டி: சதுரதிக பஞ்சாசதநிலே |
திவி த்விஷ் ஷட்த்ரிம்சத் மநஸிச சது: ஷஷ்டிரிதியே
மயூகா: தேஷாமப்யுபரி தவ பாதாம்புஜயுகம் || 14 ||

மனிதர்கள், முனிவர்கள், தேவர்கள் எல்லோரும் அம்பிகையின் காலடிகளில் வணங்குகின்றனர். இதனுல் அன்னையின் சேவடி சிவந்து விடுகிறது. அதனுல் அபிராமி பட்டர் "சேவடிக் கோமளமே" என்கிருர். மேலும் "அருமறைகள் பழகிச் சிவந்த பாதாம்புயத்தாள்" என்றும் குறிப்பிடுகிருர்.




பலன் க்ஷாம க்ஷாய நிவர்த்தி.

இச்சக்கிரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

பால் பாயஸம் நைவேத்யம்

# அம்பிகையின் ஸூக்ஷ்ம ரூபம் 7

### அர்த்நாரீ தத்துவம்

அம்பிகையின் ஸ்வரூபம் என்ன? நாம் பார்க்கும் எல்லாப் பொருளும் உருவங்களும் அவள்தான். அவள் இல்லாவிட்டால் நம் சரீரம், மனம், உயிர் எதுவுமே இல்லை. ஆதிசங்கரர் "நீயே பரமசிவனின் சரீரமாக இருக்கிருய்" என்கிருர்.

சரீரம் த்வம் சம்போ: சசிமிஹிர வக்ஷோருஹயுகம்
தவாத்மாநம் மந்யே பகவதி நவாத்மாநமநகம் |
அத: சேஷ: சேஷீத்யயம் உபயஸாதாரணதயா
ஸ்தித: ஸம்பந்தோ வாம் ஸமரஸபராநந்தபரயோ: || 34 ||

"அம்மா நீதானே பரமேஸ்வரரின் சரீரம்" என்கிறார் ஆதி சங்கரர். சரீரத்துள் சிவபெருமான் என்கிற உயிர் இருக்கிறது. அதுவே பிரும்மம். அதன் இத்தனை தோற்றங்களுமே பராசக்தி. உடலும் உயிரும் மாதிரி பிரும்மமும் பிரும்மசக்தியும் பிரியாமல் இருக்கின்றன.

இப்படி 'அம்பிகை இறைவனோடு இணைந்திருப்பதையே அர்த்தநாரீ என்கிறார்கள். சொல்லும் பொருளும் போல் இவர்களிருவரும் பிரிக்க முடியாமல் இருக்கிறார்கள்.

அம்பிகையின் ஸ்வரூபம் நாம் பார்க்கும் எல்லாப் பொருள் களிலுமே இருக்கிறது. உருவம் மட்டுமல்ல. எண்ணங்கள். காரியங்கள் எல்லாவற்றிலுமே இருக்கிறது.

அவள் இன்றி நம் மனஸ் சரீரம் எதுவும் இல்லை.

சௌந்தர்ய லகரியில் சரீரம் த்வம் சம்போ என்று ஆரம்பித்த ஆதிசங்கரர் அடுத்த சுலோகத்தில் "நீதான் சூக்ஷ்மமான மனதாக இருக்கிறாய்" என்கிறார்.

"நீ இல்லாமல் எதுவுமே இல்லை" என்பதை "த்வயி பரிணதாயாம் நஹிபரம்" என்கிறார்

எங்கேயும் இருக்கக் கூடியது காற்று. அதற்கு ரூபம் இல்லை. அதே போல அம்பிகையும் அக்காற்றைவிட சூக்ஷ்மமாக எங்கும் இருக்கக் கூடியவள். காற்று இல்லாத சூன்யத்திலும் அவள் இருக்கிறாள்.

உடலும் உயிரும் மாதிரி பிரும்மமும் பிரும்ம சக்தியும் பிரியாமல் இருக்கின்றன. உடலில் எல்லா இடங்களிலும் உயிர் ஓடுகிற மாதிரி பராசக்திக்குள் முழுவதும் பிரும்ம தத்துவமே நிறைந்திருக்கிறது.

இதுதான் அர்த்தநாரீஸ்வர மூர்த்தம்☐ சொல்லும் பொருளும் போல் அம்பிகையும் ஈஸ்வரனும் பிரிக்க முடியாமல் இருக்கிறார்கள்.

இதையே காளிதாசன் "ஜகத: பிதரௌ வந்தே பார்வதி பரமேஸ்வரௌ" என்று குறிப்பிடுகிறார்.

---

☐ பிரதிபாவின் 'கருணை காமாக்ஷி'யில் சிவசக்தி ஐக்ய ரூபிணி என்ற அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. 'ராஜராஜேஸ்வரி'யிலும் காணலாம்,


சரீரத்துள் உயிர்கள் இருக்கிறது. உயிர்களுக்கெல்லாம் உயிராக ஒரே மூல வஸ்துதான் இருக்கிறது. அந்த மூல வஸ்து வான பிரும்மம்தான் பரமேஸ்வரன் என்றால் அதன் இத்தனை தோற்றங்களுமே பராசக்தி. இது அவ்வளவும் அதற்கு சரீர மாகவும் அது இவற்றுக்குப் பிராணனாகவும் இருக்கிறது.

பிரபஞ்சம், அதிலுள்ள ஜீவராசிகள் அவற்றின் மனது, புத்தி, சித்தம், அகங்காரம் எல்லாம் பரமேஸ்வரன் என்ற உயிருக்கு சரீரம் மாதிரி. இது அத்தனையும் சாக்ஷாத் அம்பிகைதான்.

இரண்டு தத்வங்களில் ஒன்று பிரதானமாக இருக்கும் போது மற்றொன்று அப்பிரதானமாக இருக்கும். இதை குண ப்ரதான பாவம் என்றும் சேஷ சேஷி பாவம் என்றும் சொல்வர்.

காமேஸ்வரருக்குப் பிரதான்யம் கொடுத்து காமேச்வரியை அவரிடம் அந்தர் பாவப்படுத்தும்போது சந்திரன், சூரியன், காமேஸ்வரரின் கண்களாக விளங்குகிறார்கள். காமேஸ்வரிக்கு பிரதான்யம் கொடுத்து அவளிடம் காமேஸ்வரரை லயப்படுத் தும்போது சூரியனும் சந்திரனும் தேவியின் ஸ்தனங்களாக விளங்குகின்றனர். இதிலிருந்து ஈஸ்வரனுக்கும் அம்பிகைக்கு முள்ள அந்யோந்ய பாவம் விளங்குகிறது.

இந்த சுலோகத்தின் பலன் கணவன் மனைவியினிடையே அந்யோந்ய பாவம் ஏற்படும்.




34

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்களுக்கு தினம் 1000 தடவை இந்த சுலோ கத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

தேன், மிளகு பொடி நெய்யில் கலந்து நைவேத்யம்.

சிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்றாக களிநடம் புரிகிறதை 26-ம் சுலோகம் குறிப்பிடுகிறது. (விரிஞ்சி: பஞ்சத்வம்...விளக் கம் வேறு இடத்தில் காண்க) அன்னையும் அத்தனும் மட்டும் என்றும் அழியாமல் இருக்கிறார்கள். இதற்கு அம்பிகையின் பாதிவ்ரத்யமே காரணம்.

இதை மெய்ப்பிக்கும் வகையில் திருவள்ளுவர்,

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மையுண் டாகப் பெறின்—என்கிறார்.

இதைத்தான் அபிராமி பட்டர்

செற்றதை யானிடப்பாகக் கொண்டாளும் பராபரையே.
என்கிறார்.

இப்படி சிவசக்தி ஐக்ய திருவிளையாடலால் யாருக்கு என்ன லாபம்? இதற்கு ஆதிசங்கரர் தன் 93-வது சுலோகத்தில பதில் அளிக்கிறார்.

அராலா கேசேஷு ப்ரக்ருதிஸரலா மந்தஹஸிதே
சிரீஷாபா சித்தே த்ருஷதுபலசோபா குசதடே !
ப்ருசம் தந்வீ மத்யே ப்ருதுருரஸி ஆரோஹவிஷயே
ஜகத்த்ராதும் சம்போர்ஜயதி கருணா காசிதருணா || 93 ||

அன்னை பராசக்தியின் செம்பவழ மேனி உலக உயிர்கள் அனைத்திற்கும் அருளை வழங்குகிறது. புன்சிரிப்பு பரம்பொருள் தன்மையைக் காட்டுகிறது. மெல்லிடை இவ்வண்டங்களையே காக்கிறது.

ஆதிசங்கரர் இரண்டு ஒன்றாகும் நிலையைக் கண்டார், ஆஞ்சநேயரோ மூன்று ஒன்றாகும் நிலையைக் கண்டிருக்கிறார்.

விற்பொருள் தடந்தோள் வீர
விளங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெரும் தவத்தளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்
இப்பிறப்ப தென்பதொன்றும்
இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்,

நற்குடிப் பிறப்பு, பொறுமை, கற்பு இம்மூன்றும் சீதையை விட்டுப் பிரிக்க முடியாதபடி ஒன்றி நிற்கிறதாம்

சிவ கிருபைதான் தேவி என்று தியானிப்பவர்கள் மஹா பாக்யத்தோடு கூடியவர்களாக இருப்பார்கள்.

---


## ஸ்ரீவித்யா மங்கள மண்டலி

ஸ்ரீவித்யையைப் பரப்புவதில் அரும்பாடுபட்ட ஸ்ரீமதி மங்களம்மாள் நினைவாக இம்மண்டலி 1983 சித்திரை மூலம் அன்று துவக்கப்பட்டது.

இதன் கூட்டம் பிரதி ஆங்கில மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 11 மணிமுதல் மாலை 3 மணிவரை ஸ்ரீவித்யா நவாவரண பூஜை சம்பந்தமாக விளக்கங்கள் கூறப்படும்.


இடம்: 39, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை.4.

ஸர்வ மனோரதப்ரதம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 25 நாட்கள் 2000 தரம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

முக்த்தான்னம், பழம் நைவேத்யம்.

93



*த்வயா ஹ்ருத்வா வாமம் வபுரபரித்ருப்தேந மநஸா*
*சரீரார்த்தம் சம்போ: அபரமபி சங்கே ஹ்ருதமபூத் |*
*யதேதத்த்வத்ரூபம் ஸகலமருணாபம் த்ரிநயநம்*
*குசாப்யாம் ஆநம்ரம் குடிலசசி சூடாலமகுடம் || 23 ||*

சிவபெருமானின் உடலில் பாதி பாகம் பெற்ற அம்பிகை அவனுடைய கணவருடைய பாகத்தையும் ஆக்ரமித்துக் கொண்டு விட்டாள். வெண்மையாக உள்ள சிவனது நிறம் சிவப்பாகிவிட்டது. அவருடைய சந்திரனை இவள் ஸ்வீகரித்து தன் தலையில் சூடியிருக்கிறாள். மூன்று கண்களையும் கொண்டிருக்கிறாள்.


இந்த சுலோகத்தால் சக்தி தத்துவமே மேலானது என்று குறிப்பிடப் படுகிறது. சக்தி தத்துவத்தில் சிவதத்துவம் அடங்கியுள்ளது. அதனால்தான் புருஷார்த்தங்களை விரும்புபவர்கள் பராசக்தியை உபாசிக்க வேண்டும்.

ஸர்வ சம்பத் பிரதம். ரிண விமோசனம்.

ஸ்வர்ணத் தகட்டில் இந்த இயந்திரத்தை எழுதி வீட்டில் தினம் 1000 தடவை வீதம் 45 நாட்களுக்கு இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

பாயஸம், உளுந்து வடை நைவேத்யம்.

23



## சூட்சுமமான மனதும் நீயே

'பரமேஸ்வரனின் உடல் நீ' என்று கூறிய ஆதிசங்கரர் 35-வது சுலோகத்தில் ''நீதான் சூட்சுமமான மனதாக இருக்கிறாய்' என்கிறாய்.

*மநஸ்த்வம் வ்யோமத்வம் மருதஸி மருத்ஸாரதிரஸி*
*த்வமாப: த்வம் பூமி: த்வயி பரிணதாயாம் நஹி பரம்!*
*த்வமேவ ஸ்வாத்மாநம் பரிணமயிதும் விச்வவபுஷா*
*சிதாநந்தாகாரம் சிவயுவதி பாவேந பிப்ருஷே ‖ 35 ‖*

மூலமான மனதிலிருந்து சூட்சுமமான ஆகாசம் உண்டாயிற்று. அது மேலும் ஸ்தூலமாகி காற்று, அக்னி, ஜலம், மண் எல்லாம் வந்தன. (இதுவே பிரபஞ்ச சிருஷ்டி) எல்லாமே நீதான். நீ இல்லாமல் எதுவுமே இல்லை.

த்வயி பரிணதாயாம் நஹிபரம்—சம்புவுக்கு நீ சரீரமாக இருந்தாலும் இந்த பேதமில்லாமல் ஒன்றாக இருப்பவளும் நீ. நீயேதான் விசுவம் என்கிற சரீரமாய் பரிணமித்தாய் (த்வம் ஏவ ஸ்வாத்மானம் பரிணமயிதும் விச்வ புருஷா)

எங்களிடமுள்ள துளி ஞானத்துக்கும் ஆனந்தத்திற்கும் மூலமான பரமஞானமும் பரமானந்தமும் நீதான். இந்த ஞானத்தையும் ஆனந்தத்தையும் அனுபவிப்பதற்கே ஒன்றாக இருந்தவள். இரண்டாகி யுவ, யுவதி என்ற பாவத்தையும் தாங்கியிருக்கிறாய்' என்கிறார்.

இது பற்றி காமகோடிப் பெரியவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:

''எங்கேயும் ஒன்று இருக்கிறது என்றால் அதற்கு தனி உருவம் எப்படி இருக்க முடியும்? காற்று எங்கேயும் செல்ல முடிகிறது. அதற்கு ரூபம் இல்லை. அம்பிகை அதைவிட சூக்ஷ்மம், காற்று இல்லாத சூன்யத்தையும் உண்டாக்குகிறாள். ஆனால் அவள் இல்லாத இடம் இல்லை. மனது, எண்ணம் இவைகளிலும் இருக்கிறாள் என்றால் அவளுக்கு ரூபம் எப்படியிருக்க முடியும்?


''அவள் எல்லாமாக இருக்கிறாள் என்று நம் புத்தியால் உணர முடியவில்லை. அருவமாக அவளைத் தியானிக்க பக்குவம்

---

☐ இதன் விவரம் பிரதிபாவின் 'தேவி புவனேஸ்வரி'யில் விரிவாகக் காணலாம்.

போதவில்லே. நமக்காக நாம் அன்பு செய்வதற்காக அவள் காருண்யமும் லாவண்யமும் ஒரு ரூபமாகி திவ்ய மங்கள விக்கிரகமாக விளங்குகிருள். ரூபமில்லாத நெய்யை நன்ருகக் குளிர வைத்தால் பாளம் பாளமாகக் கெட்டிப்பட்டு போகிறது. இப்படித்தான் "க்ருத காடின்ய வத்" என்கிற நியாயப்படி பக்தர்களுடைய நெஞ்சின் குளிர்ச்சியில் பரம சூக்ஷ்மமான அம்பிகை உறைந்துபோய் ஸ்தூலமான திவ்ய ரூபம் கொள்கிருள்.

இதன் பலன் க்ஷயரோக நிவ்ருத்தி.



35

இந்த யத்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

சர்க்கரை, தேன், பாயஸம் நைவேத்யம்.

## இதய மலரில் அம்பிகை

அருணும் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணும் புயமுலேத் தையல் நல்லாள் தகைசேர் நயன
கருணும் புயமும் வதனும் புயமும் கராம்புயமும்
சரணும் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒரு தஞ்சமே.

அபிராமி அந்தாதி-58

அருணேதயம் போன்ற செக்கச் சிவந்த தாமரை மலரில் தேவி வீற்றிருக்கிருள். அவளே நம் சித்தத் தாமரையிலும் அமர்ந்திருக்கிருள். மகான்களுக்கு புறத்தே காண்பதை அகத்தே காணும் வாய்ப்புண்டு. ஆகவே தன் இதயத் தாமரையில் அவள் கொலுவீற்றிருப்பதைக் கண்டு ஆனந்திக்கிருர்.

---

இதில் கண்ட ப்ரயோகங்கள் மிகவும் ரஹஸ்யமானது. ஆகையால் ஸ்ரீவித்யை ஸம்பந்தமான ஏதாவது ஒர் மஹா மந்த்ரத்தை குரு முகமாக உபதேசம் செய்துகொண்டு ஜபம் செய்து வருபவர்களுக்குத்தான் பலனேக் கொடுக்கக் கூடியது.

---

## தேவி வசிக்கும் ஸ்ரீசக்ரம்
### யந்திர ரூபிணி

*சதுர்பி: ஸ்ரீகண்டை: சிவயுவதிபி: பஞ்சபிரபி*
*ப்ரபிந்நாபி: சம்போ: நவபிரபி மூலப்ரக்ருதிபி: |*
*சதுச்சத்வாரிம்சத் வஸுதலகலாச்ர த்ரிவலய*
*த்ரிரேகாபி: ஸார்தம் தவசரணகோணா: பரிணதா: || 11 ||*

அம்பிகையின் உறைவிடமான ஸ்ரீசக்ரம் இதில் வருணிக்கப் படுகிறது.

**யந்திரம்** ஞானம் என்னும் பொருளைத் தரும் ஞானு என் னும் சொல் இதன் அடிச் சொல்லாகும். ஞானு—த்ர—யந்திர

ஞானத்தை அடைவதற்கு தடையாயினவற்றில் இருந்து விடுபடுமாறு சொல்வது இதன் பொருள். சக்தியைக் கோடுகள் மூலம் பெறுவதே இதன் தத்துவம். சக்தியின் ஆற்றல் கோடு களாகக் குறிப்பிடப் படுகிறது.

அலையின் இடைவெளி குறையுமேயானால் ஆற்றல் அதிக மாகும். (WAVE LENGTH DECREASES ENERGY INCRLASES) எனவே வளைந்த கோடுகளைக் காட்டிலும் நேர்க் கோடுகள் அதிக ஆற்றலை உணர்த்துவன. இத்தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்டதே யந்திரமாகும். ஞானம் அடைய தடையா யினவற்றை வேறு ஆற்றலின் துணையால் தகர்க்க உதவுவதே யந்திரம் ஆகும்.

''யம்'' என்ற சொல்லை அடிச் சொல்லாகக் கொண்டது என்றும் கட்டுப்படுத்துவது என்பது இதன் பொருள். சக்தி களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைத் தருவது என்பது இதன் பொருள்.

ஒன்பது யோனிகள் என்று சொல்லப்படும் ஒன்பது திரி கோணங்கள் சரீரத்திலுள்ள ஒன்பது தாதுக்களாகும்.

த்வகஸ்ருக் மாம்ஸமே தோஸ்தி தாதவ: சக்திலேகா |
மஜ்ஜா சுக்ல ப்ராண ஜீவ தாதவச்சிவ மூலகா : |
நவதாதுரயம் தேஹ: நவயோனி ஸ்முத்பவ : |
தசமோதாது ரேகைவ பராசக்தி ததீச்வரீ ||

என்றபடி த்வக் (தோல்) அஸ்ருக் (ரத்தம்) மாம்ஸம், மேதஸ், அஸ்தி இந்த ஐந்தும் சக்தி கோணங்கள். மஜ்ஜா, சுக்லம்,

☐ ஸ்ரீசக்ரம் பற்றிய சகல விவரங்களும் பிரதிபாவின் 'ஸ்ரீ [illegible] நாயகி' களில் காணலாம்.

பிராணன், ஜீவன் இந்நான்கும் சிவ கோணங்கள். தேகமே ஸ்ரீசக்ரம். நடுவில் இருதயமான பிந்துவில் அம்பிகை வீற்றிருக்கிறாள்.

பிண்டாண்டமும் பிரும்மாண்டமும் ஸ்ரீசக்ர ஸ்வரூபமே.
த்ரிகோண அஷ்டகோணஞ்ச தசகோணத்வயம் ததா ।
சதுர்தசாரஞ்சைதானி சக்தி சக்ராதி பஞ்ச ச
பிந்துச் சாஷ்டத்தளம் பத்மம் பத்மம் ஷோடச பத்ரகம்
சதுரஞ்ரஞ்ச சத்வாரி சிவ சக்ராண்யனுக்ரமாத் ॥

முக்கோணம், எட்டுக் கோணம், இரு பத்துக் கோணங்கள், பதினன்கு கோணம் (இவை ஐந்தும் சக்தி சக்ரங்கள்)

பிந்து எட்டிதழ் கமலம், பதினறு இதழ் கமலம், நாற்கோணம் ஆகிய நான்கும் சிவ சக்ரங்கள்.

ஸமய சாரப்படி உள்ள ஸ்ரீசக்ரத்தில் நடுமுக்கோணம் மேல் நோக்கியுள்ளது. கௌலாசாரப்படி வரையும் சக்ரத்தில் கீழ் நோக்கியுள்ளது.

பிந்து 44வது, கலைகள் 16—16 தளங்கள். வசுக்கள் 8—8 தளங்கள்.

ஒன்பது சக்ரங்களும் அண்டமாகிய உலகிற்கும் பிண்டமாக உடலுக்கும் மூல காரணங்களான தத்துவங்களைக் குறிப்பிடுவதால் அவை மூலப் பிரக்ருதி அல்லது யோனி என்று குறிப்பிடப் படுகிறது.

உடலிலுள்ள மூலப்பொருள்களில் மஜ்ஜை, சுக்கிலம், பிராணன், ஜீவன் சிவ அம்சம்.

தோல், ரத்தம், மாம்ஸம், மேதை (மூளை), அஸ்தி (எலும்பு) சக்தி அம்சம்.


அண்டத்திலுள்ள மூல காரணங்களில் பஞ்ச பூதங்களும் சக்தி அம்சம். மாயை, சுத்தி வித்தை மகேஸ்வரன் சதாசிவன் சிவ அம்சம்.

தமிழ் சௌந்தர்ய லகரி பாடல்

சிவகோணம் முன் பகர்வது
ஒரு நாலு சக்தி நெறி
செறி கோணம் அத்தோடு ஒரு மருவு கோள்
நவகோணம் உட்படுவது எழுமூ இரட்டி ஒரு
நவில்கோணம் உற்றதுவும் வலயமாய்

இவரா நிரைத்த தளம் இரு நாலும் எட்டு இணையும்
எழிலாய வட்டமொடு சதுரமாய்
உவமானம் அற்ற தனித் தனி மூவகைக் கணும் என்
உமை பாதம் உற்ற சிறுவரைகளே,

ஸ்ரீசக்ரம் என்ற ரகசியமான மாளிகையில் அம்பிகை உறைகிருள், பிந்து என்ற மைய ஸ்தானமே தேவி இருப்பிடம்.



இந்த உபாசனை புத்ரோத்பத்தி பலனை அளிக்கக் கூடியது,

இச்சக்கரத்தை வெண்ணெயில் எழுதி பூஜித்த பின் சாப்பிடவும். எட்டு தினங்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

குள பாயஸம், மஹா நைவேத்யம் நைவேத்யம்.

## தேவியின் மந்திர மகிமை
### மந்திர ரூபிணி

சதுஷ்ஷஷ்ட்யா தந்த்ரை: ஸகலம் அதிஸந்தாய புவநம்
ஸ்தித: தத்தத்ஸித்தி ப்ரஸவபரதந்த்ரை: பசுபதி: |
புந: த்வந்நிர்பந்தாதகில புருஷார்த்தைககடநா
ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதலம் அவாதீதரதிதம் || 31 ||

அம்பிகையின் பஞ்சதசீ வித்யையை பரமசிவனே இப்பூவுலகில் பிரகாசிக்கச் செய்தார் என்கிறது இந்த சுலோகம்.


சிவபெருமானுக்குப் பசுபதி என்ற ஒரு பெயர் உண்டு. ஜீவன்கள் எல்லாம் பசுக்கள். அவற்றிற்கு பதியாக அவர் இருப்பதால் பசுபதி. இவர் அம்பிகையைக் கலந்தாலோக்காமலேயே சகல ஜீவ கோடிகளையும் கரை ஏற்றிவிடலாம் என்ற எண்ணத்துடன் 64 தந்திர சாஸ்திரங்கள் உண்டு பண்ணினார். இவை பிராணிகளை வஞ்சித்து பிராணிகளை தன் வசமாக்கிக் கொண்டு கீர்த்தியையும் ஐஸ்வர்யத்தையும் சம்பாதித்துக் கொள்ளத்தான் உதவிற்று. தேவி நிர்ப்பந்தத்தின் பேரில் பரமேஸ்வரன் ஸனகர், ஸநந்தர், ஸனத்குமாரர், சுகப்பிரும்மம் வசிஷ்டர் என்ற ஐந்து மகரிஷிகள் மூலமாக ''சுபாகம பஞ்சகம்'' என்ற தேவியினுடைய சாஸ்திரத்தை பரவச் செய்தார்.

## சுபாகம பஞ்சகம்

இது 16 விதமான நித்யா தேவதைகளை வழிபடும் சாஸ்திர மாகும். வாசிஷ்ட ஸம்ஹிதையில் பின்வரும் சுலோகம் கவனத்திற்குரியது.

ச்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி
நித்யா ஷோடசிகார்ணவம்|
ந கஸ்யசித் மயாக்யாதம் ஸர்வ
தந்த்ரேஷு கோபிதம் ||
தத்ராதௌ பிரதமா நித்யா
மஹா திரிபுரசுந்தரீ |
தத: காமேஸ்வரீ நித்யா நித்யா ச பகமாலினி ||
நித்யக்லின்னு ததா சைவ பேருண்டா வஹ்நிவாஸினி
மஹாவித்யேஸ்வரீ தூதி த்வரிதா குலசுந்தரீ ||
நித்யா நீலபதாகா ச விஜயா ஸர்வ மங்களா |
ஜ்வாலாமாலினிகா சித்ரா ஏதா நித்யாஸ்து ஷோடச ||
பிரதிபத்பிரமுகா தேவா ! பௌர்ண மாஸ்யந்த
மர்சயேத் ||

ஸ்ரீவித்யை ஆகமம் என்றும் கூறுவர். ஆகமம் தந்திரம் எனப்படும், யந்திரம் என்கிற சக்கரமும் மந்திரமும் அடங்கியது.

31 

சகல வச்யம். சகல சம்பத் பிரதம்.

ஸ்ரீசக்ரத்தை ஸ்வர்ணத் தகடுடில் எழுதி தினம் 1000 தடவை வீதம் 45 நாட்களுக்கு இந்த சுலோகத்தைப் பாரா யணம் செய்யவும்.

தேன். பால், பழம் நைவேத்யம்.

## தேவியின் மந்திரம்
### (சுத்த பஞ்சதஸி)

சிவச்சக்தி: காம: க்ஷிதிரத ரவிச்சீத கிரண:
ஸ்மரோ ஹம்ஸ: சக்ரஸ்ததநுச பராமாரஹாய : |
அமீ ஹ்ருல்லே காபி: திஸ்ருபி: அவஸாநேஷு கடிதா :
பஜந்தே வர்ணுஸ்தே தவஜநநி நாமாவயவதாம் || 32 ||

க, ஏ, ஈ, ல என்ற நான்கு அக்ஷரங்கள் சேர்ந்து முதல் பாகம்.

ஹ, ஸ, க, ஹ, ல என்ற ஐந்து அக்ஷரங்கள் சேர்ந்து இரண்டாவது பாகம்.

ஸ, ஹ, ல என்ற மூன்று அக்ஷரங்கள் சேர்த்து மூன்ருவது பாகம்.

இந்த மூன்று பாகங்களின் முடிவில் 'ஹ்ரீம்' என்ற பீஜாக்ஷரங்களைச் சேர்த்துக் கொண்டால் பதினைந்து அக்ஷரங்கள் ஆகிவிடுகின்றன. இதை பஞ்சாக்ஷரி மகாவித்யை என்பர்.

முதல் பாகத்தை அக்னி கண்டம் என்றும் இரண்டாவது பாகத்தை ஸௌர்ய கண்டமென்றும் மூன்ருவது பாகத்தை சந்திர கண்டம் என்று சொல்லப்படும்.

ஒரு கண்டம் முடிந்து மற்ருெரு கண்டம் ஆரம்பிக்கும் எல்லே அடையாளமாக ஒவ்வொரு கிரந்திகள் அமைந்துள்ளன.

சந்திர கண்டத்திற்கு மேல் சந்திரகலா மண்டலம் என்று நாலாவது கண்டம் உண்டு. 'ஹ்ரீம்' என்ற ஒரே அக்ஷரம்தான் அதைச் சேர்ந்தது.

திரி கண்டோ மாத்ருகா மந்திர :

இந்த சுலோகத்தை கவி வீரராஜர் தன் தமிழ் சௌந்தர்ய லஹரியில் பின்வருமாறு குறிப்பிடுகிருர்.

அரியதாகும் சிவம் சக்தி மதன் அவனி
பின்பு ஆதித்தன் மதி மதனவேள்
பெருகுவான் இந்திரன், பின்பு பரை மதனன் மால்
பேசின் முக்கண்டம் அதுவே
உரியதாம் அந்தத்தின் மாயை மும்முறை யமைத்து
உனுமெழுத் தடைய உணர்வால்
தெரியின் நாமத்திெனுடும் உனது உறுப்பாம் என்று
செப்பும் நான்மறைகள் உமையே.

சிவன் எழுத்தான 'க'

சக்தி எழுத்தான 'ஏ'

மன்மதன் எழுத்தான 'ஈ'

பூமி எழுத்தான 'ல'

பின்பு சூரியன் எழுத்தான 'ஹ'

சந்திரன் எழுத்தான 'ஸ'

மன்மதன் எழுத்தான 'க'
ஆகாய எழுத்தான 'ஹ'
இந்திரன் எழுத்தான 'ல'
பின்பு பரை எழுத்தான 'ஸ'
மன்மதன் எழுத்தான 'க'
மாலின் எழுத்தான 'ல'

இவைகளுடன் மாயையின் எழுத்தான ஹ்ரீம் சேர்ந்து அம்பிகையின் மந்திரமாகின்றன.

எழுத்தின் விவரங்களை குருமுகமாகவே அறிய வேண்டும்.

எல்லாக் கண்டங்களிலும் மன்மதன் எழுத்து வருவதைக் கவனிக்கவும்,

இந்த பஞ்ச தசாக்ஷரி மந்திரத்திலுள்ள உயிர் மெய் எழுத்துகளிலிருந்தே ஆகர்யம், வாயு, அக்னி, அப்பு, பிருத்வி என்ற பஞ்ச பூதங்கள் தோன்றின.

| | |
|---|---|
| ஆகாசத்தின் குணம் சப்தம் | 1 |
| வாயுவின் குணம் சப்தம், ஸ்பர்சம் | 2 |
| அக்னியின் குணம் சப்தம், ஸ்பர்சம், ரூபம் | 3 |
| நீரின் குணம் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் | 4 |
| பிருத்வியின் குணம் சப்தம், ஸ்பர்சம், ரூபம் ரஸம் கந்தம் | 5 |
| | 15 |

இப் பதினைந்து குணங்களே பஞ்சதஸாக்ஷரி என்கிறது வரிவஸ்யா ரகசியம்.

பஞ்ச சதாக்ஷரி மந்திரத்தின் நாலாவது கூடம் சந்திரகலா கூடம். ரமா பீஜமாகிய 'ஸ்ரீம்' சேர்ந்து 16 கலையுடன் இம் மந்திரம் பூரணமடைகிறது என்றும் அதனால்தான் ஸ்ரீவித்யா என்ற பெயர் பெற்றதென்றும் லக்ஷ்மீதரர் கூறுகிறார்.

இந்த சுலோகத்தை கைவல்ய ஆசிரமருடைய ''ஸௌபாக்ய வர்த்தனீ'' என்ற வியாக்யானத்தில் 'லோபா முத்ரா வித்யா' என்று குறிப்பிடுகிறது.

லோபாமுத்ரா அகஸ்தியரின் மனைவி. இவள் அம்பிகையின் பரம பக்தை. இவளை உத்தேசித்தே அகஸ்தியருக்கு தேவி பற்றிய இரகசியங்கள் உபதேசிக்கப்பட்டன. இதை ஹாதி வித்தை என்பர்.


லோபா முத்ரா வித்யா

ஹஸகல ஹ்ரீம் - ஹஸகஹல ஹ்ரீம்-ஸகலஹ்ரீம்

தூர்வாஸா வித்யா என்று ஒன்றிருக்கிறது. இதை த்ரயோ தசாக்ஷரீ என்பர்.

ஹஸகல-ஹஸகஹல ஸகல ஹ்ரீம்.

32




மோகினி ஸித்தி. ஸகல வியா பார ஜயம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி பூஜித்த பின் வியாபார ஸ்தலத்தில் கட்டி வைக்கவும். தினம் 1000 தடவை வீதம் 45 நாட்கள் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

நைவேந்யம் தத்யான்னம், உளுந்து வடை, சர்க்கரைப் பொங்கல்.

## சௌபாக்ய பஞ்சதஸி

ஸ்மரம் யோநிம் லக்ஷ்மீம் த்ரிதயமித மாதௌ தவமநோ :
நிதாயைகே நித்யே நிரவதி மஹாபோகரஸிகா : ।
பஜந்தி த்வாம் சிந்தாமணி குணநிபத்தாக்ஷவலயா :
சிவாக்நௌ ஜுஹ்வந்த : ஸுரபிக்ருத தாராஹுதி சதை :
|| 33 ||

திரிகோணமான வேதிகையில் (அக்னிக் குண்டத்தில்) சிதக்னியில் காம பீஜமான 'க்லீம்' புவனேஸ்வரி பீஜமான 'ஹ்ரீம்' லக்ஷ்மீ பீஜமான 'ஸ்ரீம்' அவரோஹ கிரமமாக ஸௌபாக்ய பஞ்சதசியாக செய்துகொண்டு ஹோமம் செய்வது.

முக்கோண வடிவமான குண்டத்தில் அக்னியை ஸ்தாபித்தால் அதை சிவாக்னி என்பர். மானஸிகமாக செய்வது 'சிவோஹம்' என்ற பாவனை.

பஞ்ச தசாக்ஷரி மந்திரந்திற்கும் சாவித்திரி மந்திரத்திற்கும் ஒற்றுமை உண்டு. பஞ்ச தசாக்ஷரிக்கு மூன்று கூடங்கள். சாவித்திரி மந்திரத்திற்கு மூன்று பாகங்கள். சாவித்திரி மந்திரத்துடன் பூ: புவ: ஸுவ: என்ற மூன்று வியாக்ருதிகளைச் சேர்த்தால் அப்போது காயத்ரி மந்திரமாகி விடுகிறது. அது போல


பஞ்ச தசாக்ஷரிக்கு முன் விமர்சப்பிரணவங்கள் எனப்படும் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஸௌ: என்பனவற்றில் மூன்றைச் சேர்த்தால் அது சௌபாக்ய பஞ்சதசாக்ஷரி ஆகும், ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் இம் மூன்றையும் முன் சேர்த்து ஜபிப்பது சிறந்த பயன் அளிக்கும். எனப்படுகிறது. ஆனால் ஐம் க்லீம் ஸௌ: என்ற பீஜங்களை முறையே ஒவ்வொரு கூடத்தின் முதலில் சேர்ப்பதே ஸௌபாக்ய வித்தை என வழக்கத்தில் இருந்து வருகிறது.

திரவ்ய ஸம்பத் விருத்தி.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி அதைக் கையில் மூடி வைத்துக் கொண்டு ஜபிக்க வேண்டும். தினம் 1000 தடவை விதம் 45 நாள் பாராயணம்.

நைவேத்யம் முத்கான்னம் சித்ரான்னம், தேன்.

33




ராமர், கிருஷ்ணர் இந்த சௌபாக்ய வித்தையை உபாசித்தவர்கள். ராமன் சீதையைத் திரும்பிப் பெற்றதும் கிருஷ்ணம் சியமந்தகமணியையும் ஜாம்பவதியையும் பெற்றதும் இந்த வித்யையினுல்தான்.

## மஹா ஷோடசி மந்திர மகிமை

இம் மந்திர மகிமை 'ஸமுன்மீலத் ஸம்வித்' என்ற 38வது சுலோகத்திலும் விவரிக்கப்படுகிறது.

மோக்ஷத்திற்கு ஹேதுவான வித்யை எதுவோ அதுவே ஸ்ரீவித்யை. இதில் ஷோடசீ மிகவும் முக்கியமானது. இந்த உபாசகர்களுக்கு தேவிதான் குரு. இதற்கு அஷ்டாதச குணித வித்யா என்றும் பெயர். இதை உபாசிக்கிறவர்களுக்கு குருவும் தேவியுமே முக்கியம். ஹம்ஸ உபாசிகள் என்றே இவர்களை ஆதிசங்கரர் குறிப்பிடுகிருர்,

---

மகா சக்தியின் சலனத்தால் உலகங்கள் உற்பத்தி ஆகிற தென்றால் அச்சக்தியின் பெருமை எத்தகையதாக இருக்க வேண்டும்? ஆகாயமே சக்தி மயம் என்பது நம் முன்னோர்கள் கருத்து.

---

# பரரூபம் குண்டலினி ரூபம்□ 8

மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்.
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதமகாசமுபரி।
மனோபி ப்ருமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ॥ 9 ॥

அம்பிகை மூலாதாரத்தில் பிருத்வி தத்துவமாகவும், மணி பூரகத்தில் ஜலம், சுவாதிஷ்டானத்தில் அக்னி, அனாகதத்தில் வாயு, விசுத்தியில் ஆகாசம், ஆக்ஞையில் மனம் தத்துவங்களாக ஊடுருவிச் சென்று பிரும்மரந்திரத்தில் ஆயிரம் இதழ் கமலத்தில் தன் பதியாகிய சிவத்துடன் கூடி மகிழ்கிறாள்.

ஆறு ஆதாரங்களையும் மூன்று கிரந்திகளையும் தாண்டிச் செல்லும் குண்டலினி பிரபோதம் ஷட்சக்ர பேதனம் என்றும் அந்தர் யாகம் என்றும் கூறப்படும். இதைத்தான் லலிதா சகஸ்ரநாமம்

மூலாதாரைக நிலயாயை
பரஹமக்ரந்தி விபேதிந்யை
மணிபூராந்த ருதிதாயை
விஷ்ணுக்ரந்தி விபேதின்யை
ஆக்ஞா-சக்ராந்தராலஸ்தாயை
ருத்ரக்ரந்தி-விபேதிந்யை

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பற்றி தமிழ் சௌந்தர்ய லஹரியில் உள்ள பாடல்

மூல மணிபூரகத்தோடு இலங்க மார்பு
முதுகளம் வில்புருவ நடு மொழிவது ஆறு
ஞாலமும் மென்புனலும் அனல் பிழம்பும் காலும்
நாதமுறு பெருவெளியும் மனமும் ஆக
மேல் அணுகிக் குளபதத்தைப் பின்னிட்டு அப்பால்
மென்கமலத்து ஆயிரம் தொட்டு அருண பீடத்து
ஆலவிடம் பருகிய தன் மகிழ்தரோடும்
ஆனந்தமுறும் பொருளை அறியலாமே.


மூலாதாரத்தில் அம்பிகை 'குண்டலினி ரூபத்தில் உறக்கத்

---

□ விவரங்களுக்கு பிரதிபாவின் 'குண்டலினி சக்தி'', ''ஆறு ஆதாரங்களில் அம்பிகை'' புத்தகங்களில் காணவும்

தில் இருக்கிருள். அவளை விழிப்படையச்செய்து மேல் நோக்கி எழச் செய்ய வேண்டும். அவளை ஆறு ஆதாரங்கள் வழியாக அழைத்துச் சென்று சகஸ்ராரத்தில் சிவத்துடன் சேர்க்க வேண்டும். (அகுலா ஸமயாந்தஸ்தா ஸமயாசார தத்பரா— லலிதா சகஸ்ரநாமம்) இதுவே சமயாசார பூஜை.

இதன் பலன் தேசாந்திரம் சென்றவன் திரும்பி வருவான். எந்த திக்கில் சென்றுளே அந்த திக்கை நோக்கி ஜபம் செய்யவும்.



9

இந்த இயந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி கஸ்தூரியை மேல் பூசவும்,

45 தினங்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

பால் பாயஸம் நைவேத்யம்.

ஆறு ஆதாரங்களில் 21 தத்துவங்களும் பிரும்மரந்திரததில் மாயை, சுத்த வித்யை, மஹேஸ்வர சதாசிவ தத்துவங்கள் 4ம் (தத்துவங்கள் உள்ளன) 25வது தத்துவமான சதாசிவத்துடன் 26 வது தத்துவமாக அம்பிகை சேருகிருள்.

ஸுதாதாரா ஸாரை: சரணயுகளாந்தர்விகளிதை:
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புநரபி ரஸாம்நாய மஹஸ: |
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிபம் அத்யுஷ்டவலயம்
ஸ்வமாத்மாநம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே குஹரிணி
|| 10 ||

மூலாதாரத்திலிருந்து ஏறி சகஸ்ராரம் அடைந்த குண்டலினி சக்தி மீண்டும் தன் இருப்பிடத்திற்கு வருவதை இந்த சுலோகம் குறிப்பிடுகிறது.

குண்டலினி சக்தி இல்லையேல் இந்த உடல் செயல்படாது.

இது உறங்குவதாகச் சொன்னலும் உறங்குவதில்லை. மீனைப் போல (மீன்கள் தூங்கும்போதும் கண் மூடுவதில்லை. உறங்காமல் உறங்கும். உறங்கும் குண்டலியை மீனின் கண்ணுக்கு ஒப்பிடுகிருர் கவிராஜர்.

ஸுஷுமாள மார்க்கமே குலபதம் அல்லது ராஜவீதி என்று

சொல்லப்படுகிறது. குண்டலினி சக்திக்கு 'குலாங்கனு' என்று பெயர்.

எல்லாவற்றிற்கும் ஆதாரம் பூமி தத்துவம். அது உள்ள அடிப்படையான சக்ரம் மூலாதாரம் எனப்பட்டது, மூலாதாரத்திற்கு அடுத்தபடி ஸ்வாதிஷ்டானம்தான். ஆனல் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற வரிசையை அனுசரித்து மூலாதாரத்திற்குப் பின் மணிபூரகம் குறிப்பிடப்படுகிறது.


9ம் சுலோகத்தில் குண்டலினி சக்தி மேல் எழுவதும் 10ல் அது கீழே இறங்குவதும் குறிப்பிடப்படுகிறது. மூலாதார சக்கிரமே குல குண்டம். (கு என்பது பிருத்வி தத்துவம்) தமிழ் சௌந்தர்ய லகரி பாடல்.

தாள் இணைக் கமலம் ஊறித் தரும் அமிழ்து உடலம் மூழ்க
மீள அப்பதங்கள் யாவும் விட்டு முற்பழைய மூலம்
வாள் அரவும் என்ன அகம் வளைத்து உயர் பணத்திைேடு
நாளும் மைக்கயல் கண் துஞ்சும் ஞான ஆனந்த மின்னே!

குண்டலினி உறங்கும்போதும் படம் எடுத்த பாம்பின் உருவத்திலேயே சுருட்டிக் கொண்டிருக்கும். கண் மீனைப் போல திறந்தே இருக்கும்.

சகஸ்ரார பத்மத்தில் தேவியின் திருவடிகள் இருக்கின்றன. அவள் திருவடிகள் சம்பந்தப்படுவதால் அங்குள்ள ஜலம் அம்ருதமயமாகிறது. அந்த ஜலம் 72000 நாடிகளிலும் பரவி சிரஞ்சீவித்துவத்தை அளிக்கிறது.

10




இவ்வழிபாட்டின் பலன் வீர்ய விருத்தி.

இந்த சக்ரத்தை ஸ்வர்ணத்தகட்டில் எழுதி 6 தினம் நாள் ஒன்றுக்கு 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

பழம் நைவேத்யம்.

## மூலாதார சக்ர மகிமை

*தவாதாரே மூலே ஸஹஸமயயா லாஸ்யபரயா*
*நவாத்மாநம் மந்யே நவரஸ மஹாதாண்டவநடம் |*
*உபாப்யாம் ஏதாபயாம் உதயவிதிம் உத்திச்ய தயயா*
*ஸநாதாப்யாம் ஜக்ஞே ஜநகஜநநீமத் ஜகதிதம் || 41 ||*

மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்திக்குத்தான் கௌலினி என்ற பெயர் லலிதா சகஸ்ரநாமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு அம்பிகைக்கு ஈஸ்வரனுக்கும் சரிசம அந்தஸ்து. (விவரம் 'ஆறு ஆதாரங்களில் அம்பிகை' காணவும்)

இந்த உபாசனா பலன் குல்ம ரோக நிவாரணம்,

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 30 நாள் தினம் 4000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

தேன், பொங்கல் நைவேத்யம்.

41




## ஸ்வாதிஷ்டான மகிமை

*தவ ஸ்வாதிஷ்டாநே ஹுதவஹம் அதிஷ்டாய நிரதம்*
*தமீடே ஸம்வர்தம் ஜநநி மஹதீம் தாம் ச ஸமயாம் |*
*யதா லோகே லோகாந் தஹதி மஹஸி க்ரோதகலிதே*
*தயார்த்ரா யா த்ருஷ்டிः சிசிரம் உபசாரம் ரசயதி || 39 ||*


இறைவன் நெருப்பாக காந்தத்திலும் அம்பிகை குளிர்ச்சியாக இருந்து அருள் பாலிக்கும் தத்துவத்தை விளக்குவது இந்த சுலோகம். ஜல தத்துவம் இங்கு பிரதானமானாலும் அக்னி தத்துவத்தின் ஆதிக்கமும் இங்கு இருந்து வருகிறது.

பலன் துர்ஸ்வப்பன நிவாரணம்

யந்திரத்தை ஸவர்ணத் தகட்டில் எழுதி 12 நாள் தினம் 108 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம செய்யவும்.

பொங்கல், பால் பாயஸம், தேன் நைவேத்யம்.


39



## மணிபூரக மகிமை

தடித்த்வந்தம் சக்த்யா திமிரபரிபந்திஸ்புரணயா
ஸ்புரந்நாநாரத்னாபரண பரிணத்தேந்த்ர தனுஷம்
தவ ச்யாமம் மேகம் கமபி மணிபூரைகசரணம்
நிஷேவே வர்ஷந்தம் ஹரமிஹிரதப்தம் த்ரிபுவநம் || 40 ||

சிவ சக்தியை மேகமாக பாவித்து தியானம் செய்யும்படி ஆதி சங்கரர் கூறுகிறார். சதாசிவ மேகத்தில் அம்பிகை மின்னல் போல் ஒளி வீசுகிறாள். (விளக்கம் 'ஆறு ஆதாரங்களில் அம்பிகை' யில் காணவும்)




இதன் உபாசனா பலன் நினைத்ததை ஸ்வப்பனத்தில் காணலாம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் வரைந்து 45 நாட்கள் தினம் 1000 விதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

பால், பாயஸம், தாம்பூலம் நைவேத்யம்.

## அனாஹத சக்ர மகிமை

ஸமுந்மீலத்ஸம்வித் கமலமகரந்தைகரஸிகம்
பஜே ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மாநஸசரம் |
யதாலாபாத் அஷ்டாதசகுணிதவித்யாபரிணதி :
யதாதத்தே தோஷாத் குணமகிலம் அத்ப்ய: பய இவ || 38 ||

இந்த சுலோகத்தில் இறைவன் இறைவி இருவரையும் இரு ஹம்ஸங்களாக தியானிக்க வேண்டும்


ஹம்ஸ: ஸோஹம், ஸோஹம் ஹம்ஸ: என்ற வித்யையை விளக்குகிறது இந்த சுலோகம்.

அஹம் பிருஹ்மாஸ்மி என்ற ஞானத்தால் பெறுகிற ஆனந்தத்தை இந்த ஹம்ஸங்கள் உண்டு உல்லாசமாக இருக்கின்றனவாம்.

இந்த உபாசனை பலன் பாலாரிஷ்ட நிவ்ருத்தி.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் வரைந்து 45 நாள் தினம் 5000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

அபீஷ்ட நிவேதனம்.




38

## விசுத்தி சக்ர மகிமை

விசுத்தெள தே சுத்தஸ்படிகவிசதம் வ்யோமஜநகம்
சிவம் ஸேவே தேவீமபி சிவஸமாந வ்யவஸிதாம் |
யயோ: காந்த்யா யாந்த்யா: சசிகிரண ஸாரூப்ய ஸரணே:
விதூதாந்தர்த்வாந்தா விலஸதி சகோரீவ ஜகதீ || 37 ||

லலிதா திரிசதியிலுள்ள 'ஹார்த்த ஸந்தம ஸாபா ஹா' என்ற நாமாவின் அர்த்தம் கொண்டது இந்த சுலோகம். சந்திரனும் சூரியனும் ஒன்று சேர்ந்துவிட்டால் அன்று இரவில் பிரகாசம் இராது. அது போல சந்திரனுடைய ஸ்தானத்திலுள்ள அம்பிகையும் சூரியனுடைய ஸ்தானத்திலுள்ள சிவனுடன் சேர்ந்துள்ளது போல இங்கு தியானிக்க வேண்டும்.

பலன் பூதப் பிரேத பிசாச உபத்ரவ நிவ்ருத்தி.



இந்த எழுத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாள் தினம் 5000 தடவை இந்த சுலோகத்தை ஜபிக்கவும். பாயஸம், பழம் உளுந்து வடை நைவேத்யம்.


## ஆக்ஞா சக்ர மகிமை

தவாக்ஞா சக்ரஸ்தம் தபநசசிகோடித்யுதிதரம்
பரம்சம்பும்வந்தே பரிமிளிதபார்ச்வம் பரசிதா |
யமாராத்யந் பக்த்யா ரவிசசிசுசீநாம் அவிஷயே
நிராலோகேலோகே நிவஸதிஹி பாலோகபுவநே || 36 ||

ஜீவனை இன்ன விதமாக நடக்க வேண்டும் என்று இறைவன் இங்கு கட்டளையிடுகிறார். ஜீவனிடம் ஈஸ்வரனின் ஆக்ஞை

பிரகாசிக்கும் இடம் இது. தேவி ஸாயுஜ்யத்தை யடைய இந்த சக்கிரத்தில் சிவ ஸ்வருபத்தை தியானம் செய்ய வேண்டும்.

36



இதன் பலன் பிரும்ம ராக்ஷஸ நிவாரணம்.

இந்த யந்திரத்தை சுவர்ணத் தகட்டில் எழுதி 45 நாள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

அதிரஸம், வடை, பாயஸம் நைவேத்யம்.

## சகஸ்ராரத்தில் தியானம்

*தடில்லேகாதந்வீம் தபநசசி வைச்வாநரமயீம்*
*நிஷண்ணாம் ஷண்ணாமப்யுபரி கமலாநாம் தவகலாம் |*
*மஹாபத்மாடவ்யாம் ம்ருதித மலமாயேந மநஸா*
*மஹாந்த: பச்யந்த: தததி பரமாநந்தலஹரீம் || 21 ||*

தலையுச்சியில் சகஸ்ராரம்□ என்ற 1000 தளமுள்ள தாமரை புஷ்பத்தின் மத்தியில் விளங்குகின்ற "ஸாதர" என்ற மந்திர சாஸ்திரத்தில் பிரசித்தமான மகா பிந்து ஸ்வரூபமான நிலையை தியானிப்பவர்கள் பரம ஆனந்த பிரவாகத்தை அடைகிறார்கள். (இதுவே பரமாஹ்லாதனம்)

வாழ்வில் துக்கமே வராமல் சுகத்தை மட்டும் மேன்மேல் விருத்தி செய்துகொண்டு வாழ்வதற்கு இந்த சுலோகம் பரம சஞ்சீவியாகும்.

அம்பிகையின் முக்கியமான கலை 'ஸாதா'. பிந்துவே அக்கலையாகும். இக்கலை இருக்கும் இடமே மஹாபத்மாடவீ. இது தான் பிரம்மரந்திரமான சிரஸிலுள்ள இடம். (மதுரை நகரமே மஹாபத்மாடவீ என்ற துவாதசாந்த க்ஷேத்திரம்)

சகஸ்ராரத்தில் குளிர்ந்து பிரகாசிப்பதால் அம்பிகைக்கு ஸ்திர ஸௌதாமினி என்று பெயர். ஸாதா கலை மின்னலைப்


---

□ விவரங்கள் பிரதிபாவின் 'குண்டலினி சக்தி'யில் காணவும்.

போல க்ஷண நேரமே பிரகாசிப்பதால் "க்ஷண சௌதாமிணி" என்றும் பெயர்,

சகல ஜன கோப நிவிருத்தி. வீர லக்ஷ்மி பிரதம் என்று இதற்கான பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகடு அல்லது வெள்ளித் தகட்டில் எழுதி தினம் 1000 கடவை 11 நாட்கள் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.




தேன், பழம் நைவேத்யம்,

# அகண்டமான தேவியின் ஸ்வரூபம் 9

தேவியின் கேசம் முதல் பாதம் வரை வருணித்த பின் ஆதி சங்கரர் தேவியின் அகண்டமான ஸ்வரூபத்தை வர்ணிக்கிறார்.

*கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண ஹரி ருத்ரேச்வர ப்ருத :*
*சிவ: ஸ்வச்ச ச்சாயா கடித கபட ப்ரச்சதபட : |*
*த்வதீயாநாம் பாஸாம் ப்ரதிபலந ராகாருணதயா*
*சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம் || 92||*

சிருஷ்டி கர்த்தாவான பிரும்மா பரிபாலன கர்த்தாவான விஷ்ணு சம்ஹார கர்த்தாவான ருத்ரன் துரீயமான நிலையிலுள்ள ஈஸ்வரன் எப்போதும் தேவியின் அருகில் இருக்க வேண்டும் என்று தேவியின் மஞ்சத்துக்கு நான்கு கால்களாக இருக்கிறார்கள். மஞ்சத்தின் பலகையாக சதாசிவன் விளங்குகிறார்.

பிந்து என்ற ஸ்ரீசக்ர மத்தியில் அழகே உருவான அம்பிகை சிவபெருமானுடன் இணைந்து விளங்குகிறாள்.

இப்படி அம்பிகை வீற்றிருப்பதை "பஞ்சப் பிரேதாஸனாஸீனா பஞ்சப் பிரஹ்ம ஸ்வரூபிணி" என்கிறது லலிதா சகஸ்ர நாமம்.

ருத்பயாமளம் பின்வருமாறு சொல்கிறது.

பிருஹ்மா விஷ்ணுஸ்ச ருத்ரஸ்ச ஈஸ்வரஸ்ச சதாசிவ : |
ஏதே பஞ்ச மஹாப்ரேதா பூதாதி பதயோ மத : |
சத்வாரோ மஞ்ச சரணா: பஞ்சம : பிரச்சத: பட:
ஸாக்ஷீ ப்ரகாச ரூபேண சிவேன பின்ன விக்ரஹா
தத்ராஸனே ஸமாஸீனா நிர்ப்பரானந்த ரூபிணீ ||

இதுவே சிவசக்தி ஐக்ய ஸ்வரூபம்.

இதன் பலன் ராஜ்ய பிராப்தி. இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 30 நாட்கள் தினம் 4000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். சித்ரான்னம் நைவேத்யம்.

இதே 92ம் சுலோகக் கருத்து 8வது சுலோகத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஸுதாஸிந்தோர்மத்யே ஸுரவிடபிவாடீ பரிவ்ருதே
மணித்வீபே நீபோப வநவதி சிந்தாமணிக்ருஹே
சிவாகாரே மஞ்சே பரமசிவபர்யங்க நிலயாம்
பஜந்தி த்வாம் தந்யா: கதிசந சிதானந்தலஹரீம் || 8 ||

அமிர்த கடலின் நடுவில் கல்பக விருக்ஷ தோப்புகளால் சூழப்பட்ட ரத்னத் தீவில் உத்யான வன நடுவே சிந்தாமணி கிரஹத்தில் பரம மங்கள வடிவமான சிவாகார மஞ்சத்தில் பரமசிவன் மடியில் சிவானந்த லகரியாக அம்பிகை வீற்றிருக்கிறாள்.

ஒன்பது தாது மயமான இந்த சரீரம் என்ற ஸ்ரீசக்கிரத்தில் பிந்து ஸ்தானமான ஹிருதயத்தில் அம்பிகையை தியானம் செய்ய வேண்டும். இதுவே தேவியின் மானஸ பூஜை□. பாவனோப நிஷத்தில் விளக்கப் பட்டுள்ளது.

இந்த சுலோகத்தில் தேவியின் வாசஸ்தலமான சிந்தாமணி கிருஹம்○ வருணிக்கப் படுகிறது.

உலோகப் பிரகாரங்கள் ரத்னப் பிராகாரங்கள். பத்மாடவீ பிராகாரங்கள் முதலிய 25 கோட்டைகள் கற்பக வனத்தின்

---

□ "ஸ்ரீவித்யா மகாயாகக் கிரமம்—தேவி மானஸ பூஜை" என்ற பிரதிபா புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது.

○ சிந்தாமணி கிருஹம் — ஸ்ரீசக்ரத்திலுள்ள தேவதைகள். வி... ...களுக்கு பிரதிபாவின் 'ஸ்ரீசக்ர நாயகிகள்' பார்க்கவும்.

நடுவில் சிந்தாமணி கிரஹம் அக்னி மூலையில் தேவி ஜனித்த சிதக்னி குண்டம். நான்கு துவாரங்களில் சதுராம்னாய தேவதைகள். இதனுடன் நவாவரணங்களுடன் கூடிய ஸ்ரீசக்ரம். இதன் நடுவில் பிந்து ஸ்தானத்தில் மகா காமேஸ்வரர் மடியில் காமேஸ்வரி எழுந்தருளியிருக்கிறாள்.

வீரைக் கவிராயர் பாடலாவது.

ஆர் அமுது இன்கடல் வேலி செழும் தரு
வாய் மணிபம்பிய தீவு ஊடே
பார கடம்பு அடர் கானில் அருங்கொடை
பாய் மணிமண்டப வீடு ஊடே
கோரசிவன் பரமேசன் உன் மஞ்சம்
ஓர் கூர் பரீ அங்கம் எனு மேலே
சீர் அடரும் பரஞானம் உறும் கனி
தேவர் அருந்துவர் பூமாதே!

அமுதக் கடலின் நடுவே கற்பக விருக்ஷங்களால் சூழப்பட்ட சித்தாமணி இல்லத்தின் நடுவிலே சிவபெருமானையே பலகை யாகக் கொண்டு நீ வீற்றிருக்கும் அழகை தேவர்கள் கண்டு மகிழ்ச்சியில் திளைத்திருப்பர்.

அம்பிகை பஞ்சப் பிரம்மாஸனத்தில் இருக்கிறாள்.

பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன் பீடத்தின் கால்கள். சதாசிவன் பீட பலகை. இதுவே அ உ ம அர்த்த மாத்திரை. பிந்து வடிவான ஓம்கார மஞ்சம்.

ஸ்ரீ சக்ரத்தில் ஒன்பது முக்கோணங்கள்; சிவ ஸ்வரூபமான நான்கு முக்கோணம் மேல் நோக்கியும் சக்தி ஸ்வரூபமான ஐந்து முக்கோணம் கீழ் நோக்கியும் இருக்கும். இதில் நடுவில் பிந்து உள்ள முக்கோணத்தை 'ஸுதா சிந்து' என்று தியானித்து அதில் அம்பிகை இருப்பதாக பாவித்து தியானம் செய்ய வேண்டும். பிரும்மா முதலியவர்கள் கட்டில் கால்கள்.

இந்த ஸ்லோகத்தில் சொல்லியபடி தேவியை தியானம் செய்பவர்களைப் பற்றி பைரவ யாமளம் பின்வருமாறு கூறுகிறது.

சிவார்க்க மண்டலம் பித்வா
த்ராவயந் தீந்து மண்டலம்
குல யோஷித் குலம் த்யக்த்வா
பரம் வர்ஷண மேதிஸா ||

குண்டலினி பிரபோதம் காரணமாக சகல நாடிகளிலும் அமிருதம் பெருகினால் சிரஞ்சீவித்வம் ஏற்படும். அகஸ்தியர், ஆஞ்சநேயர் முதலியவர்கள் இம்முறையை அனுஷ்டித்தே சிரஞ்சீவியாக வாழ்கிறார்கள்.

தனித்திருப்பின் ஒரு காரியமும் ஆவதில்லை. கூடுவதனால் காரியம் உண்டு. சுத்த வித்தையும் சதாசிவ தத்துவமும் கூடும் விவரம்தான் பரமாத்மா தத்துவம். குண்டலினி சக்தியாகிய சுத்த வித்தை சதாசிவனுடன் புணரும் புணர்ச்சியை அறிவதே பேரின்பம் எனக் கூறும் வீடாகும்.

அம்பிகையை இப்படி தியானம் செய்வதால் காராக்ரஹ வாஸ நிவ்ருத்தி, பந்த நிவ்ருத்தி.

இந்த யந்திரத்தை சந்தனத்தில் எழுதி சிவப்பு புஷ்பங்களால் அர்ச்சிக்கவும். 12 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

மிளகு அன்னம், பாயஸம் நைவேத்யம்.

## பரப்ரும்ம மஹிஷி

வேதாந்த ரகசியங்களை அறிந்தவர்கள் கூட தேவியை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக வர்ணிக்கிறார்கள். நான்காவதாக துரீய தத்துவமாக அவள் விளங்குகிறாள். தேவியும் பிரும்மமும் ஒன்றே.

கிராமாஹுர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீம்-ஆகமவிதோ
ஹரே: பத்நீம் பத்மாம் ஹரஸஹசரீம் அத்ரிதநயாம் |
துரீயா காபி த்வம் துரதிகம நிஸ்ஸீம மஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷி || 97 ||

பரப்பிரும்ம மஹிஷி என்பதால் பிரும்மம் வேறு போலவும் தேவி பிரும்மத்தின் பத்னி போலவும் இரண்டு தத்துவம் தெரிகிறதே என்ற சந்தேகம் வேண்டாம்.

---

92வது சுலோகத்திற்கு விளக்கம் அதிகமாகவுள்ளதால் மறுபடியும் கொடுக்கப்பட்டுள்ளது. யந்திரம், நைவேத்யம் பாராயண எண்ணிக்கை யந்திரத்துடன் வந்துள்ளது.

8வது சுலோகம் சிந்தாமணி க்ரஹத்தை வர்ணிப்பதால் அதே ஸ்லோகத்துக்கு மறுபடியும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

அர்த் தோ வாத்மண: ஏஷ: யத்பத்னீ


என்ற சாஸ்திர வாக்யத்தால் சரீரத்தால் மனைவிக்கும் கணவனுக்குமிடையே பேதம் தோன்றினாலும் ஸ்வரூபம் ஒன்றுதான்.

பலன் வாக்ஸித்தி, பாலகாய வ்ருத்தி.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 8 நாள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

திவ்யான்னம், தேன் நைவேத்யம்.

97




## அம்பிகையின் உபாசனை

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரிஸபத்நோ விஹரதே
ரதே: பாதிவ்ரதயம் சிதிலயதி ரம்யேண வபுஷா |
சிரம் ஜீவந்நேவ க்ஷபிதபசுபாசவ்யதிகர :
பராநந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத்பஜநவாந் || 99 ||

தேவியின் உபாசனை மகிமையினால் சரஸ்வதியும் லக்ஷ்மியும் உபாசகர்களுக்கு அருள்கின்றனர். பிரும்மாவும் விஷ்ணுவும் இந்த உபாசகர்களிடம் அசூயை கொள்கின்றனர். உபாசகர்கள் மன்மதனைப் போல் காந்தியுடன் விளங்குகின்றனர். அம்பிகை உபாசனையால் லக்ஷ்மி கடாக்ஷம், சரஸ்வதி கடாக்ஷம் ரூப சௌந்தர்யம் எல்லாம் ஏற்படுகிறது.


முக்கியமாக அம்பிகை உபாசகர்கள் ஜீவன் முக்தர்களாக ஆகிறார்கள்.

பலன் சௌபாக்ய பிரதம், சௌர்யப் பிரதம்.

இந்த யந்திரத்தை சுவர்ணத் தகட்டில் வரைந்து 15 நாள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.


முத்ரான்னம், மாஷாபூபம், தேன் நைவேத்யம்.

99



கலத்ரம் வைதாத்ரம் கதிகதி பஜந்தே ந கவய :
ச்ரியோ தேவ்யா : கோ வா ந பவதி பதி : கைரபி தனை : ।
மஹாதேவம் ஹித்வ தவ ஸதி ஸதீநாமசரமே
குசாப்யாமாஸங்க : குரவகதரோரபி அஸுலப : ॥ 96 ॥

அம்பிகை ஒருவரே பதிவ்ரதை. சரஸ்வதி கவிகளிடமும் வித்வான்களிடமும் விளங்குகிறாள். லக்ஷ்மி ஐஸ்வர்யமாகப் பலரிடம் விளங்குகிறாள். அம்பிகை பரமசிவன் ஒருவரைத் தவிர யாரிடமும் வசிப்பதாகத் தெரியவில்லை. பக்தர்களுக்கு அவள் தாயாக விளங்குகிறாள்.




பலன் சித்ரப் பிரதம்.

வெள்ளெருக்குக் கட்டையில் இந்த யந்திரத்தை எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த ஸ்லோகத்தைப் பாராயணம் செய்யவும்.

தேன், க்ஷீர பாயஸம் நைவேத்யம்,


## உபாசகனின் லக்ஷணம்

புராராதேரந்த: புரமஸி ததஸ்த்வச்சரணயோ :
ஸபர்யாமர்யாதா தரலகரணாநாம் அஸுலபா ।
ததா ஹ்யேதே நீதா: சதமகமுகா: ஸித்திமதுலாம்
தவ த்வாரோபாந்தஸ்திதிபி: அணிமாத்யாபி: அமரா:
॥ 95 ॥

இந்திரிய நிக்ரகம் செய்து காமனை ஜயித்த அந்தர்முகர்களுக்கே தேவி உபாசனையில் அதிகாரம் சொல்லப்படுகிறது.

தேவர்கள் எல்லோரும் வெகு தூரத்திலிருந்துதான் அம்பிகையை தரிசனம் செய்ய முடிகிறது. அவள் கணவர் ஒருவரைத் தவிர யாரிடமும் அவள் அருகில் நெருங்க முடியாது. ஆகவே இதற்கான பக்குவம் வரும்வரை தேவியை வெகு தூரத்திலிருந்துதான் தரிசனம் செய்ய வேண்டும்.

இந்திரியங்களை அடக்கி அந்தர்முக தியானத்தில் முயன்று வெற்றி பெற வேண்டும்.




**பலன்** ரண நிவாரணம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி எண்ணெயில் வைத்து 45 நாட்கள் தினம் 108 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்து எண்ணெயை ரணத்தில் தடவவும்.

திலான்னம், சர்க்கரை நைவேத்யம்.

## தேவியின் ஸ்தோத்திர□ மகிமை

பவானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணாம்
இதி ஸ்தோதும் வாஞ்சந் கதயதி பவானி த்வம் இதி ய: |
ததைவ த்வம் தஸ்மை திசஸி நிஜஸாயுஜ்ய பதவீம்
முகுந்த ப்ரஹ்மேந்த்ர ஸ்புட மகுட நீராஜிதபதாம் || 22 ||

ஒரு பக்தன் தேவியை ஸ்தோத்திரம் செய்ய வேண்டும் என்று நினைத்து பவானி என்று அம்பிகையை அழைத்தான். அம்பிகை பவானி த்வம் என்பதை ''நீயாக நான் ஆகின்றேன்'' என் பக்தன் சொன்னதாக எடுத்துக் கொண்டாள். அம்பிகை இப்படி அர்த்தம் செய்ததற்கு அவளுடைய அளவற்ற கருணையே காரணமாகும்.

தேவியை துதித்தாலே போதும் அவள் அருள் கிடைக்கும் என்பது இந்த சுலோகத்தின் கருத்து.

'பவானி' என்னும் பதத்தை தேவியை அழைக்கும் பதமாக பக்தன் உபயோகித்திருந்தாலும் அதை வினைச் சொல்லாகக் கொண்டால் 'நான் ஆவேன்' என்ற பொருளாகும்.

''பவானி த்வம்'' என்றால் நீயாகவே நான் ஆகிறேன் (பிரஹ்மைவா அஹமஸ்மி) என்ற மகா வாக்கியத்தைக் கூறியதாக ஆகிறது. தேவி தன் கருணையால், 'பவானி த்வம்'' என்று கூறுபவனை தனக்கும் அவனுக்கும் வேற்றுமை இல்லாததாகிய சாயுஜ்ய பதவியைக் கொடுக்கிறாள்.

---

□ சாஸ்திரம்—ஸ்தோத்திரம் பக்தி மார்க்கத்தின் இரு கண்கள் ஸ்தோத்திரம்—சொல்லும் புகழ்மாலை. சாஸ்திரம் அறிவுக்கு உறுதியைத் தருவது.

"நீயாகவே நான் ஆகிறேன்" வேதாந்தத்தில் இது மிக ரகசியமானப் பொருளாகும். இந்தப் பொருளைக் கூறும் வாக்கியம் மகா வாக்கியம் எனப்படுகிறது.

தன்னைச் சுட வேண்டும் என்ற எண்ணத்துடன் நெருப்பைத் தொட்டால்தான் சுடும் என்பதில்லை. இச்சையில்லாமல் தொட்டவனையும் நெருப்பு சுட்டே தீருகிறது. அம்மாதிரியே தேவியும் பக்தனுடைய இச்சையை எதிர்பார்க்காமலேயே அவனை கடாக்ஷித்து முக்தியைத் தரவல்லவள்,

இந்த சுலோகம் சாமவேதத்தின் சாந்தோக்ய உபநிஷத் ஆறுவது அத்யாயத்திலுள்ள 'தத்வமஸி' என்ற மகா வாக்கியத்தின் அர்த்தத்தை அனுசந்தானம் செய்யும் கௌரவத்தை அளிக்கக் கூடியது.


தேவியின் அருளைப் பெற பூஜை, ஜபம், ஹோமம் முதலிய கிரியைகளைவிட ஒருமித்த கருத்துடன் அவளை துதித்தாலே போதும் என்பது இந்த சுலோகத்தின் கருத்து.

அஸ்பஸ்டமபி யந்நாம ப்ரஸங்கேனுபி பாஷிதம்
தததி வாஞ்சிதானர்த்தான் துர்லபானபி ஸர்வதா ।

—தேவி பாகவதம்

தெளிவாக இல்லாமலோ வேறு பேச்சுகளின் இடையிலோ தேவியின் நாமம் உச்சரிக்கப்பட்டாலும் கூட அவள் விரும்பிய பொருள்களை அவை கிடைத்ததற்கு அரிதாயினும் எப்போதும் அளிப்பாள்.

22



பலன் சகல சாம்ராஜ்யப் பிரதம்.

ஸ்ரீசக்ரத்தை ஸவர்ணத் தகட்டில் எழுதி நதிக் கரையில் தினம் 1000 வீதம் 45 நாட்கள் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

சித்ரான்னங்கள் நைவேத்யம்,

## காமகலா தியானம்

முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய ததத :
ஹரார்த்தம் த்யாயேத்: ஹரமஹிஷி தே மந்மதகலாம் |
ஸ ஸத்ய: ஸங்க்ஷோபம் நயதி வநிதா இத்யதிலகு
த்ரிலோகீமப்யாசு ப்ரமயதி ரவீந்து ஸ்தநயுகாம் || 19 ||

ஹ ரார்த்தம்—ஹ என்பது ஹம்ஸ: என்பதைக் குறிக்கும். இதில் பாதி உயிரெழுத்துக்கள் (அம்+ஸ—ஹம்ஸ:) ஸ:வில் உள்ள அ: மூன்று பிந்துக்களைக் குறிக்கும். இது மன்மதக கலை.

'க்லீம்' என்ற பீஜத்தில் உயிரெழுத்து ஈ. இதுவும் மூன்று பிந்துக்களால் ஆனது, மேலுள்ள பிந்து சந்திரன். கீழுள்ளது சூரியனும் அக்னியும்.


ஒரு பெண்ணின் முகத்தை எப்பொருளுக்கும் ஆதியாக இருக்கும் விந்துவாகவும், இரு ஸ்தனங்களை அவ் விந்துவின் வடிவாகவும், அல்குலை முக்கோணமாகவும் அங்கு 'க்லீம்' பீஜத்தைத் தியானிக்க வேண்டும். இந்த மூன்று இடங்களிலும் க்லீமை அருண வடிவமாக தியானிப்பது காமகலா தியானம்.

இந்த சுலோகம் மாதன பிரயோகம் என்று சொல்லப்படும். முன் சுலோகமும் இதுவும் சேர்ந்து ஒரே பிரயோகமாகிறது.

இந்த காமகலா தியானத்தால் மூன்று லோகமும் வசப்படுகிறது. இந்த மூன்று லோகமும் ஸ்த்ரீ ரூபமாகவே காணப் படுகின்றன. சந்திர மண்டலமும் சூர்ய மண்டலமும் திரிலோகி என்ற ஸ்திரீயினுடைய ஸ்தனங்களாகக் காணப் படுகின்றன.

ஸுவாஸினிகளை அம்பிகையாக கருதி பூஜிப்பதே இங்கு ஸ்திரீ வசீகரணத்தின் பொருளாகும்.

19




சகல ராஜ, ராக்ஷஸ ஸ்திரீ, மிருக மோஹனம், ஸ்தரீ ஆகர்ஷணம் பலன்.

சுவர்ணத் தகட்டில் அல்லது விபூதி, சந்தனம், குங்குமத்தில் இந்த இயந்திரத்தை எழுது தினம் 1000 தடவை 25 நாட்களுக்கு இந்த சுலோகம் ஜபம் செய்ய வேண்டும்.

நைவேத்யம் தேன், பால் பாயஸம்.

## அம்பிகையின் பூஜையின் மகிமை

ஹரிஸ்த்வாமாராத்ய ப்ரணதஜந ஸௌபாக்ய ஜநநீம்
புரா நாரீ பூத்வா புரரிபுமபி க்ஷோபமநயத் |
ஸ்மரோபி த்வாம் நத்வா ரதிநயநலேஹ்யேந வபுஷா
முநீநாமப்யந்தः ப்ரபவதி ஹி மோஹாய மஹதாம் || 5 ||

உன்னை மகா விஷ்ணு பூஜித்து ஸ்திரீயாகி மோகினி ரூபத்தில் பரமேஸ்வரனையும் மோகிக்கச் செய்தார். மன்மதனும் உன்னை வழிபட்டு இந்த லோகத்தில் எல்லா ஜீவராசிகளையும் காமாந்தகாரத்தில் மூழ்கடித்து ஆட்டி வைக்கிறான்.

அம்பிகையை தியானிப்பது, நித்ய சான்னித்தியத்தைப் பெற்றுள்ள ஸ்ரீசக்ரத்தைப் பூஜிப்பது அம்பிகையின் பஞ்சதசி, ஷோடசி மந்திர மகிமை இங்கு கூறப்படுகிறது.

ஸ்ரீ மகாவிஷ்ணு அம்பிகையின் அருளால் பெற்ற பரம சிவனையும் மோகிக்க வைக்கும் வித்தைக்கு "மனஸ் ஸம்க்ஷோபணம்" என்று பெயர். மன்மதனும் ஸ்ரீ வித்யையால் அம்பிகையை ஆராதித்து அளவிட முடியாத சௌந்தர்யத்தை அடைந்தான். அவன் பின்பற்றிய ஸ்ரீவித்யையே "காதி வித்யை" எனப்படுகிறது.

அம்பிகையை ஆராதித்தவர்களில் முக்கியமானவர்கள் பரம சிவன் விஷ்ணு, பிரும்மா, மன்மதன், ஸ்கந்தர், நந்திகேஸ்வரர், இந்திரன், மனு, சந்திரன், குபேரன், அகஸ்தியர், தூர்வாஸர் என்ற பன்னிரண்டு பேர்கள்.

லலிதா சகஸ்ரநாமத்தில் ஒரு (84வது) நாமம் "ஹரநேத்ராக்னி ஸந்தக்த காம சஞ்சீவ நௌஷதி"—சிவனது நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதனை பிழைப்பூட்டிய சஞ்சீவினி மருந்து.

அம்பிகையை ஆராதிப்பது மிக எளிது. உபவாஸம் போன்ற பாதைகள் இல்லாமல் தியானிக்க வேண்டிய ரூபத்தை மனதில் இருத்தி வழிபடலாம்.

ரே மூடா: | கிமயம் ப்நயைவ தபஸா காய: பரிக்லிச்யதே |
யக்ஞைர்வா பஹுதக்ஷிணை: கிமிதரே ரிக்தீக்ரியந்தே
க்ருஹா: | பக்திச்ச துநிநாசினி பகவதியாத துயி ஸேவ்யதா
உந்நித்ராம புகுஹாதபத்ர ஸுபகா லக்ஷ்மிபுரோ தாவதி ||

அம்பிகை ஆராதனைக்கு எல்லோருமே அதிகாரிகள் ஆகிறார்கள். ஜாதி முதலிய விலக்குகள் எதுவுமே இல்லை. ஸ்திரீ

களுக்கு அம்பிகை வழிபாட்டில் தனி இடமுண்டு. அவள் பக்திக்கு கட்டுப்பட்டவள்.

அன்னையின் அருளைப் பெற நாம் செய்ய வேண்டிய தெல்லாம் ஒன்றுதான். அதற்கு காசோ பொருளோ செல வில்லை. அவளுக்கு அன்பர் ஆக வேண்டும். 'அன்பர் என்ப வர்க்கே அவள் நல்லன எல்லாம் தரும் நாயகி'' என்கிறார் அபிராமி பட்டர்.

தன் அன்பன் என்று தெரிந்துவிட்டால் போதும். தானே வந்து வலிய ஆட்கொள்வாள்.

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்
கைப்பாசத்தில் அல்லல்பட இருந்தேனை நின் பாதம் என்னும்
வாசம் கமலம் தலைமேல் வலிய வைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என்ன சொல்வேன் ஈசர்பாகத்து நேரிழையே

என்கிறார் அபிராமி பட்டர்.

## என்ன புண்ணியம் செய்தேனோ?

அன்னை பராசக்தியை தியானிப்பது பூஜிப்பது வழிபடுவது எல்லாம் பூர்வ ஜன்ம புண்ணியம் என்று ஒன்று இருந்தால்தான் சாத்தியமாகும். அப்புண்ணியம் இல்லை என்றால் அவை எளிதில் கைகூடாதன.

திருஞானசம்பந்தர் இறைவனிடம் தனக்கு ஈடுபாடு ஏற் பட்டதை எண்ணி ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'' என்று வியக்கிறார்

இந்த பாக்கியம் தனக்குக் கிடைத்ததை அபிராமி பட்டர் ''நான் செய்த புண்ணியம்தான் என்ன?'' என்று அம்பிகையைக் கேட்கிறார்.

அம்பிகை பூஜையில் இரண்டு விதம் . கௌலாசாரம், ஸமயாசாரம். முன்னது பல சாதனங்களைக் கொண்டு வெளிப் படையாகச் செய்வது. பின்னது அந்தர்முகமாக (மானஸீக) பூஜை செய்வது அந்தர்முக பூஜையே இதில் விவாதிக்கப் படுகிறது.

உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்கள் அக்னி, சூர்ய சந்திர கண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது அக்னி கண்டத்தில் அக்னி ஜ்வாலை மூலாதாரத்தில் 56 மணிபூரகத்தில் 52 ஆக 108. சூர்ய கண்டத்தில் சூரிய கிரணம் சுவாதிஷ்டானத்தில்

62ம் அநாகதத்தில் 54ம் ஆக 116 கிரணங்கள். சந்திர கண்டத்தில் விசுத்தி ஆக்ஞையில் 136 சந்திர கிரணங்கள். ஆக மொத்தம் 108+116+136—360.

ஆறு ஆதாரங்களும் காலகதிக்கு உட்பட்டவை. இதற்கு மேலுள்ள ஸஹஸ்ராரத்திலுள்ள தேவியின் திருவடிகள் காலத்தைக் கடந்தவை.

மூலாதாரம் 55 நாள் கொண்ட வஸந்த ருதுவாகவும் மணிபூரகம் 52 நாள் கொண்ட கிரீஷ்ம ருதுவாகவும். ஸ்வாதிஷ்டானம் 62 நாள் கொண்ட வருஷ ருதுவாகவும், அநாகதம் 54 கொண்ட சரத் ருதுவாகவும், விசுத்தி 72 நாள் கொண்ட ஹேமந்த ருதுவாகவும் ஆக்ஞை 64 நாள் கொண்ட சிசிர ருதுவாகவும் வருணிக்கப்படுகிறது, பிரும்மாண்டத்தில் நாட்களாக இருப்பவை பிண்டாண்டத்தில் கிரணங்களாகக் கூறப்படுகின்றன.

தேவியின் ஸ்தானம் அக்னி கலை சூரிய கலை சந்திர கலைக்கு அப்பாற்பட்டு அவைகளை எல்லாம் விழுங்கும் ஸ்வரூபமுள்ளது.

## கிரணங்களை தத்துவ வடிவாக பின்வருமாறு தியானிக்க வேண்டும்

**அக்னி கண்டம்:**

1. 24 தத்துவங்கள்+கலை பிரக்ருதி. புருஷன், மஹத்—28. ஒவ்வொன்றும் சிவமும் சக்தியுமாக இரட்டித்து 56. 5 பூதங்கள், 10 இந்திரியங்கள், 10 தொழில்கள்+மனம்—26. இரட்டுத்து 52. ஆக 56+52—108.

2. **சூரிய கண்டம்:**

   5 பூதங்கள், 5 தன்மாத்திரைகள், 10 இந்திரியங்கள், 10 அதன் தொழில்கள்+மனம்—31. இரட்டித்து 62. பூமி தத்துவங்கள் 28ல் மஹத் நீங்கலாக 27. இரட்டித்து 54. ஆக (62+54) 116.

3. **சந்திர கண்டம்:**

   36 தத்துவங்கள். இரட்டித்து 72. இவைகளில் கடைசி நான்கு நீங்கலாக 32. இரட்டித்து 64. ஆக (72+64) 136.


## 8-வது சுலோகத்தின் பலன்

சந்தனம், சிவப்பு புஷ்பத்தால் அர்ச்சனை.

பலன்: காராக்ரஹ நிவ்ருத்தி, ஸர்வாபிஷ்ட ஸித்தி.

இந்த ஸ்லோகத்தை தினம் 1000 வீதம் 12 நாட்கள் பாராயணம் செய்யவும்.

நைவேத்யம் மிளகு அன்னம், பாயஸம்.



**ஆறு ஆதாரங்கள் 5 பூதங்களையும் மனத் தத்துவத்தையும் குறிக்கும் ஆதார சக்கிரங்களின் கிரண அளவு:**


| தத்துவம் | ஆதார சக்கிரம் | கிரணங்கள் |
|---|---|---|
| நிலம் | மூலாதாரம் | 56 |
| நெருப்பு | சுவாதிஷ்டானம் | 62 |
| நீர் | மணிபூரகம் | 52 |
| காற்று | அனுகதம் | 54 |
| ஆகாசம் | விசுத்தி | 72 |
| மனம் | ஆக்ஞை | 64 |
| | | 360 |

பலன் ஸ்திரீ புருஷ வசியம், க்ஷாம க்ஷோப நிவ்ருத்தி, சூரிய தாப நிவ்ருத்தி.

இந்த யந்திரத்தை தாமிரத் தகட்டில் அடித்து வைத்து கிழக்கு முகமாக உட்கார்ந்து 8 நாட்கள் தலையில் எந்திரத்தை வைத்துக்கொண்டு 2000 தடவை பாராயணம் செய்ய வேண்டும்.

நைவேத்யம் பருப்பு பொங்கல்.

5




## ஆவரண பூஜையில் பிரியம்

*ஸ்வதேஹோத்பூதாபி: க்ருணிபி: அணிமாத்யாபி: அபித:*
*நிஷேவ்யே நித்யே த்வாமஹமிதி ஸதா பாவயதி ய: |*
*கிமாச்சர்யம் தஸ்ய தரிநயநஸம்ருத்திம் த்ருணயதோ*
*மஹாஸம்வர்தாக்நி: விரசயதி நீராஜனவிதிம் || 30 ||*

அம்பிகையை தன் ஆத்மா என்று பாவிக்கும் பக்தனை ப்ரளய காலாக்னி தகிக்காமல் அவனுக்கு மங்கள ஹாரத்தியாக விளங்குகிறது.

பராசத்தியை எட்டு விதமான ஆவரண தேவதைகளால் சூழும்படிச் செய்து நடுமத்தியில் பூஜிக்க வேண்டும். எட்டு சித்திகளுக்கு நடுவில் புவனேஸ்வரி என்று சொல்லப்படும் பரதேவதையை ப்ரத்யகாத்மாவாக அனுஸந்தானம் செய்கின்ற உபாசனையே மேலானதாகும். அஷ்ட சித்திகளின் அனுக்கிரஹமும் இப்படி வழிபடுபவனுக்குக் கிடைக்கிறது.

30



பலன்: பரகாய பிரவேசனம், தைர்யப் பிரதம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி தினம் 1000 தடவை வீதம் 96 நாட்கள் பாராயணம் செய்ய வேண்டும்,

நைவேத்யம் த்ரிமதுரம், மது குளான்னம், தாம்பூலம்.

### மானஸீக பூஜை□

*ஜபோ ஜல்ப: சில்பம் ஸகலமபி முத்ராவிரசநா*
*கதி: ப்ராதக்ஷிண்யக்ரமணம் அசநாத்யாஹுதி விதி: |*
*ப்ரணும: ஸம்வேச: ஸுகமகிலம் ஆத்மார்ப்பண த்ருசா*
*ஸபர்யாபாயாயஸ்தவ பவது யந்மே விலஸிதம் || 27 ||*

---

□ தேவியின் நவாவரண பூஜை "ஸ்ரீவித்யா மகாயாகக் கிரமம் (நவாவரண பூஜை)" என்ற நூலிலும் "லகு பூஜை" ஸ்ரீவித்யா ஹோமத்திலும் காணலாம்.

□ முழு விரங்களுக்கு பிரதிபாவின் 'தேவி மானஸீக பூஜை' காணவும்.

என் உடல் உயிர் எல்லாம் உன்னிடம் அர்ப்பணம் செய்து விட்டு உன் ஸ்வரூபமாகவே நான் ஆகிறேன் என்ற ஞான மகிமையால்—

நான் பேசுவதெல்லாம் உன் மந்திர ஜபமாக இருக்கட்டும்

கை கால் அசைவுகள் முத்திரைகள் காட்டுவதாக இருக் கட்டும்.

நடை உன்னை பிரதக்ஷிணம் செய்வதாக இருக்கட்டும்.

புசிப்பவை ஹோமமாக விளங்கட்டும்,

படுப்பது நமஸ்காரமாக இருக்கட்டும்.

நான் எதைச் செய்தாலும் உன்னுடைய பூஜாரூபமாக இருக்கட்டும்.

இந்த மானஸீக பூஜை மிக உயர்ந்த நிலை.

இதே கருத்தை தன் சிவ மானஸ பூஜாவில் ஆதிசங்கரர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

ஆத்மா த்வம் கிரிஜாதி: ஸஹசரா: ப்ராணு சரீரம் க்ருஹம்
பூஜா தே விஷயோபபோக ரசனு நித்ரா ஸமாதிஸ்திதி : |
ஸஞ்சார: பதயோ: பிரதக்ஷிண விதி: ஸ்தோத்ராணி
ஸர்வா கிரோ
யத்யத் கர்ம கரோமி தத்த தகிலம் சம்போ தவாராதனம் ||

அபிராமி பட்டர் இதையே

''நின்றும் இருந்தும் கிடந்தும் நடப்பதும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவதுன் மலர்த்தாள்''

என்று அபிராமி அந்தாதியில் குறிப்பிடுகிறார்.


இதைப் பற்றி பாவனோபநிஷத் கூறுவதாவது :

ஞானம் அர்க்கியம் ஞேயம் ஹவி: ஞாதா ஹோதா
ஞாத்ரு ஞானக்ஞேயானு மபேத பாவனம்
ஸ்ரீசக்ர பூஜனம் பாவனுயா மப்ரமத்ததா உபசார : |
அஹம் த்வம் அஸ்தி நாஸ்தி கர்த்தவ்ய
மகர்த்தவ்யமிதி விகல்பனு மாத்மனி விலாபனம் ஹோமா: |
பாவனு விஷயானு மபேத பாவனம் தர்ப்பணம் ||

அம்பிகையையும் தன்னையும் ஒன்றாக பாவிப்பது முதல் ஐக்கியம். தன் பேச்சையும் ஜபத்தையும் ஒன்று என அறிவது இரண்டாவது ஐக்கியம். கை கால் அசைப்பு முத்திரைகள் என அறிவது மூன்றாவது ஐக்கியம். நடப்பதும் பிரதக்ஷிணமும்

ஒன்றே என்றறிவது நான்காவது ஐக்கியம். உண்பதை ஹோமம் என்றறிவது ஐந்தாவது ஐக்கியம். படுத்திருப்பதை நமஸ்காரமாக அறிவது ஆறுவது ஐக்கியம்.

இப்படி 6 விதமான ஐக்கியத்தையும் பூஜை செய்வதே மானஸீக பூஜை.



27

பலன் ஆத்ம ஞான சித்தி.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாள் தினம் 1000 வீதம் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்,

நைவேத்யம் பால்.

**ஸபர்யா பூஜை :**

தேவியை பூஜிப்பதில் இரு விதங்கள், 1, தேவியின் ஸபர்யை பூஜை—தேவி சம்பந்தமான மகா மந்திர ஜபம். 10, வித முத்திரை, சிதக்னியில் ஹோமம், பிரதக்ஷிணம், அர்ச்சனை என்று ஆறு அங்கங்கள்.

**சமயாசார பூஜை :**

தேவியை சகஸ்ராரத்தில் தியானிப்பது. வெளியில் பூஜை எதுவுமே இராது. ஆத்மாவை தேவியினிடம் அர்ப்பணம் செய்து பராசக்தியையும் தன்னையும் ஒன்றாக அறிவது.

இந்த சுலோகம் சமயாசார பூஜையைக் குறிப்பிடுகிறது.

## வளர்பிறை பூஜை விசேஷம்
### (தேவியின் ஸ்நான மகிமை)

தேவியின் பூஜா விதியில் பௌர்ணமி கழிந்த பிரதமையிலிருந்து ஆரம்பித்து அமாவாசை முடிய தேவி திருமஞ்சன விளையாட்டை விளையாடுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.


அமாவாஸைக்குப் பின் வரும் பிரதமையிலிருந்து அனுக்கிரஹிக்க தர்பாரில் வீற்றிருக்கிறாள். பிரதிபத் என்ற பிரதமை முதல் ராகா என்ற பௌர்ணமி முடிய அவளை பூஜிப்பது விசேஷம்.

அதாவது சுக்ல பக்ஷத்தில் பூஜையை விஸ்தரிக்க வேண்டும்.

இது பற்றிய சுலோகம்:

கலங்க: கஸ்தூரி ரஜநிகரபிம்பம் ஜலமயம்
கலாபி: கர்பூரைர்மரகதகரண்டம் நிபிடிதம் ।
அதஸ்த்வத்போகேந ப்ரதிதிநமிதம் ரிக்தகுஹரம்
விதிர்பூயோ பூயோ நிபிடயதி நூநம் தவ க்ருதே ॥ 94 ॥

இதன் பலன் இஷ்டப் பிராப்தி.




இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 45 நாட்கள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தை பாராயணம் செய்ய வேண்டும்,

முத்கான்னம், பழம் நைவேத்யம்.


## தேவியின் தாம்பூலப் பிரசாதம்

கதா காலே மாத: கதய கலித ஆலக்தகரஸம்
பிபேயம் வித்யார்த்தீ தவ சரணநிர்ணேஜந ஜலம் ।
ப்ரக்ருத்யா மூகாநாமபி ச கவிதாகாரணதயா
கதா தத்தே வாணீ முககமலதாம்பூலரஸதாம் ॥ 98 ॥

அம்பிகையின் தாம்பூல பிரசாதம் ஒரு பிறவி ஊமையை பெரும் கவிஞனாக்கிவிட்டது. மூக சங்கரர் இப்படி ஊமையாக இருந்து அம்பிகையின் தாம்பூல சேஷம் பெற்று பெரும் புலவராகி 'மூக பஞ்ச சதி' என்ற 500 சுலோகங்களை இயற்றி யிருக்கிறார்.

இந்த பாத்ய தீர்த்தம் எனக்கு எப்போது கிடைக்கும் என்று ஆதிசங்கரர் அம்பிகையிடம் கேட்கிறார்.

பலன்: ஸ்திரீகளானால் கர்ப்பப் பிராப்தி. புருஷர்களானால் போகப் பிராப்தி.




இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி 30 நாள் தினம் 1000 தடவை இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.


தேன் நைவேத்யம்.

முருக பிரான் அம்பிகையின் தாம்பூல பிரசாதம் கிடைத்து பெரும் ஞான பண்டிதனுனர் என்பதை 65வது சுலோகம் விளக்குகிறது.

ரணே ஜித்வா தைத்யாந் அபஹ்ருதசிரஸ்த்ரை: கவசிபி:
நிவ்ருத்தை: சண்டாம்சத்ரிபுரஹர நிர்மால்யவிமுகை: |
விசாகேந்த்ரோபேந்த்ரை: சசிவிசத கற்பூரசகலா
விலீயந்தே மாதஸ்தவ வதநதாம்பூலகபலா: || 65 ||

சூரபத்மாதியர்களை வென்ற முருகப் பெருமான் அந்த வெற்றிச் செய்தியைச் சொல்ல நேராக அம்பிகையிடம் வந்த போது அவருக்கு கிடைத்தது அம்பிகையின் தாம்பூல சேஷம் தான். இது அவரை ஞான பண்டிதனுக்கிவிட்டது.

65




பலன் ஸகலமும் ஜயம்.


ஸ்வர்ணத் தகட்டில் இந்த யந்திரத்தை எழுதி ஸுகந்த புஷ்பத்தால் அர்ச்சனை செய்ய வேண்டும். தினம் நான்் ஒன்றுக்கு 1000 வீதம் இந்த ஸ்லோகத்தை பாராயணம் செய்யவும்.

தேன் நைவேத்யம்

த்ரயாணும் தேவாநாம் த்ரிகுணஜநிதாநாம் தவ சிவே
பவேத்பூஜா பூஜா தவசரணயோர்யா விரசிதா |
ததாஹி த்வத்பாதோத்வஹந மணிபீடஸ்ய நிகடே
ஸ்திதா ஹ்யேதே சச்வத் முகுளித கரோத்தம்ஸ மகுடா:
|| 25 ||

பிரும்மா, விஷ்ணு, ருத்ரன் மூவரும் அம்பிகையின் பாதாரவிந்தத்தில் அஞ்சலி செய்துகொண்டு நிற்கிறார்கள், ஆகவே அம்பிகையை பூஜித்தால் அவர்களையும் பூஜித்ததாக ஆகிறது. தேவியின் பாதங்களில் போடும் புஷ்பம் அவர்கள் தலையில் விழுகிறது.

ஆருதாரங்களில் பிரும்மா, விஷ்ணு, ருத்ரன் மூன்று கிரந்திகளாக விளங்குகிருர்கள். ஆகவே இந்த பூஜையிலும் அம்பிகையை பூஜிப்பது அவர்களை பூஜித்ததாக ஆகிறது.




பலன் அதிகார ப்ரதம்.

இந்த யந்திரத்தை ஸ்வர்ணத் தகட்டில் எழுதி தினம் 1000 முறை வீதம் 45 நாட்கள் சுலோகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

தேன் நைவேத்யம்.

## அம்பிகையின் எட்டுவிதமான கண்ணோட்டம்

விசாலா கல்யாணீ ஸ்புடருசி; அயோத்யா குவலயை;
க்ருபாதாராதாரா கிமபி மதுரா ஆபோகவதிகா |
அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹுநகர விஸ்தாரவிஜயா
த்ருவம் தத்தந்நாம வ்யவஹரண யோக்யா விஜயதே || 49 ||


விசாலமான கண்ணோட்டம் (விசாலா) மங்களகரமானது (கல்யாணி) மலர்ந்து பிரகாசிப்பது (ஸ்புடருசி) கருநெய்தல் களால் வெல்ல முடியாதது (அயோத்யா) கருணை பெருக்கு (கிருபா தாரா தாரா) வருணிக்க முடியாதது; இனிமையானது (மதுரா) ஆழம் காண முடியாதது (ஆபோகவதிகா) ரக்ஷிப்ப தாக உள்ளது (அவந்தி).

இவ்வாறு எட்டுவிதமாக அம்பிகையின் கண்கள் விளங்குகிறது.

இவ்வழிபாட்டின் பலன் நிதி தர்சனம்.

இந்த ஸ்லோகத்தை மஞ்சளினால் எழுதி சுட்டு நல்லெண்ணெய் விட்டு குழப்பி பூனைக் கண்ணாக உள்ளங்கையால் அஞ்ஜனம் போட்டுக் கொள்ளவும். தினம் நாள் ஒன்றுக்கு 1000 வீதம் 10 நாட்கள் இந்த சுலோகத்தைப் பாராயணம் செய்யவும்.

நைவேத்யம் தேன்; பொரிகல்.





49

## தேவியின் வாக்விலாசம்

ஸரஸ்வத்யா: ஸூக்தி: அம்ருதலஹரீகௌசலஹரீ:
பிபந்த்யா: சர்வாணி ச்ரவண சுலுகாப்யாம் அவிரலம் ।
சமத்கார ச்லாகாசலிதசிரஸ: குண்டலகணோ
ஜணத்காரைஸ்தாரை: ப்ரதிவசநமாசஷ்ட இவ தே ॥ 60 ॥

தேவியினுடைய வாக்மாதுர்யம் அம்ருதப்ரவாஹம் போல குளிர்ச்சியாகவும் மதுரமாகவும் இருக்கிறது. சரஸ்வதி தேவியே தான் வீணை வாசிப்பதை நிறுத்திவிட்டு தேவியினுடைய வாக் விலாசத்தை அம்ருத பானம் செய்கிருள். ஊமையும் வித்வான்கள் ஆக செய்யும் வல்லமை உள்ளது இந்த ஸ்லோகம் என்பதை அறியலாம்.



60

பலன் வாக்பலிதம்.

ஸ்வர்ணத் தகட்டில் யந்திரத்தை எழுதி தினம் ஒன்றுக்கு 1000 வீதம் 45 நாட்கள் இந்த ஸ்லோகத்தைப் பாராயணம் செய்யவும்.

நைவேத்யம் பால் பாயஸம், தேன்.


ப்ரதீபஜ்வாலாபிர் திவஸகரநீராஜநவிதி :
ஸுதாஸூதேச்சந்த்ரோபலஜலலவைரர்க்யரசநா ।
ஸ்வகீயைரம்போபி: ஸலிலநிதிஸௌஹித்யகரணம்
த்வதீயாபிர்வாக்பிஸ்தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம் ॥ 100 ॥

அம்பிகை அளித்த சக்தியைக் கொண்டு அம்பிகை மீது ஸ்தோத்திரம் செய்து ஒளிவிடும் சூரியனுக்கு கற்பூர தீபம் ஏற்றிக் காட்டுவதுபோல என்று தன்னடக்கமாகக் கூறுகிருர் ஆதிசங்கரர்.

இந்த ஒரு சுலோகத்தைப் பாராயணம் செய்தால் 100 சௌந்தர்ய லகரி சுலோகங்களையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும். இந்த சுலோகத்தில் விஜய சம்பத்து அடங்கியுள்ளது.

பலன்:ஸகல ஸித்தி.

ஸ்லோக பாராயண எண்ணிக்கை: 1000 தடவை. நாட்கள்: 16. நைவேத்யம்: பால், தேன் நெய் கலத்தது (த்ரிமதுரம்) ஜம்பூ பலம் (நாவற்பழம்)




## ஸௌந்தர்ய லஹரி சுலோக் ஜபமுறை

ஆசமனம்: ஐம்-ஆத்ம தத்துவம்
சோதயாமி ஸ்வாஹா ।
ஹ்ரீம்-வித்யா தத்துவம்
சோதயாமி ஸ்வாஹா ।
க்லீம்-சிவ தத்துவம் சோதயாமி ஸ்வாஹா ॥

ஐம், ஹ்ரீம், க்லீம்-ஸர்வ தத்துவம் சோதயாமி ஸ்வாஹா ॥

சுக்லாம்...சாந்தயே பிராணயாமம்

சங்கல்பம் சுபே சோபனே முகூர்த்தே...ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரி ப்ரீத்யத்தம்...க்ஷேமஸ்தைர்ய விர்ய விஜய ஆயுசாரோக்கிய ஐஸ்வர்யாமி விருத்தியர்த்தம் ஸமஸ்த மங்களா வாப்யர்த்தம்...கோத்ரோ பவஸ்ய நாம்ன: மஹாதிரிபுரசுந்தரி பிரஸாதேன குலதேவதா பிரசாத ஸித்தியர்த்தம்.

ஸௌந்தர்யலஹரி மஹாமந்திரி ஜப கரிஷ்யே விக்னேஸ்வர பூஜை.

### ஜபம்

அஸ்யஸ்ரீ ஸௌந்தர்யலஹரி ஸதோத்திர
மஹா மந்திரஸ்ய கோவிந்தரிஷி ।
அனுஷ்டுப்சந்த: ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரி தேவதா ॥

ஶிவ: ஶக்த்யா யுக்தோ யதிபவதி ஶக்த: ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ நகலுகுஶல: ஸ்பந்திது மபி ।
அதஸ்வாம் ஆராத்யாம் ஹரிஹர விரிஞ்சாதி பிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருத புண்ய:
ப்ரபவதி ॥
இதி பீஜம்

ஸுதாஸிந்தோர்மத்யே ஸுரவிடபிவாடீ பரிவ்ருதே
மணித்வீபே நீபோபவனவதி சிந்தாமணிக்ருஹே |
ஶிவாகாரே மஞ்சே பரமஶிவ பர்யங்க நிலயாம்
பஜந்தி த்வாம் தந்யா: கதிசன சிதானந்தலஹரீம் ||

இதி சக்தி:

ஜபோ ஜல்ப: ஶில்பம் ஸகலமபி முத்ரா விரசனா
கதி: ப்ராதக்ஷிண்ய க்ரமணம் அஶனாத்யாஹுதி விதி: ||
ப்ரணாம: ஸம்வேஶ: ஸுகமகிலம் ஆத்மார்ப்பண த்ருசா
ஸபர்யாபாயஸ்தவ பவது யன்மே விலஸிதம் ||

இதி கீலகம்

ஸ்ரீமகா திரிபுரசுந்தரி ப்ரஸாத ஸித்தியர்த்தே ஜபே விநியோகம்

கர ந்யாசம் :—

| | |
|---|---|
| ஹ்ராம் | அங்குஷ்டாப்யாம் : \| |
| ஹ்ரீம் | தர்ஜனீப்யாம் நம : \| |
| ஹ்ரூம் | மத்யமாப்யாம் நம : \| |
| ஹ்ரைம் | அநாமிகாப்யாம் நம : \| |
| ஹ்ரௌம் | கனிஷ்டிகாப்யாம் நம : \| |
| ஹ்ர : | கர தல கரப்ருஷ்டாப்யாம் நம : \| |

ஹ்ருதயாதி நியாஸம் :—

| | |
|---|---|
| ஹ்ராம் | ஹ்ருதயாய நம : \| |
| ஹ்ரீம் | சிரஸே ஸ்வாஹா \| |
| ஹ்ரூம் | சிகாயை வஷட் \| |
| ஹ்ரைம் | கவசாய ஹும் \| |
| ஹ்ரௌம் | நேத்ரத்ரயாய வௌஷட் \| |
| ஹ்ர : | அஸ்த்ராய பட் \| |

பூர்புவஸ்ஸுவரோம் இதி திக் பந்த :

தியானம்

லௌஹித்ய நிர்ஜித ஜபா குஸுமானு ராகாம்
பாசாங்குசௌ தனு ரிஷூனபி தாரயந்திம் |
தாம்ரேக்ஷண மருணமால்ய விசேஷ பூஷாம்
தாம்பூல பூரித முகிம் த்ரிபுராம் நமாமி ||

லம். இத்யாதி பூஜா

பிரயோகத்தில் கூறியுள்ளபடி அத்தனை தடவை பாராயணம். திக்விமோகம், தியானம் பஞ்ச பூஜா. பிரயோகத்தில் கூறியுள்ளபடி நைவேத்யம் ஸமர்ப்பணம்...குஹ்யாதி...மயிஸ்திரா ||

## ஸ்ரீ சங்கர பகவத்பூஜ்யபாதாள் அருளிய

# ஸௌந்தர்யலஹரீ

## ஸ்தோத்திரங்கள்

சிவ: சக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குசல: ஸ்பந்திதுமபி |
அதஸ்த்வாம் ஆராத்யாம் ஹரிஹரவிரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருதபுண்ய: ப்ரபவதி ||1||

தநீயாம்ஸம் பாம்ஸும் தவ சரணபங்கேருஹபவம்
விரிஞ்சி: ஸஞ்சிந்வன் விரசயதி லோகாநவிகலம் |
வஹத்யேநம் சௌரி: கதமபி ஸஹஸ்ரேண சிரஸாம்
ஹர: ஸம்க்ஷுத்யைநம் பஜதி பஸிதோத்தூலநவிதிம் || 2 ||

அவித்யாநாம் அந்தஸ்திமிர மிஹிரத்வீபநகரீ
ஜடாநாம் சைதந்யஸ்தபக மகரந்தஸ்ருதிஜரீ |
தரித்ராணாம் சிந்தாமணிகுணநிகா ஜன்மஜலதௌ
நிமக்நாநாம் தம்ஷ்ட்ரா முரரிபுவராஹஸ்ய பவதி || 3 ||

த்வதந்ய: பாணிப்யாம் அபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடிதவராபீத்யபிநயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகாநாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ || 4 ||

ஹரிஸ்த்வாமாராத்ய ப்ரணதஜந ஸௌபாக்ய ஜநநீம்
புரா நாரீ பூத்வா புரரிபுமபி க்ஷோபமநயத் |
ஸ்மரோபி த்வாம் நத்வா ரதிநயநலேஹ்யேந வபுஷா
முநீநாமப்யந்த: ப்ரபவதி ஹி மோஹாய மஹதாம் || 5 ||

தநு: பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விசிகா:
வஸந்த: ஸாமந்தோ மலயமருதாயோதநரத: |
ததாப்யேக: ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்
அபாங்காத்தே லப்த்வா ஜகதிதமநங்கோ விஜயதே || 6 ||

க்வணத் காஞ்சீதாமா கரிகலப கும்பஸ்தந நதா
பரிக்ஷீணா மத்யே பரிணத சரச்சந்த்ர வதநா |
தநுர்பாணாந் பாசம் ஸ்ருணிமபி ததாநா கரதலை:
புரஸ்தாதாஸ்தாம் ந: புரமதிது: ஆஹோபுருஷிகா || 7 ||

ஸுதாஸிந்தோர்மத்யே ஸுரவிடபிவாடீ பரிவ்ருதே
மணித்வீபே நீபோப வநவதி சிந்தாமணிக்ருஹே
சிவாகாரே மஞ்சே பரமசிவபர்யங்கநிலயாம்
பஜந்தி த்வாம் தந்யா: கதிசந சிதாநந்தலஹரீம் || 8 ||

மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டாநே ஹ்ருதி மருதமகாசமுபரி |
மநோபி ப்ருமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே || 9 ||

ஸுதாதாரா ஸாரை: சரணயுகளாந்தர்விகளிதை:
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புநரபி ரஸாம்நாய மஹஸ: |
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிபம் அத்யுஷ்டவலயம்
ஸ்வமாத்மாநம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே குஹரிணி || 10 ||

சதுர்பி: ஸ்ரீகண்டை: சிவயுவதிபி: பஞ்சபிரபி
ப்ரபிந்நாபி: சம்போ: நவபிரபி மூலப்ரக்ருதிபி: |
சதுச்சத்வாரிம்சத் வஸுதலகலாச்ர த்ரிவலய
த்ரிரேகாபி: ஸார்தம் தவசரணகோணா: பரிணதா: || 11 ||

த்வதீயம் ஸௌந்தர்யம் துஹிநகிரிகந்யே துலயிதும்
கவீந்த்ரா: கல்பந்தே கதமபி விரிஞ்சி ப்ரப்ருதய: |
யதாலோகௌத்ஸுக்யாத் அமரலலநா யாந்தி மநஸா
தபோபி: துஷ்ப்ராபாமபி கிரிசஸாயுஜ்யபதவீம் || 12 ||

நரம் வர்ஷீயாம்ஸம் நயநவிரஸம் நர்மஸு ஜடம்
தவா பாங்காலோகே பதிதம் அநுதாவந்தி சதச: |
களத்வேணீ பந்தா : குசகலச விஸ்ரஸ்த ஸிசயா
ஹடாத் த்ருட்யத்காஞ்ச்ய: விகளிததுகூலா யுவதய : || 13 ||

க்ஷிதௌ ஷட்பஞ்சாசத்விஸமதிக பஞ்சாசதுதகே
ஹுதாசே த்வாஷஷ்டி: சதுரதிக பஞ்சாசதநிலே |
திவி த்விஷ் ஷட்த்ரிம்சத் மநஸி ச சது: ஷஷ்டிரிதியே
மயூகா: தேஷாமப்யுபரி தவ பாதாம்புஜயுகம் || 14 ||

சரஜ்ஜ்யோத்ஸ்நா சுத்தாம் சசியுத ஜடாஜூட மகுடாம்
வரத்ராஸத்ராண ஸ்படிக கடிகா புஸ்தககராம் |
ஸக்ருந்நத்வா நத்வா கதமிவ ஸதாம் ஸந்நிதததே
மதுக்ஷீரத்ராக்ஷா மதுரிமதுரீணா: பணிதய : || 15 ||

கவீந் த்ராணும் சேது: கமலவந பாலாதபருசிம்
பஜந்தே யே ஸந்த: கதிசித் அருணமேவ பவதீம் |
விரிஞ்சி ப்ரேயஸ்யா: தருண தர ச்ருங்கார லஹரீ
கபீராபி: வாக்பி: விதததி ஸதாம் ரஞ்சநமமீ || 16 ||

ஸவித்ரீ பிர்வாசாம் ச்சிமணி சிலாபங்கருசிபி :
வசித்யாத்யாபி: த்வாம் ஸஹ ஜநநி ஸஞ்சிந்தயதி ய : |
ஸ கர்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பங்கிருசிபி :
வசோபி: வாக்தேவீவதன கமலாமோத மதுரை: || 17 ||

தநுச்சாயா பிஸ்தே தருண தரணி ஸ்ரீஸரணிபி :
திவம் ஸர்வாம் உர்வீம் அருணிமநிமக்னம் ஸ்மரதி ய : |
பவந்த்யஸ்ய த்ரஸ்யத்வநஹரிண சாலீந் நயநா :
ஸஹோர் வச்யா வச்யா : கதிகதி ந கீர்வாண கணிகா : || 18

முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய தத :
ஹரார்த்தம் த்யாயேத்: ஹரமஹிஷி தே மந்மதகலாம் |
ஸ ஸத்ய: ஸங்க்ஷோபம் நயதி வநிதா இத்யதிலகு
த்ரிலோகீமப்யாசு ப்ரமயதி ரவீந்து ஸ்தநயுகாம் || 19 ||

கிரந்தீமங்கேப்ய: கிரண நிகுரும்பாம்ருதரஸம்
ஹ்ருதி தவாமாதத்தே ஹிமகர சிலாமூர்த்திமிவ ய : |
ஸ ஸர்ப்பாணும் தர்பம் சமயதி சகுந்தாதிப இவ
ஜ்வர ப்ருஷ்டாந் த்ருஷ்ட்யா ஸுகயதி ஸுதாதார ஸிரயா || 20 ||

தடில்லேகாதந்வீம் தபநசசி வைச்வாநரமயீம்
நிஷண்ணும் ஷண்ணுமப்யுபரி கமலாநாம் தவகலாம் |
மஹாபத்மாடவ்யாம் ம்ருதித மலமாயேந மநஸா
மஹாந்த: பச்யந்த: தததி பரமாநந்தலஹரீம் || 21 ||

பவானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணும்
இதி ஸ்தோதும் வாஞ்சந் கதயதி பவானி த்வம் இதி ய: |
ததைவ த்வம் தஸ்மை திசஸி நிஜஸாயுஜ்ய பதவீம்
முகுந்த ப்ரஹ்மேந்த்ர ஸ்புட மகுட நீராஜிதபதாம் || 22 ||

த்வயா ஹ்ருத்வா வாமம் வபுரபரித்ருப்தேந மநஸா
சரீரார்த்தம் சம்போ: அபரமபி சங்கே ஹ்ருதமபூத் |
யதேதத்த்வத்ரூபம் ஸகலமருணபம் த்ரிநயநம்
குசாப்யாம் ஆநம்ரம் குடிலசசி சூடாலமகுடம் || 23 ||

ஜகத்ஸூதே தாதா ஹரிரவதி ருத்ர: க்ஷபயதே
திரஸ்குர்வந்நேதத் ஸ்வமபி வபுரீ சஸ்திரயதி ।
ஸதாபூர்வ: ஸர்வம் ததிதம் அநுக்ருஹ்ணாதி ச சிவ:
தவாக்ஞாம் ஆலம்ப்ய க்ஷணசலிதயோ: ப்ருலதிகயோ: ||24||

த்ரயாணாம் தேவாநாம் த்ரிகுணஜநிதாநாம் தவ சிவே
பவேத்பூஜா பூஜா தவசரணயோர்யா விரசிதா ।
ததாஹி த்வத்பாதோத்வஹந மணிபீடஸ்ய நிகடே
ஸ்திதா ஹ்யேதே சச்வத் முகுளித கரோத்தம்ஸ மகுடா ! || 25 ||

விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்நோதி விரதிம்
விநாசம் கீநாச: பஜதி தநதோ யாதி நிதனம்
விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலித த்ருசா
மஹாஸம்ஹாரேஸ்மிந் விஹரதி ஸதி த்வத்பதிரஸௌ || 26 ||

ஜபோ ஜல்ப: சில்பம் ஸகலமபி முத்ராவிரசநா
கதி: ப்ராதக்ஷிண்யக்ரமணம் அசநாத்யாஹுதி விதி: ।
ப்ரணாம: ஸம்வேச: ஸுகமகிலம் ஆத்மார்ப்பண த்ருசா
ஸபர்யாபாயாயஸ்தவ பவது யந்மே விலஸிதம் || 27 ||

ஸுதாமபி ஆஸ்வாத்ய ப்ரதிபயஜரா ம்ருத்யுஹரிணீம்
விபத்யந்தே விச்வே விதிசதமகாத்யா திவிஷத: ।
கராலம் யத்க்ஷ்வேலம் கபலிதவத: காலகலநா
ந சம்போ: தந்மூலம் தவ ஜநநி தாடங்கமஹிமா || 28 ||

கிரீடம் வைரிஞ்சம் பரிஹர புர: கைடபபித:
கடோரே கோடீரே ஸ்கலஸி ஜஹி ஜம்பாரிமகுடம் ।
ப்ரணம்ரேஷ்வேதேஷு ப்ரஸபமுபயாதஸ்ய பவநம்
பவஸ்யாப்யுத்தாநே தவ பரிஜநோக்தி: விஜயதே || 29 ||

ஸ்வதேஹோத்பூதாபி: க்ருணிபி: அணிமாத்யாபி: அபித:
நிஷேவ்யே நித்யே த்வாமஹமிதி ஸதா பாவயதி ய: ।
கிமாச்சர்யம் தஸ்ய த்ரிநயநஸம்ருத்திம் த்ருணயதோ
மஹாஸம்வர்தாக்நி: விரசயதி நீராஜனவிதிம் || 30 |

சதுஷ்ஷஷ்ட்யா தந்த்ரை: ஸகலம் அதிஸந்தாய புவநம்
ஸ்திதஃ தத்தத்ஸித்தி ப்ரஸவபரதந்த்ரை: பசுபதி: ।
புந: த்வந்நிர்பந்தாதகில புருஷார்த்தைககடநா
ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதலம் அவாதீதரதிதம் || 31 ||

சிவச்சக்தி: காம: க்ஷிதிரத ரவிச்சித கிரண:
ஸ்மரோ ஹம்ஸ: சக்ரஸ்தததநுச பராமாரஹரய : |
அமீ ஹ்ருல்லேகாபி: திஸ்ருபி: அவஸாநேஷு கடிதா :
பஜந்தே வர்ணாஸ்தே தவஜநநி நாமாவயவதாம் || 32 ||

ஸ்மரம் யோநிம் லக்ஷ்மீம் த்ரிதயமித மாதௌ தவமநோ :
நிதாயைகே நித்யே நிரவதி மஹாபோகரஸிகா : |
பஜந்தி த்வாம் சிந்தாமணி குணநிபத்தாக்ஷவலயா :
சிவாக்நௌ ஜுஹ்வந்த : ஸுரபிக்ருத தாராஹுதி சதை :
33

சரீரம் த்வம் சம்போ: சசிமிஹிர வக்ஷோருஹயுகம்
தவாத்மாநம் மந்யே பகவதி நவாத்மாநமநகம் |
அத: சேஷ: சேஷீத்யயம் உபயஸாதாரணதயா
ஸ்தித: ஸம்பந்தோ வாம் ஸமரஸபராநந்தபரயோ: || 34 |

மநஸ்த்வம் வ்யோமத்வம் மருதஸி மருத்ஸாரதிரஸி
த்வமாப: த்வம் பூமி: த்வயி பரிணதாயாம் நஹி பரம் |
த்வமேவ ஸ்வாத்மாநம் பரிணமயிதும் விச்வவபுஷா
சிதாநந்தாகாரம் சிவயுவதி பாவேந பிப்ருஷே || 35 ||

தவாக்ஞா சக்ரஸ்தம் தபநசசிகோடித்யுதிதரம்
பரம்சம்பும்வந்தே பரிமிளிதபார்ச்வம் பரசிதா |
யமாராத்யந் பக்த்யா ரவிசசிசுசீநாம் அவிஷயே
நிராலோகேலோகே நிவஸதிஹி பாலோகபுவநே || 36 ||

விசுத்தௌ தே சுத்தஸ்படிகவிசதம் வ்யோமஜநகம்
சிவம் ஸேவே தேவீமபி சிவஸமாந வ்யவஸிதாம் |
யயோ: காந்த்யா யாந்த்யா: சசிகிரண ஸாரூப்ய ஸரணே:
விதூதாதந்தர்த்வாந்தா விலஸதி சகோரீவ ஜகதீ || 37 ||

ஸமுந்மீலத்ஸம்வித் கமலமகரந்தைகரஸிகம்
பஜே ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மாநஸசரம் |
யதாலாபாத் அஷ்டாதசகுணிதவித்யாபரிணதி :
யதாதத்தே தோஷாத் குணமகிலம் அத்ப்ப: பய இவ || 38 ||

தவ ஸ்வாதிஷ்டாநே ஹுதவஹம் அதிஷ்டாய நிரதம்
தமீடே ஸம்வர்தம் ஜநநி மஹதீம் தாம் ச ஸமயாம் |
யதா லோகே லோகாந் தஹதி மஹஸி க்ரோதகலிதே
தயார்த்ரா யா த்ருஷ்டி: சிசிரம் உபசாரம் ரசயதி || 39 ||

தடித்த்வந்தம் சக்த்யா திமிரபரிபந்திஸ்புரணயா
ஸ்புரந்நாநாரத்னாபரண பரிணத்தேந்த்ர தனுஷம்
தவ ச்யாமம் மேகம் கமபி மணிபூரைகசரணம்
நிஷேவே வர்ஷந்தம் ஹரமிஹிரதப்தம் த்ரிபுவநம் || 40 ||

தவாதாரே மூலே ஸஹஸமயயா லாஸ்யபரயா
நவாத்மாநம் மந்யே நவரஸ மஹாதாண்டவநடம் |
உபாப்யாம் ஏதாப்யாம் உதயவிதிம் உத்திச்ய தயயா
ஸநாதாப்யாம் ஜக்ஞே ஜநகஜநநீமத் ஜகதிதம் || 41 ||

கதைர்மாணிக்யத்வம் ககநமணிபி: ஸாந்த்ரகடிதம்
கிரீடம் தே ஹைமம் ஹிமகிரிஸுதே கீர்தயதி ய: |
ஸ நீடே யச்சாயாச்சுரண சபலம் சந்த்ரசகலம்
தநு: சௌநாஸீரம் கிமிதி ந நிபத்நாதி திஷணாம் || 42 ||

துநோது த்வாந்தம் நஸ்துலிததலிதேந்தீவரவநம்
கந ஸ்நிக்தச்லக்ஷ்ணம் சிகுரநிகுரும்பம் தவ சிவே |
யதீயம் ஸௌரப்யம் ஸஹஜம் உபலப்தும் ஸுமநஸோ
வஸந்த்யஸ்மிந் மந்யே வலமதநவாடீவிடபிநாம் || 43 ||

தநோது க்ஷேமம் நஸ்தவ வதநஸௌந்தர்யலஹரீ
பரீவாஹ: ஸ்ரோத: ஸரணிரிவ ஸீமந்தஸரணி: |
வஹந்தீ ஸிந்தூரம் ப்ரபல கபரீபாரதிமிர
த்விஷாம் ப்ருந்தை: பந்தீக்ருதமிவ நவீனார்ககிரணம்
|| 44 ||

அராலை: ஸ்வாபாவ்யாத் அலிகலபஸஸ்ரீபி: அலகை:
பரீதம் தே வக்த்ரம் பரிஹஸதி பங்கேருஹருசிம் |
தரஸ்மேரே யஸ்மிந் தசநருசிகிஞ்ஜல்கருசிரே
ஸுகந்தௌ மாத்யந்தி ஸ்மரதஹநசக்ஷு: மதுலிஹ: || 45 ||

லலாடம் லாவண்யத்யுதிவிமலம் ஆபாதி தவ யத்
த்விதீயம் தந்மந்யே மகுடகடிதம் சந்த்ரசகலம் |
விபர்யாஸந்யாஸாத் உபயமபி ஸம்பூய ச மித:
ஸுதாலேபஸ்யூதி: பரிணமதி ராகாஹிமகர: || 46 ||

ப்ருவௌ புக்நே கிஞ்சித் புவநபயபங்கவ்ய ஸநிநி
த்வதீயே நேத்ராப்யாம் மதுகரருசிப்யாம் த்ருதகுணம் |
தனுர்மந்யே ஸவ்யேதரகர க்ருஹீதம் ரதிபதே:
ப்ரகோஷ்டே முஷ்டௌ ச ஸ்தகயதி நிகூடாந்தரமுமே ||
47 ||

அஹ: ஸூதே ஸவ்யம் தவ நயநம் அர்காத்மகதயா
த்ரியாமாம் வாமம் தே ஸ்ருஜதி ரஜநீநாயகதயா |
த்ருதீயா தே த்ருஷ்டி: தரதலித ஹேமாம்புஜருசி:
ஸமாதத்தே ஸந்த்யாம் திவஸநிசயோ: அந்தரசரீம் || 48 ||

விசாலா கல்யாணீ ஸ்புடருசி: அயோத்யா குவலயை:
க்ருபாதாராதாரா கிமபி மதுரா ஆபோகவதிகா |
அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹுநகர விஸ்தாரவிஜயா
த்ருவம் தத்தந்நாம வ்யவஹரண யோக்யா விஜயதே || 49 ||

கவீநாம் ஸந்தர்பஸ்தபக மகரந்தைக ரஸிகம்
கடாக்ஷவ்யாக்ஷேப ப்ரமர கலபௌ கர்ணயுகலம் |
அமுஞ்சந்தௌ த்ருஷ்ட்வா தவ நவரஸாஸ்வாததரலௌ
அஸூயாஸம்ஸர்காத் அலிகநயநம் கிஞ்சிதருணம் || 50 ||

சிவே ச்ருங்காரார்த்ரா ததிதரஜநே குத்ஸநபரா
ஸரோஷா கங்காயாம் கிரிசநயநே விஸ்மயவதீ |
ஹராஹிப்யோ பீதா ஸரஸிருஹ ஸௌபாக்யஜநநீ
ஸகீஷு ஸ்மேரா தே மயி ஜநநி த்ருஷ்டி: ஸகருணா || 51 ||

கதே கர்ணாப்யர்ணம் கருத இவ பக்ஷ்மாணி தததீ
புராம் பேத்து: சித்தப்ரசமரஸ வித்ராவணபலே |
இமே நேத்ரே கோத்ராதரபதி குலோத்தம் ஸகலிகே
தவ ஆகர்ணாக்ருஷ்டஸ்மரசர விலாசம் கலயத: || 52 ||

விபக்தத்ரைவர்ண்யம் வ்யதிகரித லீலாஞ்ஜநதயா
விபாதி த்வந்நேத்ரத்ரிதயமிதம் ஈசாநதயிதே:
புந: ஸ்ரஷ்டும் தேவாந் த்ருஹிண ஹரிருத்ராந் உபரதாந்
ரஜ: ஸத்வம் பிப்ரத்தம இதி குணாநாம் த்ரயமிவ || 53 ||

பவித்ரீகர்தும் ந: பசுபதிபராதீநஹ்ருதயே
தயாமித்ரைர்நேத்ரை: அருணதவலச்யாமருசிபி: |
நத: சோணோ கங்கா தபந தநயேதி த்ருவமமும்
த்ரயாணாம் தீர்த்தாநாம் உபநயஸி ஸம்பேதமநகம் || 54 ||

நிமேஷோந்மேஷாப்யாம் ப்ரலயமுதயம் யாதி ஜகதீ
தவேத்யாஹு: ஸந்தோ தரணிதரராஜந்யதநயே |
த்வதுந்மேஷாஜ்ஜாதம் ஜகதிதமசேஷம் ப்ரலயத:
பரித்ராதும் சங்கே பரிஹ்ருதநிமேஷாஸ்தவ த்ருச: || 55 ||

த்வாபர்ணே கர்ணேஜபநயநபைசுந்யசகிதா
    நிலீயந்தே தோயே நியதமநிமேஷா : சபரிகா : |
இயம் ச ஸ்ரீர்பத்தச்சதபுடகவாடம் குவலயம்
    ஜஹாதி ப்ரத்யூஷே நிசி ச விகடய்ய ப்ரவிசதி || 56 ||

த்ருசா த்ராகீயஸ்யா தரதலித நீலோத்பலருசா
    தவீயாம்ஸம் தீநம் ஸ்நபயா க்ருபயா மாமபி சிவே |
அநேநாயம் தந்யோ பவதி ந ச தே ஹாநிரியதா
    வநே வா ஹர்ம்யே வா ஸமகரநிபாதோ ஹிமகர : || 57 ||

அராலம் தே பாளீயுகளம் அகராஜந்யதநயே
    ந கேஷாமாதத்தே குஸுமசர கோதண்ட குதுகம் |
திரச்சீநோ யத்ர ச்ரவணபதமுல்லங்க்ய விலஸந்
    அபாங்கவ்யாஸங்கோ திசதி சரஸந்தாநதிஷணும் || 58 ||

ஸ்புரத்கண்டாபோகப்ரதிபலித தாடங்கயுகலம்
    சதுச்சக்ரம் மந்யே தவ முகமிதம் மன்மதரதம்|
யமாருஹ்ய த்ருஹ்யதி அவநிரதம் அர்கேந்துசரணம்
    மஹாவீரோ மார: ப்ரமதபதயே ஸஜ்ஜிதவதே || 59 ||

ஸரஸ்வத்யா: ஸூக்தீ: அம்ருதலஹரீ கௌசலஹரீ:
    பிபந்த்யா: சர்வாணி ச்ரவண சுலுகாப்யாம் அவிரலம் |
சமத்கார ச்லாகாசலிதசிரஸ: குண்டலகணோ
    ஜணத்காரைஸ்தாரை: ப்ரதிவசநமாசஷ்ட இவ தே || 60 ||

அஸௌ நாஸாவம்ச: துஹிநகிரிவம்ச த்வஜபடி
    த்வதீயோ நேதீய: பலது பலம் அஸ்மாகமுசிதம்|
வஹத்யந்தர்முக்தா: சிசிரகரநிச்வாஸ கலிதம்
    ஸம்ருத்யா யஸ்தாஸாம் பஹிரபி ஸ முக்தாமணிதர: || 61 ||

ப்ரக்ருத்யா ரக்தாயாஸ்தவ ஸுததி தந்தச்சதருசே:
    ப்ரவக்ஷ்யே ஸாத்ருச்யம் ஜனயது பலம் வித்ருமலதா |
ந பிம்பம் தத்பிம்ப ப்ரதிபலநராகாத் அருணிதம்
    துலாம் அத்யாரோடும் கதமிவ விலஜ்ஜேத கலயா || 62 ||

ஸ்மிதஜ்யோத்ஸ்நாஜாலம் தவ வதநசந்த்ரஸ்ய பிபதாம்
    சகோராணாம் ஆஸீத் அதிரஸதயா சஞ்சுஜடிமா |
அதஸ்தே சீதாம்சோ : அம்ருதலஹரீம் ஆம்லருசய :
    பிபந்தி ஸ்வச்சந்தம் நிசிநிசி ப்ருசம் காஞ்ஜிகதியா || 63 ||

அவிச்ராந்தம் பத்யுர்குணகண கதாம்ரேடநஜபா
ஜபாபுஷ்பச்சாயா தவ ஜநநி ஜிஹ்வா ஜயதி ஸா |
யதக்ராஸீநாய: ஸ்படிகத்ருஷதச்சச்சவிமயீ
ஸரஸ்வத்யா மூர்த்தி: பரிணமதி மாணிக்யவபுஷா || 64 ||

ரணே ஜித்வா தைத்யாந் அபஹ்ருதசிரஸ்த்ரை: கவசிபி:
நிவ்ருத்தை: சண்டாம்சத்ரிபுரஹர நிர்மால்யவிமுகை: |
விசாகேந்த்ரோபேந்த்ரை: சசிவிசத கர்ப்பூரசகலா
விலீயந்தே மாதஸ்தவ வதநதாம்பூலகபலா : || 65 ||

விபஞ்ச்யா காயந்தீ விவிதமபதாநம் பசுபதே|
த்வயாரப்தே வக்தும் சலிதசிரஸா ஸாதுவசநே |
ததீயைர் மாதுர்யைரபலபிததந்த்ரீகலரவாம்
நிஜாம் வீணாம் வாணீ நிசுலயதி சோலேந நிப்ருதம் || 66 ||

கராக்ரேண ஸ்ப்ருஷ்டம் துஹிநகிரிணா வத்ஸலதயா
கிரீசேன உதஸ்தம் முஹுர் அதரபாநாகுலதயா |
கரக்ராஹ்யம் சம்போ: முகமுகுர வ்ருந்தம் கிரிஸுதே
கதம்காரம் ப்ரூம: தவ சுபுகம் ஔபம்யரஹிதம் || 67 ||

புஜாச்லேஷாந்நித்யம் புரதமயிது: கண்டகவதீ
தவ க்ரீவா தத்தே முககமலநாலச்ரியம் இயம் |
ஸ்வத: ச்வேதா காலாகுருபஹுளஜம்பாலமலிநா
ம்ருணாலீலாலித்யம் வஹதி யததோ ஹாரலதிகா || 68 ||

களே ரேகாஸ்திஸ்ரோ கதிகமக கீதைகநிபுணே
விவாஹவ்யாநத்தப்ரகுணகுணஸம்க்யா ப்ரதிபுவ: |
விராஜந்தே நாநாவிதமதுரராக ஆகரபுவாம்
த்ரயாணாம் க்ராமாணாம் ஸ்திதிநியம ஸீமாந இவ தே
|| 69||

ம்ருணாலீம்ருத்வீநாம் தவ புஜலதாநாம் சதஸ்ருணாம்
சதுர்பி: ஸௌந்தர்யம் ஸரஸிஜபவ; ஸ்தௌதி வதநை: |
நகேப்ய: ஸந்த்ரஸ்யந் ப்ரதமமதநாத் அந்தகரிபோ:
சதுர்ணாம் சீர்ஷாணாம் ஸமம் அபயஹஸ்தார்ப்பணதியா
|| 70 ||

நகாநாமுத்யோதை: நவநலிநராகம் விஹஸதாம்
கராணாம் தே காந்திம் கதய கதயாம: கதமுமே |
கயாசித்வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்
யதி க்ரீடல்லக்ஷ்மீசரணதல லாக்ஷாரஸசணம் || 71 ||

ஸமம் தேவி ஸ்கந்தத்விபவதநபீதம் ஸ்தநயுகம்
தவேதம் ந: கேதம் ஹரது ஸததம் ப்ரஸ்நுதமுகம் |
யதாலோக்ய ஆசங்காகுலிதஹ்ருதயோ ஹாஸஜநக:
ஸ்வகும்பௌ ஹேரம்ப: பரிம்ருசதி ஹஸ்தேநஜடிதி || 72 ||

அமூ தே வக்ஷோஜௌ அம்ருதரஸமாணிக்யகுதுபௌ
ந ஸந்தேஹஸ்பந்தோ நகபதிபதாகே மநஸி ந: |
பிபந்தௌ தௌ யஸ்மாத் அவிதிதவதூஸங்கரஸிகௌ
குமாராவத்யாபி த்விரதவதந க்ரௌஞ்சதலநௌ || 73 ||

வஹத்யம்ப ஸ்தம்பேரமதநுஜ கும்பப்ரக்ருதிபி:
ஸமாரப்தாம் முக்தாமணிபி: அமலாம் ஹாரலதிகாம் |
குசாபோகோ பிம்பாதரருசிபி: அந்த: சபலிதாம்
ப்ரதாபவ்யாமிச்ராம் புரதமயிது: கீர்த்திமிவ தே || 74 ||

தவ ஸ்தந்யம் மந்யே தரணிதரகந்யே ஹ்ருதயத:
பய: பாராவார: பரிவஹதி ஸாரஸ்வதமிவ |
தயாவத்யா தத்தம் த்ரவிடசிசு: ஆஸ்வாத்ய தவ யத்
கவீநாம் ப்ரௌடாநாமஜநி கமநீய: கவயிதா || 75 ||

ஹரக்ரோதஜ்வாலாவலிபி: அவலீடேந வபுஷா
கபீரே தே நாபீஸரஸி க்ருதஸங்கோ மநஸிஜ: |
ஸமுத்தஸ்தௌ தஸ்மாத் அசலதநயே தூமலதிகா
ஜநஸ்தாம் ஜாநீதே தவ ஜநநி ரோமாவலிரிதி || 76 ||

யதேதத் காலிந்தீ தநுதர தரங்காக்ருதி சிவே
க்ருசே மத்யே கிஞ்சிஜ்ஜநநி தவ யத்பாதி ஸுதியாம் |
விமர்தாத் அந்யோந்யம் குசகலசயோ: அந்தரகதம்
தநூபூதம் வ்யோம ப்ரவிசதிவ நாபிம் குஹரிணீம் || 77 ||

ஸ்திரோ கங்காவர்த: ஸ்தந முகுல ரோமாவலிலதா
கலா வாலம் குண்டம் குஸுமசர தேஜோ ஹுதபுஜ: |
ரதேர்லீலா காரம் கிமபி தவ நாபிர்கிரிஸுதே
பில த்வாரம் ஸித்தே: கிரிசநயநாநாம் விஜயதே || 78 ||

நிஸர்கக்ஷீணஸ்ய ஸ்தநதடபரேண க்லமஜுஷோ
நமந்மூர்த்தே: நாரீ திலக சநகை: த்ருட்யத இவ |
சிரம் தே மத்யஸ்ய த்ருடித தடிநீதீரதருணா
ஸமாவஸ்தாஸ்தேம்நோ பவது குசலம் சைலதநயே || 79 ||

குசௌ ஸத்ய: ஸ்வித்யத் தட கடித கூர்ப்பாஸ பிதுரௌ
கஷந்தௌ தோர்மூலே கநககலசாபௌ கலயதா |
தவ த்ராதும் பங்காத் அலமிதி வலக்நம் தநுபுவா
த்ரிதா நத்தம் தேவி த்ரிவலி லவலீவல்லிபிரிவ || 80 ||

குருத்வம் விஸ்தாரம் க்ஷிதிதரபதி: பார்வதி நிஜாத்
நிதம்பாத் ஆச்சித்ய த்வயீ ஹரணரூபணே நிததே |
அதஸ்தே விஸ்தீர்ணோ குருரயமசேஷாம் வஸுமதீம்
நிதம்பப்ராக்பார, ஸ்தகயதி லகுத்வம் நயதி ச || 81 ||

கரீந்த்ராணும் சுண்டாந் கநககதலீ காண்டபடலீம்
உபாப்யாம் ஊருப்யாம் உபயமபி நிர்ஜித்ய பவதீ |
ஸுவ்ருத்தாப்யாம் பத்யு: ப்ரணதிகடிநாப்யாம் கிரிஸுதே
விதிக்ஞே ஜாநுப்யாம் விபுதகரிகும்பத்வயமஸி || 82 ||

பராஜேதும் ருத்ரம் த்விகுணசரகர்பௌ கிரிஸுதே
நிஷங்கௌ ஜங்கே தே விஷமவிசிகோ பாடமக்ருத |
யதக்ரே த்ருச்யந்தே தசசரபலா: பாதயுகலீ
நகாக்ரச்சத்மாந: ஸுரமகுட சாணைக நிசிதா : || 83 ||

ச்ருதீநாம் மூர்த்தாநோ தததி தவ யௌ சேகரதயா
மமாப்யேதௌ மாத: சிரஸி தயயா தேஹி சரணௌ |
யயோ: பாத்யம் பாத: பசுபதி ஜடாஜூடதடிநீ
யயோ: லாக்ஷாலக்ஷ்மீ: அருண ஹரிசூடாமணிருசி: || 84 ||

நமோவாகம் ப்ரூமோ நயநரமணீயாய பதயோ :
தவாஸ்மை தவந்த்வாய ஸ்புடருசி ரஸாலக்தகவதே |
அஸூயதி அத்யந்தம் யதபிஹநநாய ஸப்ருஹயதே
பசூநாமீசாந: ப்ரமதவந கங்கேலிதரவே || 85 ||

ம்ருஷா க்ருத்வா கோத்ரஸ்கலநம் அத வைலக்ஷ்யநமிதம்
லலாடே பர்தாரம் சரணகமலே தாடயதி தே |
சிராதந்த: சல்யம் தஹநக்ருதம் உந்மூலிதவதா
துலாகோடிக்வாணை: கிலிகிலிதம் ஈசாநரிபுணா || 86 ||

ஹிமாநீஹந்தவ்யம் ஹிமகிரிநிவாஸைகசதுரௌ
நிசாயாம் நித்ராணும் நிசி சரமபாகே ச விசதௌ |
வரம் லக்ஷ்மீபாத்ரம் ச்ரியமதி ஸ்ருஜந்தௌ ஸமயிநாம்
ஸ்ரோஜம் த்வத்பாதௌ ஜநநி ஜயதச்சித்ரமிஹ கிம் || 87 ||

பதம் தே கீர்த்தீநாம் ப்ரபதமபதம் தேவி விபதாம்
கதம் நீதம் ஸத்பி: கடிநகமடீகர்பர துலாம்
கதம் வா பாஹுப்யாம் உபயமநகாலே புரபிதா
யதாதாய ந்யஸ்தம் த்ருஷதி தயமாநேந மநஸா || 88 ||

நகைர் நாகஸ்த்ரீணாம் கரகமல ஸம்கோசசசிபி:
தருணாம் திவ்யாநாம் ஹஸத இவ தே சண்டி சரணௌ
பலாநி ஸ்வ: ஸ்தேப்ய: கிஸலய கராக்ரேண தததாம்
தரித்ரேப்யோ பத்ராம் ச்ரியம் அநிசமஹ்நாய தததௌ
|| 89 ||

ததாநே தீநேப்ய: ச்ரியமநிசமாசாநுசத்ருசீம்
அமந்தம் ஸௌந்தர்யப்ரகர மகரந்தம் விகிரதி |
தவாஸ்மிந் மந்தார ஸ்தபக ஸுபகே யாது சரணே
நிமஜ்ஜந் மஜ்ஜீவ: கரணசரண: ஷட்சரணதாம் || 90 ||

பதந்யாஸக்ரீடாபரிசயம் இவாரப்துமநஸ:
ஸ்கலந்தஸ்தே கேலம் பவநகலஹம்ஸா ந ஜஹதி |
அதஸ்தேஷாம் சிக்ஷாம் ஸுபகமணி மஞ்ஜீர ரணித
ச்சலாத் ஆசக்ஷாணம் சரணகமலம் சாருசரிதே || 91 ||

கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிண ஹரி ருத்ரேச்வர ப்ருத:
சிவ: ஸ்வச்ச ச்சாயா கடித கபட ப்ரச்சதபட: |
த்வதீயாநாம் பாஸாம் ப்ரதிபலந ராகாருணதயா
சரீரீ ச்ருங்காரோ ரஸ இவ த்ருசாம் தோக்தி குதுகம் || 92 ||

அராலா கேசேஷு ப்ரக்ருதிஸரலா மந்தஹஸிதே
சிரீஷாபா சித்தே த்ருஷதுபலசோபா குசதடே |
ப்ருசம் தந்வீ மத்யே ப்ருதுருரஸி ஜாரோஹவிஷயே
ஜகத்த்ராதும் சம்போர்ஜயதி கருணா காசிதருணா || 93 ||

கலங்க: கஸ்தூரி ரஜகரபிம்பம் ஜலமயம்
கலாபி: கர்பூரைர்மரகதகரண்டம் நிபிடிதம் |
அதஸ்த்வத்போகேந ப்ரதிதிநமிதம் ரிக்தகுஹரம்
விதிர்பூயோ பூயோ நிபிடயதி நூநம் தவ க்ருதே || 94 ||

புராராதேரந்த: புரமஸி ததஸ்த்வச்சரணயோ:
ஸபர்யாமர்யாதா தரலகரணாநாம் அஸுலபா |
ததா ஹ்யேதே நீதா: சதமகமுகா: ஸித்திமதுலாம்
தவ த்வாரோபாந்தஸ்திதிபி: அணிமாத்யாபி: அமரா:
|| 95 ||

கலத்ரம் வைதாத்ரம் கதிகதி பஜந்தே ந கவய :
ச்ரியோ தேவ்யா : கோ வா ந பவதி பதி : கைரபி தனை : |
மஹாதேவம் ஹித்வந தவ ஸதி ஸதீநாமசரமே
குசாப்யாமாஸங்க : குரவகதரோரபி அஸுலப : || 96 ||

கிராமாஹுர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீம் ஆகமவிதோ
ஹரே: பத்நீம் பத்மாம் ஹரஸஹசரீம் அத்ரிதநயாம் |
துரீயா காபி த்வம் துரதிகம நிஸ்ஸீம மஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷி || 97 ||

கதா காலே மாத: கதய கலித ஆலக்தகரஸம்
பிபேயம் வித்யார்த்தீ தவ சரணநிர்ணேஜந ஜலம் |
ப்ரக்ருத்யா மூகாநாமபி ச கவிதாகாரணதயா
கதா தத்தே வாணீ முககமலதாம்பூலரஸதாம் || 98 ||

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரிஸபத்நோ விஹரதே
ரதே: பாதிவ்ரதயம் சிதிலயதி ரம்யேண வபுஷா |
சிரம் ஜீவந்நேவ க்ஷபிதபசுபாசவ்யதிகர :
பராநந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத்பஜநவாந் || 99 ||

ப்ரதீபஜ்வாலாபிர் திவஸகரநீராஜநவிதி :
ஸுதாஸூதேச்சந்த்ரோபலஜலலவைரர்க்யரசநா |
ஸ்வகீயைரம்போபி: ஸலிலநிதிஸௌஹித்யகரணம்
த்வதீயாபிர்வாக்பிஸ்தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம் || 100 ||

---

# முடிவுரை

ஸௌந்தர்ய லஹரி ஸ்லோகம் ஆதிசங்கரரால் இயற்றப் பட்டதால் இந்த ஸ்லோகத்தைப் பாராயணம் செய்தால் அம்பிகையின் அருள் நமக்கு நிச்சயம் கிடைக்கும். இந்த ஸ்லோகங்களை குருமுகமாக ஸ்ரீவித்யை ஜபம் எடுத்துக்கொண்டு பாராயணம் செய்வதால் விசேஷமான பலன் கிடைக்கும். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வித குறைகள் இருக்கும் அவ ரவர்கள் அவரவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி ஸௌந்தர்ய லஹரி ஸ்லோகங்களை பாராயணம் செய்து பலன் அடைய வேண்டும் என்பதற்காகவே இந்தப் புத்தகத்தை எழுதி னேன். இந்த ஸ்லோகங்களை பாராயணம் செய்து நிறைய பேர் பலன் அடைந்தால் எனக்கு இந்தப் புத்தகத்தை எழுதியதன் பலன் பரிபூரணமாகக் கிடைக்கும்,

**அம்பிகையின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்,**

**ஓம் தத் ஸத்.**

# பாராயண தத்துவம்

உபநிஷத், கீதை, ருத்ரம், புருஷ ஸூக்தம், விஷ்ணு சகஸ்ர நாமம், லலிதா சகஸ்ரநாமம், ஸௌந்தர்ய லஹரி இவைகளை தினந்தோறும் பாராயணம் செய்ய வேண்டும் என்பது பெரியோர்கள் கண்ட முறை.

ஸ்வசா கோப நிஷத் கீதா
விஷ்ணோர் நாம ஸகஸ்ரநம்
ருத்ரஞ்ச பௌருஷம் ஸூக்தம்
நித்ய மாவர்த்த யேத்புத :

மற்றவைகளைப் பாராயணம் செய்யாவிட்டாலும் விஷ்ணு ஸகஸ்ரநாமத்தை மட்டுமாவது மறவாமல் பாராயணம் செய்ய வேண்டும்.

இப்பாராயண முறையை கூட்டு வழிபாடாகச் செய்வது மிகச் சிறந்தது.

பர, அயனம் என்றால் சிறந்த வழி என அர்த்தம்.

உணவு உடம்போடு உடம்பாக மாறிவிடுவதுதான் ஊட்டத்தின் அறிகுறி. இதற்கு முதலில் உண்ட உணவு ஜீரணிக்கப்பட வேண்டும். அடுத்தபடி ஜீரணிக்கப்பட்ட உணவு ரத்தமாக மாறி உடம்பெங்கும் பாய்ந்து பரவ வேண்டும். பின்னர் ஏற்படுவதுதான் உணவு உடம்பாக மாறும் நிலை. இத்தகைய மூன்று நிலைகளையும் பாராயண முறையில் காணலாம்.

5 நிமிஷம் படித்தால் குறைந்தது 15 நிமிஷம் சிந்திக்க வேண்டும். கற்பதும் கேட்பதும் சிந்தனையால் ஜீரணமாகி தியானித்தால் ஜீவ ஓட்டமும் ஊட்டமாகி நம்முடன் ஒட்டிக் கலந்து ஒன்றுபட வேண்டும். இத்தகைய பாராயண நிலை தான் உள்ளத்துடனும் உடம்புடனும் ஒன்றுபட்டு வாழ்வுடன் வாழ்வாக இரண்டறக் கலப்பதாகும்.

திருமழிசை ஆழ்வாரும் ஒரு வகைப் பாராயண முறையில் யோக நிலை சித்திக்கப் பெற்றார். இதற்கு ஆதாரம் அவர் வாக்கிலேயே உள்ளது.

வாசித்தும், கேட்டும் வணங்கி வழிபட்டும் பூஜித்தும் போக்கினேன் போது.

பாராயணம் நாவினால் மட்டும் செய்யப்படவில்லை. உயிரும் பாராயணத்தில் பங்குபெற வேண்டும். பூவலஸ்ரீ

□ யோக மார்க்கத்தை நாடுபவர்களுக்கு

'குண்டலினி சக்தி' ரூ. 24 00

□ யாத்ரீகர்களுக்கு

'காசி கங்கா சேது யாத்திரை' ரூ. 8 00

○ பாராயணம் செய்ய விரும்புபவர்களுக்கு

'பாராயண மாலா' ரூ. 10 00

○ 60 வயதான மணிவிழா கொண்டாடுபவர்களுக்கு

'வாழ்க்கைத் தத்துவங்கள்' ரூ. 15 00

**ஆன்மீக விஷயங்களையும் தத்துவங்களையும்**
**தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு**

**பிரதிபாவின் எல்லாப் புத்தகங்களும்**

புத்தகப் பட்டியலுக்கு எழுதவும்

**பிரதிபா பிரசுரம்**

3?, ஆடம் தெரு, சென்னை-600 004.

---

## நான்கு நவராத்திரிகள்

லலிதாம்பிகையின் நவராத்திரி வசந்த நவராத்திரி பங்குனி மாத அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி நடைபெறுவது.

லலிதாவின் மந்திரியான ராஜமாதங்கியின் நவராத்திரி மாசி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி நடைபெறுவது.

லலிதாவின் சேனாதிபதியான மஹாவாராஹியின் நவராத்திரி ஆடி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் தொடங்கி நடைபெறுவது.

புரட்டாசி மாதம் நடைபெறும் சாரதா நவராத்திரி, துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி மூவருக்கும் கொண்டாடப் படுவது.

பிரதிபாவின் திரிபுரை பெருவிழாவில்
வெளியிடப்பட்ட
ஞானக் கருவூலம்

# ஸ்ரீவித்யா மணிமலர்

- அன்று முதல் இன்று வரை ஸ்ரீவித்யை வளர்ந்த வரலாறு அடங்கியது.
- மஹான்களும், ஸ்ரீ வித்யா உபாஸகர்களும் எழுதிய மிக அருமையான கட்டுரைகள் கொண்டது.
- ஸ்ரீவித்யை வளர்த்த மண்டலிகளின் விவரங்கள் அடங்கியுள்ளது.
- நஜன் அவர்களின் அரிய முயற்சியினாலும், கடுமையான உழைப்பினாலும் உருவாக்கப்பட்ட நூல்.
- ஷண்மத தெய்வங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கியது.
- குரு தத்துவத்தை நன்கு வெளிப்படுத்துகின்ற ஒப்பற்ற நூல்.

---

விவரங்களுக்கு :

## பிரதிபா பிரசுரம்

39, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.